# தாமரை வாசகம்

முதற் புத்தகம்

புலவர் மா. இராசமாணிக்கனார்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
13 OCT 1949
MADRAS



...பப்ளிஷிங் கம்பெனி
...கொண்டி செட்டித்தெரு, சென்...

TB
031(9)
N49
87022

# தாமரை வாசகம்

## முதற் புத்தகம்

[1949-ஆம் வருடத்திய புதிய பாடத்திட்டபபடி தயாரிக்கப்பெற்றது.]

புலவர்—மா. இராசமாணிக்கனார், M.O.L., L.T.
தமிழ் விரிவுரையாளர்,
விவேகானந்தர் கல்லூரி, சென்னை.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
13 OCT 1949
MADRAS

தி நேஷனல் பப்ளிஷிங் கம்பெனி,
6, கொண்டி செட்டித் தெரு, சென்னை—1.

பதிப்புரிமை] 1949 [விலை அணா 14.

முதற் பதிப்பு: 1948
இரண்டாம் பதிப்பு: 1949
மூன்றாம் பதிப்பு: 1949

87022

*(Approved by the Text-Book Committee, for class use Vide page of supplement to part I-B of Fort St. George Gazette dated 12th July 1949)*

TB
O31(9)
N49

Printed at the Rajan Electric Press, Madras-1.

# முகவுரை

தாமரை வாசகம் என்னும் பெயருடன் வெளிவரும் இந்நூல் வரிசை, அரசாங்கத்தார் அண்மையில் வெளியிட்ட புதிய பாட இயல் (Syllabus)படி எழுதப் பெற்றதாகும்.

உரிமை பெற்ற நம் நாட்டு மாணவர் முன்னேற்றத் துறைகளில் முற்போக்கு அடையவேண்டும் என்னும் நன்னோக்கம் கொண்டு பிறப்பிக்கப்பட்ட புதிய பாட இயலின் ஒவ்வொரு பகுதியும் இதன்கண் ஒவ்வொரு பாடமாக இடம் பெற்றுள்ளது கவனிக்கத் தக்கது.

ஒவ்வொரு பாடத்திலும் மொழிவளர்ச்சிக்குரிய புதிய சொற்கள் இடத்துக்கேற்ப ஆளப்பட்டுள்ளன. அப்புதிய சொற்களையும் சொற்றொடர்களையும் வாக்கியங்களிற் பயன்படுத்தப் பயிற்சியும் பிறவகைப் பயிற்சிகளும் ஒவ்வொரு பாட இறுதியிலும் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு பாட இறுதியிலும் அருஞ்சொற்பொருள் அருமபதவுரை அளிக்கப்பட்டுள்ளது. செய்யுட் பகுதியில் ஆசிரியர் குறிப்பும், அரும்பதவுரையும் தரப்பட்டுள்ளன.

இந்நூலில் உள்ள தமிழ் நடை முதற் பார மாணவர்க்கு ஏற்ப அமைந்திருத்தல் கவனிக்கத்தக்கது. இந்நூலில் உள்ள ஒவ்வொரு பாடமும் முதல் பார மாணவரைப் படிக்கச் சொல்லிச் சோதிக்கப் பெற்றதாகும்.

இந்நூலில் ஏறத்தாழ 300 வரிகள் கொண்ட செய்யுட் பகுதி பாடமாக இருத்தல் வேண்டும் என்பது விதி. ஆயின் கற்பிக்கும் ஆசிரியர் மனநிலைக் கேற்பச் செய்யுட்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள வசதி இருக்குமாறு ஏறக்குறைய 400 வரிகள் இங்குத் தரப்பட்டுள்ளன.

இந்நூல் ஒரு தாமரை மலருக்கு ஒப்பாகும். இதன்கண் உள்ள ஒவ்வொருபாடமும் மலரின் தனித்தனி இதழாகும். தாமரை மலரின் அழகை அநுபவித்தல் போல மாணவர் உலகம் அறிவுக் களஞ்சியமாகவுள்ள இத்தாமரை வாசகத்தை அநுபவித்துப் பயன்பெறத் தமிழ்த்தாய் அருள் புரிவாளாக!

விவேகானந்தர் கல்லூரி,
சென்னை.

மா. இராசமாணிக்கம்

# உள்ளுறை

## உரைநடை

| என் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | நமது நாட்டு முதல் அமைச்சர் | ... | 1 |
| 2. | குதிரை முட்டை | ... | 5 |
| 3. | ஜினேவா வீரர் | ... | 9 |
| 4. | பயிர்த்தொழில் | ... | 14 |
| 5. | எக்ஸ்-ரே | ... | 19 |
| 6. | இராமக் கைத்தொழில்கள் | ... | 23 |
| 7. | எனது இன்பச் செலவு | ... | 28 |
| 8. | மான் அரசு | ... | 32 |
| 9 | மாமல்லபுரத்துச் சிற்பங்கள் | ... | 36 |
| 10 | இந்தியாவுக்கு வழிகண்ட வீரர் | ... | 41 |
| 11. | புலவர் குணநலன்கள் | ... | 45 |
| 12. | ஈழ நாடு | ... | 49 |
| 13. | உரையாடல் | ... | 54 |
| 14. | பதுமை பகர்ந்த கதை | ... | 58 |
| 15. | டேவிட் லிவிங்ஸ்டன் | ... | 62 |
| 16. | பாண்டியன் நெடுஞ்செழியன் | ... | 68 |
| 17. | மாணவர் குறிக்கோள் | ... | 72 |
| 18. | அரசு துறந்த இளங்கோ (நாடகம்) | ... | 76 |

# செய்யுள்


| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| I. | தோத்திர மாலை | ... | 80 |
| II. | இயற்கை அழகு | | |
| | 1. அந்திப்பொழுது—பாரதியார் | ... | 81 |
| | 2. நிலா—பாரதிதாசன் | ... | 82 |
| | 3. ஆறு—தேசிக விநாயகம் பிள்ளை | ... | 83 |
| III. | நீதிப் பகுதி | | |
| | 1. சதகத் திரட்டு | ... | 84 |
| | 2. நீதி வெண்பா | ... | 86 |
| | 3. நன்னெறி | ... | 88 |
| | 4. திருக்குறள் | ... | 90 |
| IV. | தொடர்நிலைச் செய்யுள் | | |
| | 1. தேசிங்கும் குதிரையும் | ... | 92 |
| | 2. அல்லிராணி வேட்டையாடச் செல்லல் | | 93 |
| | 3. காகம் நாகத்தைக் கொல்வித்தது | ... | 94 |
| | 4. பேராசை பெருநஷ்டம் | ... | 95 |
| | 5. குரங்கும் குருவியும் | ... | 96 |
| V. | பலசுவைப் பாடல்கள் | | |
| | 1. பனைமரம் (கைத்தொழில் பாட்டு) | ... | 97 |
| | 2. தனிப்பாடல்கள் | ... | 98 |
| | 3. தமிழ் நாடு | ... | 100 |

யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவ தெங்கும் காணோம் ;
பாமரராய் விலங்குகளாய் உலகனைத்தும்
இகழ்ச்சிசொலப் பான்மை கெட்டு
நாமமது தமிழரெனக் கொண்டிங்கு
வாழ்ந்திடுதல் நன்றோ? சொல்லீர் :
தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்.

—பாரதியார்



பண்டித மோதிலாலும், ஜவாஹரும்

[*By courtesy of Padma Publications Ltd.*]

# தாமரை வாசகம்

## 1. நமது நாட்டு முதல் அமைச்சர்

1. நமது தாய் நாடாகிய இந்தியா இப்பொழுது உரிமை பெற்ற நாடாக விளங்குகின்றதை நீங்கள் அறிவீர்கள். உரிமை பெற்ற இந்நாட்டை இந்திய அரசாங்கம் ஆண்டுவருகின்றது. அவ்வரசாங்க முதல் அமைச்சராக இருக்கின்றவரே பண்டித ஜவாஹர்லால் நெஹ்ரு என்பவர். அவர் ஏறக்குறைய முப்பது ஆண்டுகளாக இந்திய விடுதலைப்போரில் ஈடுபட்டவர்; அப்போராட்டத்தினால் தம் இன்ப வாழ்க்கையைத் துறந்தவர்; பலமுறை சிறை வாழ்க்கை ஏற்றவர்; செல்வக் குடும்பத்திற் பிறந்தும் நாட்டு உரிமைப்போரில் சிறுமை அடைந்தவர். இந்திய நாடு நன்னிலை அடையவேண்டும் என்பது ஒன்றே அவரது வாழ்க்கைக் குறிக்கோள். அப்பெரியார் இன்றும் அதற்காகவே பாடுபட்டுவருகின்றார். அவரது வரலாறு உங்கட்கு உணர்ச்சியையும் ஊக்கத்தையும் அளிக்கவல்லது.

2. ஜவாஹர்லால் காஷ்மீர் பிராமண வகுப்பைச் சேர்ந்தவர். காஷ்மீர் பிராமணர் வடமொழியிற் சிறந்த புலமை பெற்றவர். அவருள் இராஜ்கால் என்பவர் ஒருவர். அவர் வடமொழிப் புலவர் ஆதலின் 'பண்டித இராஜ்கால்' எனப்பட்டார். அவர் ஏறத்தாழ இருநூறு ஆண்டுகட்கு முன் வாழ்ந்தவர். அவர் டெல்ஹியை ஆண்ட முஸ்லிம் அரசர் விருப்பப்படி டெல்ஹியிற் குடியேறினர். அவரது இல்லம் ஒரு நஹாரின் (கால்வாயின்) கரையில் இருந்தது. அதனால் 'கால்வாய்க்கு உரியவர்' என்னும் பொருளில் டெல்ஹி மக்கள் அவரை 'நெஹ்ரு' என்று அழைத்தனர். அதுமுதல் அவர் மரபினர்க்கு 'நெஹ்ரு' என்னும் பட்டம் நிலைத்துவிட்டது. பண்டிதரது பரம்பரையினர் ஆதலின் அவர் மரபினர் அனைவரும் 'பண்டிதர்' என்றும் அழைக்கப்படலாயினர். ஜவாஹர்லால் பண்டித இராஜ்கால்

நெஹ்ருவின் வழிவந்தவர் ஆதலின், பண்டித ஜவாஹர்லால் நெஹ்ரு என்று அழைக்கப்படுகின்றார்.

3. பண்டித-மோதிலால் நெஹ்ரு ஜவாஹர்லாலுக்குத் தந்தையார். அவர் அல்லாஹபாத் நகரத்தில் சிறந்த வழக்கறிஞராக இருந்தவர்; தம் தொழிலில் பெரும் பொருள் ஈட்டியவர்; 'ஆனந்த பவனம்' என்னும் அழகு மிக்க மாளிகையில் வாழ்ந்துவந்தவர். அவர் மனைவியார் பெயர் சொருப ராணி என்பது. அவ்வம்மையார் கணவர் கருத்தறிந்து நடந்து இல்லறத்தை நல்லறமாக நடத்திவந்தார். அவ்விருவருக்கும் ஜவாஹர்லால் என்னும் மகனாரும் விஜயலட்சுமி, கிருஷ்ணபாய் என்னும் மகளாரும் பிறந்தனர். இந்த விஜயலட்சுமி அம்மையாரே இன்று இந்திய நாட்டுத் தூதராக மாஸ்கோவில் இருப்பவர்.

4. ஜவாஹர்லால் இளமையிலிருந்தே சுறுசுறுப்பும் துடுக்குத்தனமும் மிகுந்தவர். அவர் பெற்றோரால் சீராட்டி வளர்க்கப்பட்டவர். அவர் ஆறு வயதிலிருந்தே பல நாட்டு வீரர் வரலாறுகளைக் கேட்டுவந்தவர். மோதிலாலிடம் குமாஸ்தாவாக இருந்த முஸ்லிம் ஒருவர் அவ்வரலாறுகளைக் கூறுவது வழக்கம். அவர் இந்திய வரலாற்றைப் பல கதைகள் மூலம் கூறிவந்தார். அக்கதைகள் ஜவாஹர் உள்ளத்தில் ஆழமாகப் பதிந்தன. "நமது தாய்நாடு நாகரிகத்திற் பழமையானது; வீரத்திற் சிறந்தது" என்று அவர் அடிக்கடி தமக்குள் எண்ணுவது வழக்கம். அர்ச்சுனன், கன்னன், கண்ணன் வரலாறுகளைத் தம் தாயாரிடம் ஜவாஹர் கேட்டுத் தெரிந்துகொண்டார்.

5. ஜவாஹர்லால் வீட்டிலேயே ஆசிரியரை வைத்துக் கல்வி கற்றார். ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம் முதலிய பாடங்களை ஐரோப்பியர் ஒருவர் கற்பித்தார். வடமொழியையும் ஹிந்தியையும் பண்டிதர் ஒருவர் கற்பித்து வந்தார். இங்ஙனம் அவர் தம் பதினைந்தாம் வயது (1904-ஆம் ஆண்டு) வரை வீட்டிற் கல்விகற்றார். மோதிலால் தம் தவமைந்தரை இங்கிலாந்தில் படிக்கவிட விரும்பி, 1905-இல் தம் குடும்பத்துடன் இங்கிலாந்து சென்றார்;

ஜவாஹர்லாலை ஒரு பள்ளியிற் சேர்த்து இந்தியாவிற்கு மீண்டார்.

6. ஜவாஹர்லால் 1905 முதல் 1912 வரை இங்கிலாந்தில் கல்வி கற்றுப் பாரிஸ்டர் பட்டம் பெற்றார். அவர் இங்கிலாந்தில் இருந்தபொழுது பல நாட்டு அரசியல் நூல்களை நன்கு படித்தறிந்தார்; இந்தியாவில் எழுந்த உரிமைப் போராட்ட விவரங்களைச் செய்தித் தாள்கள் வாயிலாக அறிந்து உணர்ச்சிகொண்டார்; இந்திய நலனுக்காக இங்கிலாந்துக்குச் சென்று சொற்பொழிவு செய்த கோபாலகிருஷ்ண கோகலே போன்ற பெரியார்களின் சொற்பொழிவுகளில் ஈடுபட்டார்; 'நாட்டு விடுதலைக்காக நானும் போராடுவேன்' என்று தமக்குள் முடிவுசெய்து கொண்டார்.

7. ஜவாஹர்லால் 1912-இல் இந்தியாவை அடைந்தார்; அல்லாஹபாத் உயர்நீதி மன்றத்தில் வழக்கறிஞராகத் தம்மைப் பதிவு செய்துகொண்டார். எனினும், துடிதுடிப்புடைய அவருக்கு அத்தொழிலில் மனம் செல்லவில்லை. அவர் உள்ளம் அரசியல் போராட்டத்தையே நாடியது. அதனால் அவர் காங்கிரஸ் கட்சியிற் சேர்ந்தார்; 1916-இல் காந்தியடிகளை முதன் முதல் சந்தித்தார். காந்தியிடம் இரும்பு இழுக்கப்படுதல்போல் அவர் உள்ளம் காந்தியடிகள் கொள்கைகளில் ஈடுபட்டது. அவர் அன்று முதல் அடிகளின் அரசியல் மாணவர் ஆனார்.

8. ஜவாஹர்லால் 1915-இல் திருமணம் செய்துகொண்டார். அவர் மனைவியார் பெயர் கமலா நேஹ்ரு என்பது. அந்த அம்மையார் கணவரைப் போலவே விரிந்த நோக்கமும் பரந்த சிந்தையும் உடையவர்; கணவரைப் போலவே உரிமைப் போரில் ஆவல் கொண்டவர். அவர்களது இன்ப வாழ்வினை இன்புறுத்தப் பிறந்தவரே இந்திரா நேஹ்ரு என்ற மகளார் ஆவர்.

9. காந்தியடிகள் காங்கிரஸ் இயக்கத்தில் தீவிரமாக ஈடுபட்டுச் சிறை சென்றார். அவர் சிறைசென்றதை அடுத்து நாட்டில் கொந்தளிப்பு ஏற்பட்டது. ஆங்கில அரசாங்கத்தார் அடக்கு முறைகள் மிகுதிப்பட்டன. ஆட்சியாளர் செய்த கொடுமைகளைக் கண்ட பிறகே, மனம் கொதித்து, மோதிலால் காங்கிரஸ் இயக்கத்திற் சேர்ந்தார்; தம் தொழிலை விட்டார்; சிறை சென்றார். ஜவாஹர்லால், கமலா நேஹ்ரு முதலியோரும் சிறைப்பட்டனர். ஜவாஹர்லால் பல முறை சிறை சென்றார். அவரது வாலிபப் பரு

வத்தின் பெரும்பகுதி சிறையிலும் உரிமைப் போரிலுமே கழிந்தது. சிறை வாழ்வே மோதிலாலேயும் கமலாவையும் கொன்றது என்னலாம். தாயார் சொரூபராணியும் உரிமைப் போரில் தடியடிபட்டார்; பின்னர் நோயுற்றுக் காலமானர்.

10. ஜவாஹர்லால் குடும்பத்தினர் செய்த தியாகம் அளவிடற்கு அரியது. அவரது வாழ்வே தியாக வாழ்வு என்னலாம். அவர் நோக்கம் ஒன்றே ஆகும்; அஃதாவது 'என் தாய் நாடாகிய இந்தியா உரிமைபெற்று உயர் நிலையை அடைதல் வேண்டும்' என்பது. அதனால் அவர் இன்றளவும் நாட்டு நலனுக்காகவே பாடுபட்டுவருகின்றார். காந்தியடிகட்கு அவரிடமே மிகுந்த நம்பிக்கை இருந்தது. அடிகட்குப் பின்னர் இந்திய மக்கள் ஜவாஹர்லாலேயே பெரிதும் நம்பியும் மதித்தும் வருகின்றனர். அவர் தந்நலமற்றவர்; தியாக வீரர். அதனால் கோடிக் கணக்கான இந்திய மக்களது நம்பிக்கைக்கு உரியவராக இருந்துவருகிறார்; உரிமைபெற்ற இந்திய அரசாங்க முதல் அமைச்சராக இருக்கும் பேறு பெற்றுள்ளார்.

### அருஞ்சொற்பொருள்

உரிமை—சுதந்திரம். குறிக்கோள்—உயர்ந்த இலட்சியம். அல்லாஹபாத் இல்லாஹபாத் என்றும் பெயர் பெறும்; 'கடவுளுக்குரிய நகரம்' என்பது பொருள்.

### பயிற்சி

I. விடை தருக:—

1. ஜவாஹர்லாலுக்குப் 'பண்டிதர்' பட்டமும் 'நெஹ்ரு' என்னும் பட்டமும் எவ்வாறு கிடைத்தன?
2. அவர் மேனட்டில் பெற்ற பட்டம் யாது? அங்கு அவர் அடைந்த அநுபவம் யாது?
3. 'காந்தத்தினிடம் இரும்பு இழுக்கப்படுதல் போல' — இந்த உவமை எதனை விளக்க வந்தது?
4. ஜவாஹர் செய்த தியாகம் யாது?
5. அவரது ஒரே நோக்கம் யாது?

II. வாக்கியங்களில் அமைக்க:—

தடிதுடிப்பு, உரிமைப்போர், விரிந்த நோக்கம், பரந்த சிந்தை, கொந்தளிப்பு, சொற்பொழிவு.

III. கொந்தளிப்பு × அமைதி — இவை எதிர்ச் சொற்கள்.

விருப்பம், இல்லறம், சுறுசுறுப்பு, பழைமை, — இவற்றிற்கு உரிய எதிர்ச்சொற்களைக் கூறுக.

IV. துடிதுடிப்பு — இது சலசலப்பு, கலகலப்பு என்றாற்போலப் பிரிக்க முடியாத இரட்டைச் சொல்லாக வருதலால் இரட்டைக் கிளவி (இரட்டைச் சொல்) எனப்படும். இதுபோல நான்கு கூறுக.

# 2. குதிரை முட்டை

[பரமார்த்த குரு கதை]

1. பரமார்த்த குருவினிடம் மட்டி, மடையன், மூடன், மூர்க்கன், மிலேச்சன் எனப்பட்ட சீடர்கள் இருந்தனர். அவர்கள் தங்கள் ஆசிரியர்க்கு ஒரு குதிரை வாங்கித்தர விரும்பினர். ஆசிரியர்க்குக் குதிரைமீது சவாரி செய்யவேண்டும் என்ற விருப்பம் இருந்தது. ஆயினும் குதிரை வாங்கப் பெருந் தொகை அவரிடம் இல்லை; ஆதலின், அவர் வாளா இருந்தனர்.

2. குருவினிடம் கறவைப் பசு ஒன்று இருந்தது. மேயச் சென்ற அது ஒரு நாள் திரும்பிவரவில்லை. அதனால் ஆசிரியரும் மாணவரும் ஊர் முழுவதும் தேடினர். பசு அகப்படவில்லை! மறுநாள் மட்டி என்ற மாணவன் பசுவைத் தேடிப் பிடிக்க அயலூர்கட்குச் சென்றான்; பல ஊர்களில் அலைந்து திரிந்தான்; மூன்று நாட்களுக்குப் பிறகு ஆசிரியரிடம் திரும்பி வந்து ஆசிரியரைப் பார்த்து, "ஐயனே, பசு கிடைக்கவில்லை. ஆயினும் அது பெரிதன்று. குறைந்த விலையில் நமக்குக் குதிரை அகப்பட்டது" என்று மகிழ்ச்சியோடு கூறினான்.

3. "அஃது எப்படி?" என்று ஆசிரியர் ஆவலோடு கேட்டார். மட்டி, "நான் ஊருக்கு ஊர், தோட்டத்திற்குத் தோட்டம், கொல்லைக்குக் கொல்லை சென்று நமது பசுவைத் தேடினேன். அவ்வமயம் தங்கள் அருட் சிறப்பாலும் தங்கள் மாணவர் நல்வினை வசத்தாலும் இறைவனது இனிய அருளாலும் ஓர் ஏரி அருகில் கோளிகைக் குதிரைகள் சில மேய்தலைக் கண்டேன்; அவற்றின் அருகிற் சென்றேன்; அவ்வழியில் நான் முன்னர்க் காணாதவையும் இருகைகளாலும் தழுவப்பட முடியாதவையுமாக இருந்த குதிரை முட்டைகள் பலவற்றைக் கண்டேன்; 'இவை குதிரை முட்டைகளா?' என்று அவ்வழி வந்த ஒருவனைக் கேட்டேன். அவன், 'ஆம். இவை குதிரை முட்டைகளே; ஒவ்வொன்றின் விலை நான்கு அல்லது ஐந்து பொன் இருக்கலாம்' என்றான். நாம் ஒரு குதிரை முட்டையை வாங்கி வருதல் நல்லது," என்றான்.

4. மட்டியின் பேச்சைக் கேட்ட ஆசிரியரும் மாணவரும் மகிழ்ச்சி அடைந்தனர்; மட்டியின் கையில் ஐந்து பொன்னைக் கொடுத்து அவனுக்குத் துணையாக மடையன் என்பவனையும் அனுப்பினர்.

5. அவர்கள் சென்ற பிறகு ஆசிரியர் எஞ்சியிருந்த மாணவரை நோக்கி, "என் அரிய மாணவர்களே, சென்றவர் இருவரும் குதிரை முட்டையை வாங்கிக்கொண்டு வருவர். அதனை அடைகாப்பவர் யாவர்?" என்ற கேள்வியைக் கேட்டார். உடனே மூடன், "ஐயனே, நான் நாள்தோறும் ஆற்றுக்குச் சென்று நீரைக் கொண்டுவரவும், காட்டுக்குச் சென்று விறகு எடுத்து வரவுமே நேரம் போதவில்லை. ஆதலின் நான் எங்ஙனம் அடைகாத்தல் இயலும்?" என்றான். மூர்க்கன், "ஆசிரியரே, எனக்கு மடைத்தொழில் சரியாக இருக்கிறது; சிறிது நேரமேனும் ஓய்வு கிடைப்பதில்லையே! நான் எவ்வாறு அடைகாக்க முடியும்?" என்றான். மிலேச்சன், "குருவே, விடியுமுன் எழுந்து ஆற்றுக்குச் சென்று நீராடிப் பூசைக்குரியனவற்றைத் தயாரிப்பதே என் தொழிலாக இருப்பதைத் தாங்களே அறிவீர்கள். இந்நிலையில் அடைகாக்க எனக்கு நேரமில்லையே?" என்று கூறி வருந்தினன்.

6. ஆசிரியர், "நீங்கள் கூறியது உண்மையே. முட்டை வாங்கச் சென்ற இருவர்க்கும் ஓய்வு கிடைப்பது அருமை. நான் ஒருவனே வேலை இன்றி இருப்பவன். ஆதலால் நான் அம்முட்டையை மடியில் வைத்துக்கொண்டு கையால் தழுவிப் போர்வையால் மூடி மார்போடு அணைத்து அன்போடு பேணி அடைகாப்பேன்" என்றார். மாணவர் அதுகேட்டு மகிழ்ச்சி அடைந்தனர். இது நிற்க.

7. குதிரை முட்டை வாங்கச்சென்ற மட்டியும் மடையனும் முன்குறித்த ஏரியருகிற் சென்றனர்; அங்குக் காய்த்துக் கிடந்த சாம்பல் பூசனிக்காய்களைக் கண்டனர்; அவற்றிற்கு உரியவனை உடியானவனைச் சந்தித்து "அப்பா, இக்குதிரை முட்டைகளுள் ஒன்றை எங்கட்கு அன்பு கூர்ந்து விலைக்குத் தரவேண்டும்" என்று பணிவு

தோன்ற வேண்டினர். குடியானவன் அவர்களது அறிவீனத்தை உணர்ந்து, "இவை உயர் சாதிக் குதிரை முட்டைகள்; இவை விலை மிக்கவை" என்றான். உடனே இருவரும், "இவற்றின் மதிப்பை நாங்கள் அறிவோம். ஒன்றின் விலை ஐந்து பொன் என்பது எங்கட்குத் தெரியும்." என்றனர். குடியானவன், "நீங்கள் நல்லவர்களாகக் காணப்படுவதால் ஐந்து பொன்னுக்கு ஒரு முட்டையைத் தருவேன். உங்களுக்கு விருப்பமான ஒன்றை எடுத்துச் செல்லுக; இக்குறைந்த விலையை ஒருவரிடமும் கூறவேண்டா" என்றனன்.

8. மாணவர் இருவரும் ஐந்து பொன்னைக் கொடுத்துப் பெரிய பூசனிக்காய் ஒன்றைப் பெற்றனர். மட்டி அதனைத் தன் தலைமீது வைத்துக்கொள்ள, இருவரும் அம் முட்டையைக் குறைந்த விலைக்கு வாங்கியதாக எண்ணித் தங்கள் அறிவுடைமையைப் பாராட்டிப் பேசிக்கொண்டே ஓர் இடுக்கு வழியிற் சென்றனர். அப்பொழுது அவ்வழி



ஓரத்தில் சாய்ந்திருந்த ஒரு மரக் கொம்பு குறுக்கே பட்டது. உடனே மட்டியின் தலைமீது இருந்த காய் தவறிக் கீழே இருந்த அடர்ந்த புதரில் விழுந்தது. அஃது அப்புதரில் இருந்த கல்மீது தொப்பென்று விழுந்ததால் இரண்டாக உடைந்தது. அவ்வமயம் அப்புதரில் மறைந்திருந்த முயல் ஒன்று அதிர்ச்சியால் ஓடியது.

9. குதிரை முட்டை உடைந்ததையும் அவ்விடத்தி லிருந்து உடனே முயல் ஓடியதையும் கண்ட இருவரும், "முட்டைக்குள் இருந்த குதிரைக்குட்டி ஓடுகிறது" என்று சொல்லிக்கொண்டே, அதனைப் பிடிக்கப் பின்தொடர்ந்து ஓடினர்; காடும் செடியும் மேடும் பள்ளமும் கல்லும் கரடும் முள்ளும் முரடும் பாராமல் ஓடினர். அதனால் அவர்கள் உடைகள் கிழிந்தன; முட்கள் பட்ட கால்களில் குருதிப் பெருக்கம் ஏற்பட்டது; புதர்கட்குள் நுழைந்து ஓடியதனால் அவர்கள் உண்ணவில்லை; நீர் அருந்தவில்லை; களைத்துச் சலித்து மாலையில் தம் ஆசிரியரை அடைந்தனர்.

10. ஆசிரியரும் மாணவர் பிறரும் அவர்கட்கு வேண்டிய உபசாரங்களைச் செய்து களைப்பைப் போக்கினர். பிறகு மாணவர் இருவரும் நடந்ததை விளக்கமாக உரைத்து மனம் வருந்தினர். அதுகேட்ட ஆசிரியர், "அது நமக்குத் தேவை இல்லை. பிறந்தவுடனே இவ்வளவு கடுமையாக ஓட்டம் பிடித்தால், வளர்ந்து பெரியதானவுடன் அது பறந்துவிடுமே! தளர்ந்த வயதுடைய நான் அதன்மீது ஏறிச் சவாரி செய்ய இயலுமா? அஃது ஒழிந்ததே நல்லது" என்று கூறி மகிழ்ந்தார்.

### அரும்பொருள்

வாளா - ஒன்றும் பேசாமல் அல்லது செய்யாமல். அரிய - அருமையான. கோளிகைக் குதிரை - பெட்டைக் கழுதை. மடைத்தொழில் - சமையல் வேலை. தூய்மை - சுத்தம். மலர்க்கா - பூஞ்சோலை. பேணி - பாதுகாத்து. குருதி - இரத்தம்.

### பயிற்சி

I. விடை கூறுக:—

1. ஆசிரியர் பெயர் யாது? மாணவர் பெயர்கள் யாவை?
2. மட்டி எவற்றைக் குதிரைகளாகக் கருதினன்? எவற்றைக் குதிரை முட்டைகள் என்று நினைத்தான்?
3. குதிரை முட்டைகளைக் கண்டதை அவன் எங்ஙனம் பாராட்டிக் கூறினன்?
4. ஆசிரியரும் மாணவரும் அடைகாத்தலைப்பற்றி என்ன பேசிக் கொண்டனர்?
5. குதிரை வாங்கச் சென்றவர்க்கும் குடியானவனுக்கும் நடந்த உரையாடல் யாது?
6. குதிரைக் குட்டி ஓடிவிட்டதைக் கேட்ட ஆசிரியர் யாது கூறி மகிழ்ந்தார்?

II. பாடத்தின் ஒவ்வொரு பிரிவையும் படித்து ஏற்ற தலைப்புத் தருக.

III. வாக்கியங்களில் அமைக்க:—பணிவு தோன்ற, அறிவீனம், அதிர்ச்சி, நல்வினைவசம், அறிவுடைமை.

IV. எதிர்ச்சொல் கூறுக:—நல்வினை, விளக்கம், தூய்மை.

# 3. ஜினேவா வீரர்

1. கொலம்பஸ் இத்தாலி நாட்டு ஜினேவா நகரத்தைச் சேர்ந்தவர். அவர் புதிய நாடுகளைக் கண்டறிய விரும்பினர்; மாலுமியாகப் பயிற்சி பெற்றுர்; தமது கருத்தைச் செல்வர் பலரிடம் கூறிப் பொருள் உதவி வேண்டினர். அவர் முயற்சி பயன் அளிக்கவில்லை. இறுதியில் ஸ்பெயின் நாட்டு அரசியாராகிய இஸபெல்லா என்பவரது உதவியைப் பெற்றுர்.

2. 14 2-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் மூன்ரும் தேதி காலையில் ஸ்பெயினில் உள்ள 'பலாஸ்' என்னும் துறை முகத்தை விட்டு மூன்று கப்பல்கள் புறப்பட்டன. அவற்றில் நூற்றிருபது பிரயாணிகள் இருந்தனர். கரையில் நின்று பிரயாணிகளை வழியனுப்பிய மக்கள், "இனி இவர்கள் திரும்பி வருதல் அருமை" என்று பேசிக்கொண்டனர். கப்பலிற் சென்ற பிரயாணிகள் கப்பல்கள் சிறிது தூரம் சென்ற பிறகு, "நாம் நமது நாட்டிற்குத் திரும்புவோமோ, அல்லது கடலுக்கு இரையாவோமோ!" என்று கவலை கொண்டனர்.

3. கப்பல்கள் ஏறக்குறைய ஒரு மாதம் கடலிற் சென்றன. அதற்கு அப்பால் அவை சென்ற வழி அதுகாறும் வேறு எக்கப்பலும் செல்லாததாகும். அதனால் பிரயாணிகள், "இனி என்ன நேருமோ!" என்று கலக்கம் கொண்டனர். கொலம்பஸ் அவர்கட்கு ஆறுதல் சொல்லி ஊக்கப்படுத்தினர். கப்பல்கள் சென்றுகொண்டே இருந்தன. சில நாட்களுக்குப் பிறகு, கடலில் முன்னர் முழுகிப்போன கப்பலின் பாய்மரம் மிதந்துகொண்டிருந்தது. அதனைக் கண்ட பிரயாணிகள் அலறினர்கள்; நம் கப்பல்களும் கடலுக்கு இரையாகுமோ!" என்று அஞ்சினர்கள்.

4. செப்டெம்பர் மாதம் இருபத்தைந்தாம் நாள் புயல் காற்று இல்லாதிருந்தும் கடல்நீர் மிகவும் உயரமாக எழுந்தெழுந்து அடங்கிக்கொண்டிருந்தது. மிக்க தூரத்தில் கடும்புயல் அடித்ததனல் கொந்தளிப்பு ஏற்பட்டிருத்தல் வேண்டும் என்று கொலம்பஸ் பிரயாணிகட்குக் கூறி, அவர்களது அச்சத்தை அடக்கினர். எனினும் நாட்கள்

பல ஆகியும் நிலம் எதிர்ப்படாத காரணத்தால் பிரயாணி கள் மிக்க கவலையும் அச்சமும் கொண்டனர்; தம் நாட்டுக்குத் திரும்பலாம் என்று கொலம்பஸை வற்புறுத் தினர். அவர் புன்னகைகொண்டு, "கடவுளை நம்புங்கள். நாம் நமது முயற்சியில் வெற்றி பெறுவோம்", என்றார் அவர் நாடு திரும்பார் என்பதை யறிந்த பிரயாணிகள் அவரைத் தூக்கிக் கடலில் எறிந்துவிட்டுத் திரும்பலாம் என்று யோசித்தனர். அதனை அறிந்த கொலம்பஸ் ஒவ்வொரு பிரயாணியையும் தனியே சந்தித்து ஆறுதல் கூறினர்; "ஏறத்தாழ இரண்டாயிரம் மைல் கப்பற்



ஜினேவா வீரர்

பிரயாணம் செய்து வந்திருக்கும் நாம் வெறுங்கையுடன் நாட்டுக்குத் திரும்புதல் நல்லதா? நீங்களே எண்ணிப் பாருங் கள்' என்றார். அவர்கள் வாளா இருந்தனர்.

5. கப்பல்கள் வேகமாகச் சென்றுகொண்டிருந்தன. கடற்பறவைகள் கப்பல்கட்கு மேல் வானிற் பறந்துகொண்

டிருந்தன. பறக்கும் மீன்கள் சில கப்பல்களில் வந்து வீழ்ந்தன. தரை வாழ்பறவைகள் சில கடலில் பறந்தன. இப் புதிய காட்சிகள் பிரயாணிகள் கலக்கத்தைக் குறைத்தன. அவர்கள் அன்று ஆறுதல் அடைந்தனர். கப்பல்கள் மேலும் சென்றுகொண்டே இருந்தன. ஆயின், கண்களுக்கு எட்டிய தூரம்வரை தரை காணப்படவில்லை. அதனல் பிரயாணிகள் பெரிதும் அஞ்சினர்; "நாம் எங்கே செல்கிருேம் என்பது நமக்கே தெரியவில்லை. ஏறக்குறைய இரண்டு மாதகாலம் பிரயாணம் செய்தும் தரை எதிர்ப்படவில்லையே!" என்று மனம் கலங்கிப் பேசினர். கொலம்பஸ், "நண்பர்களே, சிறிது பொறுத்திருங்கள். நாம் நமது முயற்சியில் வெற்றி பெறுவோம்" என்ருர்.

6. அவர் இதனைக் கூறிய மறுநாள் தரை அண்மையில் இருக்கிறது என்பதை உணர்த்தும் சான்றுகள் கிடைத்தன. பெரும்பாலும் கற்பாறைகளில்மட்டும் வாழக்கூடிய மீன்களும், ஆற்றுப்போக்கில் வளரக்கூடிய சில புற்பூடுகளும் கடல் நீரில் காணப்பட்டன. அவற்றைப் பார்த்த பிரயாணிகள் தரை அண்மையில் இருப்பதாக எண்ணி ஆறுதல் அடைந்தனர்; ஒவ்வொருவரும் தாமே தரையை முதலிற் கண்டு, அதனை மற்றவர்க்குக் காட்ட வேண்டும் என்னும் ஆவலால் கப்பல்கள் சென்ற திசையைக் கூர்ந்து கவனித்துவந்தனர். காற்று அமைதியாக வீசிக் கொண்டிருந்தது. கதிரவன் மறைய, எங்கும் இருள் சூழ்ந்தது. ஆயினும், அன்றிரவு தரையைக் காண்பது உறுதி என்ற நம்பிக்கை பிரயாணிகட்கு ஏற்பட்டது. அதனல் அவர்கள் விழித்துக்கொண்டே இருந்தார்கள். அப்பொழுது கொலம்பஸ் என்ன செய்துகொண்டிருந்தார்?

7. கொலம்பஸ் தமது கப்பலின் மேல்தட்டின்மீது ஓரிடத்தில் அமர்ந்து கண்ணுக்கு எட்டிய தூரம்வரை எதிர்ப்புறத்தைப் பார்த்துக்கொண்டே இருந்தார்; இரவு மணி பத்தாயிற்று. அப்பொழுது சேய்மையில் வெளிச்சம் தோன்றுவதை அவர் கண்டார்; 'அது விண்மீன் வெளிச்

சம் அன்று; மண்ணில் தோன்றும் வெளிச்சமே' என்று உணர்ந்தார்; அளவற்ற மகிழ்ச்சி அடைந்தார்; தம் பக்கத்தில் அரைத் தூக்கத்தில் இருந்த ஒருவனைத் தட்டி எழுப்பி வெளிச்சத்தைச் சுட்டிக் காட்டினர். பின்னர் அந்த வெளிச்சத்தை அனைவரும் பார்த்தனர்; வெளிச்சம் அடிக்கடி மறைந்து மறைந்து வேறு வேறு இடங்களில் மாறி மாறித் தோன்றிக்கொண்டே இருந்தது. "மீன் பிடிக்கும் கரையாளரது கட்டு மரத்திலிருந்து அவ்வெளிச்சம் வருகிறது. அதனால்தான் அஃது அலைகளால் மறைக்கப் படுகிறது; வெவ்வேறு இடங்களில் தோன்றுகிறது" என்று பிரயாணிகளுட் சிலர் கூறினர்; வேறு சிலர், "ஒரு மனிதன் தன் கையில் விளக்கைப் பிடித்துக்கொண்டு கரையில் அங்கும் இங்குமாக உலவிக்கொண்டிருக்கிறான் போலும்!" என்றனர். "உண்மை எதுவாயினும் சரி; நாம் தரையை நெருங்கிவிட்டோம்" என்று கொலம்பஸ் முகமலர்ச்சியுடன் கூறினர். எல்லோரும் "ஆம், ஆம்" என்றனர்.

8. கப்பல்கள் மேலும் சிறிது தூரம் சென்றன. அப்பொழுது மாலுமிகள் கரை அண்மையில் இருப்பதாக உணர்ந்தனர்; அதனால் கப்பல்களை நிறுத்தி நங்கூரம் பாய்ச்சினர்; தங்கள் மகிழ்ச்சியை அறிவிக்கப் பீரங்கி வெடி தீர்த்தனர்; 'பொழுது எப்பொழுது விடியும்!" என்று ஆவலோடு காத்திருந்தனர். மறுநாள் (அக்டோபர் மாதம் பன்னிரண்டாம் நாள்) பொழுது விடிந்தது. கப்பலில் இருந்த கொலம்பஸும் மற்றவரும் தங்கட்கு எதிரில் பல மரங்கள் அடர்ந்து வளர்ந்திருந்த அழகிய நிலப் பரப்பைக் கண்டனர். கொலம்பஸ் தம் ஆட்களுடன் படகுகளில் ஏறிக் கரையை அடைந்தார்; தாமே முதலில் படகைவிட்டுக் கீழே இறங்கினர்; மகிழ்ச்சிப் பெருக்கினல் அப்புதிய நிலத்தைக் குனிந்து முத்தமிட்டார்; பிறகு முழங்காற்படியிட்டு, "புதிய நாட்டைக் கண்டறிய வேண்டும் என்று பல ஆண்டுகளாகக் கொண்டிருந்த அவாவினை நிறைவேற்றி அருளிய இறைவனே, உனக்கு என் வணக்கம் உரியதாகுக!" என்று கூறித் தொழுதார்.

9. கரையில் இருந்த மக்கள் கொலம்பஸையும் அவருடன் வந்தவர்களையும் அவர்களுடைய கப்பல்களையும் கண்டு வியப்படைந்தார்கள். அவர்கள் அதுவரை கப்பல்களையோ, ஐரோப்பியரையோ காணாததே அவர்தம் வியப்புக்குக் காரணமாகும்.

10. கொலம்பஸ் கண்ட இடம் அமெரிக்காவை அடுத்துள்ள மேற்கு இந்தியத் தீவுகளில் ஒன்றாகும். அவர் நான்கு முறை இவ்வாறு பிரயாணம் செய்து, அமெரிக்காவில் ஐரோப்பியர் குடியேற ஊக்கம் அளித்தவர். அவரது உழைப்பே புதிய கண்டத்தை உலகத்தார் அறிந்து பயன் பெறச் செய்தது. அப் பெரியவர் திருப்பெயர் நீடூழி வாழ்க.

### அரும்பொருள்

அதுகாறும் - அதுவரை. அண்மை - சமீபம், [சேய்மை - தூரம்). சான்று - சாட்சி.

### பயிற்சி

I. விடை தருக:—

1. கொலம்பஸ் பல ஆண்டுகளாகக் கொண்டிருந்த அவா யாது?
2. பிரயாணிகள் அடிக்கடி மனக்கவலை கொண்டதற்கு உரிய காரணங்கள் எவை?
3. கொலம்பஸ் மனவுறுதி உடையவர் என்பதற்குச் சான்று யாது?
4. கரையை அடைந்த கொலம்பஸ் என்ன செய்தார்?

II. கொலம்பஸ் செய்த கப்பற் பிரயாண அநுபவத்தை அவரே கூறுவதுபோலக் கூறுக.

III. கொலம்பஸ் புறப்பாடு — கப்பற் பிரயாணம் — பிரயாணிகள் கலக்கம்—கொலம்பஸ் மனவுறுதி — வெற்றி பெறுதல்:—இக் குறிப்புகளைத் துணையாகக்கொண்டு கட்டுரை ஒன்று வரைக.

IV. வாக்கியங்களில் அமைக்க:—மாறி மாறி, ஏறக்குறைய, நிலப் பரப்பு.

V. எழுந்தெழுந்து — எழுந்து + எழுந்து - தனித்து நிற்கத்தக்க ஒரு சொல் இவ்வாறு அடுக்கி வருதல் **அடுக்குத் தொடர்** எனப்படும். பாம்பு பாம்பு, வருக வருக, போ போ - அடுக்குத் தொடர்கள். நீங்கள் அடுக்குத் தொடருக்கு நான்கு உதாரணங்கள் தருக.

# 4. பயிர்த்தொழில்

1. மக்கள் உயிர்வாழ இன்றியமையாதது உணவு. அவ்வுணவுக்குரிய பொருள்களை உண்டாக்கித் தரும் தொழிலே பயிர்த்தொழில். அத்தொழிலைச் செய்பவர் உழவர். உலகில் எவ்வகைத் தொழிலைச் செய்பவரும் தம் தொழிலில் வரும் பயனால் தம் பசியைத் தீர்த்துக்கொள்ளு தல் இயலாது. ஆதலின் அவர்கள் உழவரது உதவியையே நாடி நிற்கின்றனர். உலக இன்பங்களைத் துறந்த துறவிகளும் உணவுக்கு உழவரையே எதிர்பார்க்கின்றனர். எனவே, உழவரே உலகத்தவரை வாழச் செய்கின்றனர்; ஆதலின் சிறப்புப் பெறத்தக்கவர் உழவரே ஆவர்; ஏனையோர் அவர்கட்கு அடுத்தபடியினரே ஆவர். இக்கருத்தினை நமது தமிழ் மறை தந்த திருவள்ளுவர்,

> "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்; மற்றெல்லாம்
> தொழுதுண்டு பின்செல் பவர்"

என்று கூறியிருத்தல் காண்க.

2. இதனால் உழவுத்தொழிலே பிற தொழில்களை விடச் சிறந்தது என்பது நன்கு புலனாகும். இதனை உணர்ந்து நம் முன்னோர் பயிர்த்தொழிலை நன்கு போற்றி வந்தனர். ஆயின், காலம் செல்லச் செல்லப் பல காரணங்களால் கிராமங்கள் சீர்கேடுற்றன; உழவர் கல்வியறிவு அற்றவர் ஆயினர்; பயிர்த்தொழில் ஒழிந்த நேரங்களில் கைத்தொழில்களைச் செய்து பொருளீட்டி வாழ வழியறிந்திலர்; வரவர வறிஞர் ஆயினர்; பணம் இல்லாமையின் வயலுக்குத்தக்க எருவினைப் போடக் கூடவில்லை; உழுதற்கு நல்ல எருதுகள் வாங்க வழியில்லை. இவ்விழிநிலையில் பயிர்த்தொழில் செய்து சுகமாக வாழக்கூடவில்லை. பயிர்த் தொழிலில் வரும் பயன் அவர்கள் உணவுக்குப் போதவில்லை; திருமணம், எரு வாங்குதல், மாடுகள் வாங்குதல் முதலியவற்றுக்குக் கடன் வாங்கி, அக்கடனைக் கொடுக்க வழியின்றி அல்லலுறுகின்றனர். பெரும்பாலரான உழவரது பரிதாபநிலை இதுவாகும்.

3. நம் நாட்டுப் பயிர்த்தொழில் நிலைமை உயர வேண்டுமாயின், நாம் உடனே மேற்கொண்டு செய்யத்தகுவன யாவை?

(1) உழவர்கட்குக் கல்வி வசதி அளிக்கவேண்டும். கிராமந்தோறும் பள்ளிகள் ஏற்படுத்தல் வேண்டும். அப்பள்ளிகளில் பயிர்த்தொழில் பற்றிய அறிவு பேரளவு புகட்டப்படல் வேண்டும். உலக நாடுகளில் உழவர்கள் எப்படி வாழ்க்கை நடத்துகிறார்கள், பயிர்த்தொழிலை எவ்வாறு செய்கிறார்கள், ஒழிந்த நேரங்களில் என்னென்ன கைத்தொழில்களைச் செய்கிறார்கள் என்பன போன்ற செய்திகள் நிறைந்த நூல்கள் பாட நூல்களாக அமைதல் வேண்டும். நிலத்தை உழும் முறை, சிறந்த எருக்கள் இன்னவை என்று அறிதல், அவற்றைச் சேமித்தல், நிலத்தின் தன்மை உணர்தல், பயிர் செழித்து வளராத காரணங்களை ஆராய்தல், பயிர்கட்கு உண்டாகும் நோய்களை அறிதல், அவை வாராமல் தடுத்தல் வந்த நோய்களைப் போக்கல், மாடுகட்கு வரும் நோய்களை அறிதல், அவற்றைத் தீர்த்தல் முதலிய பல்திறப்பட்ட அறிவு உழவர்கட்குத் தேவையாகும். இவ்வறிவினை எளிதில் புகட்டத்தக்க நூல்கள் பாடநூல்களாக அமைதல் நல்லது. இன்றுள்ள உழவர்கள் பள்ளிகளில் படிக்கும் வயதைக் கடந்தவர்கள்; ஆதலால் இந்த உண்மைகளைச் சொற்பொழிவுகள் வாயிலாக அவர்கட்கு எடுத்துக்



கூறி, அவர்கட்கு நல்லறிவு புகட்டவேண்டும். உழவர் இவ்வுண்மைகளை உணர்ந்து பயிர் செய்வாராயின், அவர்தம் தொழில் பெரும்பலனைத் தரும் என்பதில் ஐயமில்லை.

(2) பயிர்த்தொழிலைத் தாழ்வாகக் கருதும் மனப்பான்மை நமது நாட்டில் பரவிவருகிறது. அஃது ஒழிக்கப்படுதல் வேண்டும். நாம், 'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்' என்ற வள்ளுவர் வாய்மொழியை நாடெங்கும் பரப்புதல் வேண்டும். மேனாடுகளில் அரசர்முதல் ஆண்டியீறாக அனைவரும் உழுதொழிலைச் சிறந்த தொழிலாகக் கருதிவருகின்றனர். அரசர், சட்டசபை உறுப்பினர் அமைச்சர் முதலிய பெருமக்கள் பலர் தங்கள் நிலங்களைத் தாமே உழுது பயிர்செய்தவர் - செய்கின்றனர் என்பது பல நாட்டு வரலாறுகளிலிருந்து தெரியும் உண்மையாகும். நமது பெரும்புலவராகிய கம்பர் உழவர்களைச் சிறப்பித்துப் பாடிய ஏரெழுபது' என்னும் நூலை நம்மவர் ஊன்றிப் படித்தல் நலம். விளைநிலங்களை உடைய கிராமப் பெருமக்கள் தம் பிள்ளைகளை அரும்பாடுபட்டுப் படிக்கவைத்துப் பயிர்த்தொழில் ஒழிந்த உத்தியோகங்களில் விடுதல் பயிர்த்தொழில் வளர்ச்சிக்கு ஏற்றதன்று. அவர்கள் படிப்புக் கிராமத்தைச் சீர்படுத்தவும் பயிர்த்தொழில் நிலையைப் பன்மடங்கு உயர்த்தவும் பயன்படவேண்டும். உழவருடைய பிள்ளைகள் பயிர்த்தொழில், கிராமக் கைத்தொழில்கள் சம்பந்தமான கல்வியைச் சிறப்புமுறையில் படித்துக் கிராமங்களிலேயே வாழ்ந்து, தமது படிப்பை மேற்சொன்ன இரண்டின் முன்னேற்றத்திற்கும் பயன்படுத்துதலே ஏற்புடையது.

(3) பயிர்த்தொழிலுக்கு அரசாங்கத்தார் பேருதவி புரிதல்வேண்டும்; ஐக்கிய நாணயச் சங்கங்கள் மூலமாக உழவர்க்குக் குறைந்த வட்டிக்குக் கடன் தரும் முறையை அரசாங்கத்தார் ஏற்படுத்தியுள்ளனர்; ஆண்டுக்கு ஒரு முறை சில இடங்களில் பயிர்த்தொழிற் பொருட் காட்சிகளை வைத்து நடத்துகின்றனர்; புதிய வழிகளில் நிலங்களைப் பயிரிடும் முறைகளைப்பற்றி அங்கங்கே பேச நிபுணர்களை ஏற்படுத்தியுள்ளனர். ஆயினும் இவை அனைத்தும்

நம் நாட்டு உழவர்க்குத் தேவையான பயனைத் தரவில்லை. ஐக்கிய நாணயச் சங்கங்கள் பெருகுதல் வேண்டும்; பயிர்த் தொழிற் பொருட்காட்சிகள் நாடெங்கும் நடைபெறுதல் வேண்டும்; பயிர்த்தொழில் தொடர்பான சொற்பொழிவு கள் கிராமந்தோறும் நடைபெறுதல் இன்றியமையாதது. அரசியலார் பயிர்த்தொழில் பற்றிய செய்தித் தாள்களை நடத்தி, அவற்றைக் கிராமங்களில் பரவும்படி செய்தல் வேண்டும். கிராம மக்களுக்குப் பாதை வசதி, சுகாதார வசதி, நீர் வசதி, அஞ்சல் வசதி முதலிய பல வசதிகளைச் சிறந்த முறையில் செய்துதருதல் வேண்டும்.

4. ஆடு மாடுகட்கு நல்ல மேய்ச்சல் நிலம் போதுமான அளவு இருத்தல் வேண்டும். பழைய காலத்தில் ஒவ்வோர் ஊரின் பக்கத்திலும் காடுகள் இருந்தன. அவற்றில் ஆடு மாடுகள் மேய்ந்துவந்தன; அதனுல் உடல் வளம் பெற் றிருந்தன. அத்தகைய எருதுகளைக் கொண்டே வயலை ஆழமாக உழமுடியும். 'அகல உழுவதை விட ஆழ உழு' என்பது நமது நாட்டுப் பொன்மொழி. ஆழ உழுதால்தான் பயிர் செழிப்புற்று வளர்ந்து மிக்க பலனைத் தரும். ஆகவே, பொதுவான மேய்ச்சல் நிலம் ஒவ்வொரு கிராமத் திற்கும் தேவையாகும். அரசாங்கத்தார் இதனைக் கவ னித்து ஆவன செய்தல் இன்றியமையாதது.

5. இந்நான்கும் நன்முறையிற் கவனித்துச் செய்யப் படுமாயின், நமது பயிர்த்தொழில் படிப்படியாக மேனிலையை அடைதல் கூடும்; உழவர் வாழும் கிராமங்கள் நன்னிலையில் விளங்கும். கிராமங்கள் செல்வ நிலையில் உயர்ந்தாற்றான், கிராமங்களையே முதுகெலும்பாக வுடைய நமது நாட்டுப் பொருளாதார நிலை உயரும்; பசியோ, உணவுப் பஞ்சமோ நாட்டில் தலைகாட்ட வழியில்லை. இத னுல் அன்றே, நம் தமிழ்ப் புலவர் ஆகிய ஔவையாரும்,

'வரப்புயர நீர்உயரும்
நீர் உயர நெல்உயரும்
நெல்உயரக் குடிஉயரும்
குடியுயரக் கோன்உயர்வான்

என்று கூறியருளினர்!

## அருஞ்பொருள்

இன்றியமையாதது - அவசியமானது. துறவி - இல்லறத்தை விட்டவர், சந்நியாசி. மறை - வேதம். அல்லல் - துன்பம். வாய்மொழி - உண்மைச் சொல். ஏற்புடையது - தக்கது. அஞ்சல் - தபால். ஆவன - தேவைப்படுவன அல்லது தம்மால் இயல்வன. கோன் - அரசன்.

## பயிற்சி

I. விடை கூறுக:—

1. பயிர்த்தொழில் சிறந்தது என்பதற்குக் காரணம் யாது?
2. இன்றைய உழவர் நிலைமை யாது?
3. பயிர்த்தொழில் முன்னேறச் செய்யத் தருவன யாவை?
4. 'கிராம முன்னேற்றமே நாட்டு முன்னேற்றம்' — இஃது எவ்வாறு பொருந்தும்?
5. உழவுத் தொழில் சம்பந்தமான பழமொழிகள் சில கூறுக.
6. ஔவையார் கூறியருளியது யாது? அதன் கருத்தென்ன?

II. இப்பாடத்தின் ஒவ்வொரு பிரிவுக்கும் ஏற்ற தலைப்புத் தருக.

III. நீவிர் அறிந்த ஒரு கிராமத்தின் பயிர்த்தொழில் நிலைமையை விளக்கமாக வரைக.

IV. வாக்கியங்களில் அமைக்க:-வரவர, சீர்கேடு, அரும்பாடு, சீர்ப்படுத்த, படிப்படியாக.

V. இப்பாடத்தில் உள்ள அடுக்குத்தொடர்களைக் கூறுக.

VI. உழவின் சிறப்பு - நம் உழவுக்கு வேண்டும் சாதனங்கள் - அவற்றை அடையத்தகும் வழிகள் என்பனவற்றைக் குறிப்புகளாகக் கொண்டு ஒரு கட்டுரை வரைக.

# 5. எக்ஸ்-ரே

1. முருகன் ஆறாம் வகுப்பு மாணவன். அவன் தந்தையார் பி. ஏ. பட்டம் பெற்றவர். அவர் உத்தியோகத்தை விரும்பாமல் பெரிய மளிகைக் கடை ஒன்றை வைத்து நடத்திவந்தார். அவர் நாடோறும் இரவில் முருகனது வகுப்புக்குரிய பாடங்களை வீட்டில் கற்பித்து வந்தார். முருகன் மிகவும் நல்லவன்; ஆசிரியர்களிடமும் மாணவர்களிடமும் மிக்க அன்புடன் நடந்துகொண்டான்; வகுப்பில் முதல் மாணவனாக விளங்கினான். அவன் கால் பந்து விளையாட்டில் பெயர் பெற்றவன்.

2. ஒரு நாள் மாலை பள்ளிக்கூட விளையாட்டு மைதானத்தில் கால்பந்து விளையாட்டுப் போட்டி நடைபெற்றது. முருகன் நன்றாக விளையாடினான். அவன் பந்தைக் காலால் தள்ளிக்கொண்டு செல்லுகையில் எதிர்க் கட்சியினர் மூன்றுபேர் அவனை வளைத்துக்கொண்டனர். முருகன் அவர்களிடம் அகப்படாதபடி பந்தைக் காலால் தள்ளிச் செல்ல முயன்றான்; அவன் கால் தவறிப் பந்தின் மீது சென்றது. எதிர்க் கட்சியாருள் ஒருவன் முருகனது காலைத் தட்டினான். முருகன் கீழே விழுந்தான். அவன் முன்னரே களைத்துப் போயிருந்தவன். மேலும் அவன் விழுந்தபோது வலக்கை மடங்கித் தரையில் அழுத்தமாகத் தாக்குண்டது. அவன் மூர்ச்சையானான்.

3. உடனே உடற்பயிற்சி ஆசிரியர் ஓடிவந்தார்; அவனை மைதானத்திலிருந்து அப்புறப்படுத்தினர்; இதற்குள் முருகன் தந்தையாருக்கு மாணவர் சென்று செய்தியைத் தெரிவித்தனர். அவர் உடனே புறப்பட்டு வந்து முருகனைக் கண்டார். தந்தையாரைக் கண்டமுருகன் முகம் கதிரவனைக் கண்ட கமலம்போல மலர்ச்சி பெற்றது; "அப்பா, எனது வலக்கை மிகுதியாக வலிக்கிறது" என்றான். உடற் பயிற்சி ஆசிரியர் முருகனது வலக்கையைப் பலமுறை தடவிப் பார்த்து, "உள்ளே எலும்பு முறிந்திருக்கலாம்; எதற்கும் 'எக்ஸ் - ரே' படம் பிடித்துப் பார்ப்பது நல்லது" என்றார்.

4. மறுநாட் காலை முருகன் தந்தையாரும் உடற்பயிற்சி ஆசிரியரும் முருகனை அழைத்துக்கொண்டு அரசாங்க மருத்துவக்கூடம் சென்றனர்; 'எக்ஸ்-ரே' பிரிவுக்குரிய மருத்துவத் தலைவரைக் கண்டு நடந்ததைக் கூறினர். அவர் உடனே முருகனை ஒரு பலகைமீது படுக்க

வைத்து, அவன் கையை மட்டும் உயர்த்தி, ஒரு கருவியின் துணையாற் படம் பிடித்தார்; அப்படத்தைப் பல முறை நன்கு பரிசோதித்தார்; பிறகு "எலும்பு முறிபடவில்லை; சிறிதளவு இடம் நகர்ந்துள்ளது. ஆதலால் ஒரு வாரத்தில் குணமாய்விடும்," என்று கூறி, அவர்களிடம் ஒரு சீட்டை எழுதித் தந்து கட்டுக் கட்டும் பிரிவுக்கு அனுப்பினர். அங்குள்ள மருத்துவர் முருகன் கையை நன்றாகத் தடவிப் பார்த்து மருந்து தடவி, இரண்டு மெல்லிய பலகைகளை வைத்துக் கட்டி, 'ஒரு வாரத்தில் குணமாகும்; கவலைவேண்டா'' என்று கூறி மூவரையும் அனுப்பிவிட்டார்.

5. முருகன் வீட்டுக் கட்டில்மீது கிடத்தப்பட்டான். மூன்று நாட்களுக்குள் அவன் கை வீக்கம் வடிந்து வலி குறைந்தது. நான்காம் நாள் அவன் தந்தையார் அவன் பக்கத்திலிருந்த சாய்வு நாற்காலியில் அமர்ந்திருந்தார். அப்பொழுது முருகன் அவரைப் பார்த்து, "அப்பா, ஒரு பொருளைப் படம் பிடிப்பதை அறிவேன். ஆனல் அப் பொருளுக்குஉள்ளே இருப்பவற்றையும் படம் பிடித்தல் என்பது வியப்புக்கு உரியதாக அல்லவோ காணப்படு கிறது! அப்பா, அந்த எக்ஸ்-ரேயைப்பற்றி அறிய ஆவல் மிகுதிப்படுகிறது" என்றான். அவன் கண்கள் தந்தையார் முகத்தை ஆவலோடு பார்த்தன. தந்தையார் புன்னகை கொண்டார்; ஒரு புத்தகத்தை எடுத்துவந்து அதைப் பார்த் துக்கொண்டே கீழ் வருமாறு சொல்லலானர்.

6. "எக்ஸ் - ரே என்பது புதிய ஒளியாகும். அஃது ஏறக்குறைய ஐம்பது ஆண்டுகட்கு முன் கண்டறியப்பட் டது. அதனைக் கண்டுபிடித்தவர் ஒரு ஜெர்மானிய மருத்து வர். அவர் பெயர் கான்ராட் வில்லியம் ராண்ட்ஜன் என்பது. அவர் 1845-இல் ஜூரிச் நகரிற் பிறந்தவர்; 'உட்ரெக்' என்னும் நகரில் படித்துத் தேறியவர்; 'உட்ஸ் பெர்க்' நகரில் உள்ள பல்கலைக் கழகத்தில் இரசாயன சாத்திர ஆசிரியராக இருந்தவர்; பின்னர் 'மியூனிச்' பல்கலைக் கழகத்தில் ஆசிரியரானர். அவர் ஆராய்ச்சித் துறையில் பேருக்கம் கொண்டவர்; நுண்ணறிவும் திறமையும் பெற் றவர். ஆதலின் இரசாயன சாத்திர சம்பந்தமாகவும் மின் சார சம்பந்தமாகவும் பல உண்மைகளைக் கண்டறிந்து வெளிப்படுத்தினர்.

7. "அவர் ஒரு நாள் தம் ஆராய்ச்சி அறையின் கதவு களையும் சாளரங்களையும் மூடித் தாளிட்டுக்கொண்டு குருக்ஸ்

குழாய் என்னும் கருவியின் உதவியால் மின்சாரத்தின் தன்மைகளை ஆராய்ச்சி செய்துகொண்டிருந்தார். அவர் மேசைமீது புகைப்படக் காகிதம் ஒன்று வைக்கப்பட்டிருந்தது. அப்பொழுது திடீரென்று முன் சொன்ன புகைப்படக் காகிதத்தின்மீது மின்னலைப் போன்ற ஒருவித ஒளி உண்டாயிற்று. அதனைக் கண்ட மருத்துவர் அதன் காரணத்தை ஆராயவில்லை; தமது ஆராய்ச்சியில் ஏதோ தவறு நேர்ந்தது என்று எண்ணிவாளா இருந்தார்.

8. "அவர் மறு நாள் தம் ஆராய்ச்சியைத் தொடர்ந்து செய்யலானார். அன்றும் அப்புதிய ஒளி தோன்றியது. உடனே அவர், "குருக்ஸ் குழாயிலிருந்து ஏதோ ஒருவிதப் புதிய ஒளி வெளியில் வருகிறது. இவ்வொளி பொருள்களை ஊடுருவிச் செல்லவல்லது. ஆதலால் பொருள்களின் வெளி உருவத்தோடு உட்பகுதியையும் படம் பிடிக்க இவ்வொளி உதவக்கூடும்" என்று தமக்குள் கூறிக்கொண்டார்.

9. "பின்னர் அவர் ஒரு பெட்டியில் சில பொருள்களைப் போட்டுக் குருக்ஸ் குழாயின் உதவியாற் புகைப் படம் பிடித்தார். பெட்டிக்குள் போடப்பட்ட பொருள்களின் உருவங்கள் மிகத் தெளிவாக அப்படத்தில் விழுந்திருந்தன. அவர் கொண்ட வியப்பும் மகிழ்ச்சியும் எல்லை கடந்தன.



10. "மருத்துவர் தம் ஆராய்ச்சியை அத்துடன் நிறுத்தவில்லை. அவர் தமது கையின் மீது குருக்ஸ் குழாயின் ஒளி படும்படி வைத்துப் படம் பிடித்தார். அப்படத்தில் அவருடைய கைத்தசை நிழல் போன்றும், எலும்புகள் தெளிவாகவும்

விழுந்திருந்தன. பிறகு அவர் ஒரு மனிதனை அவ்வொளியின் உதவியாற் படம் பிடித்தார்; அவனுடைய உள்ளுறுப்புகள் படத்தில் தெளிவாகப் படிந்திருந்தன. அப்பொழுது அவருக்குத் தமது ஆராய்ச்சியில் உறுதி உண்டாயிற்று. அவர் தம் ஆராய்ச்சி விவரங்களைச் செய்தித்தாள்களில் வெளிப்படுத்தினர்.

11. "அவ்விவரங்களைப் படித்த பலநாட்டு மருத்துவரும் ராண்ட்ஜன் செய்த சோதனையைத் தாமும் செய்து உண்மை உணர்ந்தனர். மருத்துவர் உலகம் அவ்வொளிக்கு 'ராண்ட்ஜன் ஒளி' எனப் பெயரிட்டது. அவ்வொளி உண்டாதற்கு மூல காரணம் கண்டறியக் கூடவில்லை. ஆதலால் 'மூல காரணம் விளங்காத ஒளி' என்னும் பொருள்பட 'எக்ஸ் - ரே' என்னும் பெயரும் அதற்கு வழங்கிவருகிறது.

12. "எக்ஸ் - ரேயின் உதவியால் உட்புண் இருக்கும் இடம், எலும்பு முறிந்துள்ள இடம், உடம்பில் குண்டுகள் பாய்ந்த இடங்கள், நோயாளியின் உடம்பில் உள்ள கோளாறுகள் முதலியவற்றைப் புகைப்படம் பிடித்துத் தெரிந்துகொள்ளலாம். மருத்துவத்துறையில் எக்ஸ்-ரேயின் உபயோகம் அளவிடற்கரியது. அந்நூதன ஒளியைக் கண்டுபிடித்து உலகறியச் செய்த பெரியாருக்கு நாம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம் அல்லவா?"

### அரும்பொருள்

புன்னகை - சிறிதளவு சிரிப்பு (ஒலியின்றிச் சிரித்தல்). பல்கலைக் கழகம் - பலகலைகளைக் கற்பிக்கும் கல்லூரிகளை ஆளும் கழகம்.

I. விடை கூறுக: —

1. எக்ஸ்-ரே என்பதன் பொருள் யாது?
2. இஃது எவ்வாறு கண்டு பிடிக்கப்பட்டது?
3. இதன் பயன்கள் யாவை?

II. எக்ஸ்-ரே வரலாற்றை ராண்ட்ஜன் கூறுவது போலக் கூறுக.

III. இப்பாடத்தின் ஒவ்வொரு பகுதிக்கும் ஏற்ற தலைப்புத் தருக.

IV. பிரித்துக் கூறுக: —நாடோறும், எதிர்க்கட்சி, சிறிதளவு, உலகறிய, நுண்ணறிவு.

V. எதிர்ச்சொல் தருக: —அறிவேன், புன்னகை, தாளிட்டு, தெளிவு.

# 6. கிராமக் கைத்தொழில்கள்

1. இந்தியா கிராமங்கள் நிறைந்துள்ள நாடு. இதனில் ஏறத்தாழ ஐந்து லக்ஷம் கிராமங்கள் இருக்கின்றன. அவற்றில் ஏறக்குறைய முப்பது கோடி மக்கள் வாழ்கின்றனர். கிராம மக்கள் பயிர்த்தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள். அவர்கட்குப் போதுமான கல்விப் பயிற்சி இல்லை; பயிர்த்தொழிலிலும் சிறந்த முறைகளைக் கையாளக் கல்வி அறிவு இல்லை; பொருள் வசதியும் இல்லை. பயிர்த்தொழில் ஆண்டில் ஐந்து அல்லது ஆறு மாதமே நடைபெறுகிறது. எஞ்சிய காலம் வீணே கழிக்கப்படுகிறது. பயிர்த்தொழிலில் கிடைக்கும் வருமானம் கிராம மக்கட்குப் போதுமான



தன்று; அதனால் அவர்கள் வயிரூர வுண்டு வாழ வசதியற்று அல்லற்படுகின்றனர் என்பதை முன்னர்ப் படித்தீர்கள். பயிர்த்தொழில் ஒழிந்த ஓய்வு நாட்களில் அவர்கள் பயனுடைய கைத்தொழில்களைச் செய்யின், வருமானம் பெருக வழியுண்டு; கிராமச் செல்வநிலையும் செம்மைப்படும்.

2. கிராமத்தில் செய்யத்தகும் கைத்தொழில்கள் எவை? பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி முதலிய மேல் நாடு

களில் உள்ள கிராமத்தார் ஆடு மாடுகளை வளர்த்தல், பன்றி வளர்த்தல், கோழி வாத்துகளைப் பெருக்குதல் முதலிய கைத்தொழில்களைச் செய்கின்றனர்.

3. நம் நாட்டுக் கிராமங்களுக்கு ஏற்ற கைத்தொழில்கள் பலவாகும். நூல் நூற்றல் சிறந்த கைத்தொழிலாகக் கூறலாம். நூறு ஆண்டுகட்கு முன் நம் கிராமங்களில் பெரும்பாலான பெண் மக்கள் நூல் நூற்று வந்தனர் என்று ஆங்கில ஆராய்ச்சியாளர் ஒருவர் எழுதியுள்ளார். இன்றைய கிராமங்களில் அந்நிலைமை காணப்படவில்லை. நூல் நூற்று ஆடை நெய்தல் பயன் தரத் தக்க தொழிலாகும்.



4. பால் பண்ணை வைத்து நடத்துதல் பயனுடையது. நல்ல பசுக்களைச் செவ்வையாக வளர்த்து, அவை தரும் பாலைப் பக்கத்து நகரங்கட்கு அனுப்பலாம்; வெண்ணெயை டப்பிகளில் அடைத்துப் பல ஊர்கட்கு அனுப்பலாம். பசுக்களின் சாணம் நல்ல எருவாகும். பால் பண்ணைகளை வைத்து நடத்தி டென்மார்க் நாட்டினர் மிக்க இலாபம் அடைந்து வருகின்றனர் என்பது இங்குக் கவனிக்கத்தக்கது.

5. கோழி வளர்த்தலும் நல்ல தொழில் ஆகும். நல்ல சாதிக் கோழிகளை வாங்கி, தவிடு முதலிய நல்ல உணவுப் பொருள்களை அளித்து, வளமுள்ள இடங்களில் மேய

விட்டுப் பாதுகாத்துவரல் வேண்டும்; அவற்றுக்கெனக் கூண்டுகள் தயாரிக்க வேண்டும்; அவற்றின் முட்டைகளை அயல் ஊர்களில் விற்று நல்ல ஊதியம் பெறலாம். சென்னை போன்ற பெரிய நகரங்களில் இப்பொழுது ஒரு முட்டையின் விலை இரண்டணு ஆகும்.

6. காய்கறித் தோட்டம், பூந்தோட்டம், பழத்தோட்டம் வைத்தலும் நல்ல பயனைத் தரும். காய்கறிகள் பெரிய தோட்டங்களில் பயிராக்கப்பட்டு வெளி ஊர்கட்கு அனுப்பப்பட வேண்டும்; பலவகை மலர்ச் செடிகளையும் கொடிகளையும் பயிராக்கி மலர்களை விற்பனை செய்யலாம்; ஆரஞ்சு, மா, பலா முதலிய பழந்தரும் மரங்களைப் பயிராக்கிப் பழங்களை விற்றுப் பயன் பெறலாம்.



7. தேனீ வளர்த்தல் இலாபந் தரும் தொழிலாகும். தேனீக்களுக்காக நல்ல கூண்டுகளைத் தயாரிக்கவேண்டும்; அவற்றில் தேனீக்களை வைத்து வளர்க்கவேண்டும். இங்ஙனம் பல கூண்டுகளை வைத்துள்ள கிராமந்தான் தேன் வியாபாரத்தில் நல்ல ஊதியம் பெறுதல் கூடும்.

8. பனை மரங்கள் மிகுந்துள்ள கிராமங்களில் உள்ளவர் விசிறி செய்தல், கூடை முடைதல், பனைவெல்லம் பனங்கற்கண்டு இவற்றைத் தயாரித்தல், பனந்துண்டங்களைப் பலகைகளாக அறுத்தல், பனைநார் தயாரித்தல் முதலிய பல தொழில்கள் செய்து பயன் அடையலாம்.

9. தென்னந் தோப்புகள் மிக்குள்ள கிராமங்களில் தென்னை ஓலை முடைதல், பூக்கூடை பின்னுதல், ஈர்க்கு களைக்கொண்டு துடைப்பம் தயாரித்தல், தேங்காய்ப் பருப்பைக் காயவைத்து நெய் தயாரித்தல், பிண்ணுக்கைக் கொண்டு சோப்புச் செய்தல், தேங்காய் ஓடுகளைக் கொண்டு அகப்பைகளையும் பொத்தான்களையும் செய்தல் முதலிய பல தொழில்களைச் செய்து நன்மை அடையலாம்.

10. எவ்வெக் கிராமத்தில் எவ்வெப் பொருள்கள் விளைகின்றனவோ அல்லது இயற்கையாகக் கிடைக்கின்றனவோ அவ்வக் கிராமத்திலே அவை பற்றிய தொழில்களைச் செய்தல் இலாபத்தை மிகுதிப்படுத்துவதாகும். கிராமத்தார் பலர் சேர்ந்து கூட்டு முறையில் ஒரு தொழிலை நடத்தலாம்; இலாபத்தைத் தங்கட்குள் பங்கிட்டுக்கொள்ளலாம். 'இத்தொழிலுக்கு இவ்வளவு முதல் வேண்டுமே! நம் ஒருவரிடம் இத்தொகை இல்லையே!' என்னும் ஏக்கம் உண்டாக இடம் இராது. இத்தகைய கூட்டுறவு பெருகின், கிராமத்தாருக்குள் வேற்றுமைகள் ஒழிந்து ஒற்றுமை வலுப்பெற இடமுண்டாகும்.

11. மேலே குறிப்பிடப்பெற்ற தொழில்களைத் தவிரப் பல்வேறு கைத்தொழில்கள் உண்டு. அவற்றுள் விளையாட்டுப் பொருள்கள் செய்தல், கயிறு திரித்தல், தோல் சாமான்கள் செய்தல், மண் பாண்டங்கள் செய்தல், பலவகை எண்ணெய்களை ஆட்டல், பசு, எருது, எருமை இவற்றின் கொம்புகளிலிருந்து பொத்தான் முதலிய பொருள்களைச் செய்தல், ஜமக்காளம் நெய்தல், பலவகைப்பட்ட பாய்களைப் பின்னுதல், பேனுக்கட்டை செய்தல், பலவகை மரச்சாமான்களைச் செய்தல், தாவரப் பொருள்களிலிருந்து சாயம், மை, வர்ணம் முதலிய பொருள்களை உண்டாக்குதல் என்பன குறிப்பிடத் தக்கவை.

12. இத்தொழில்கள் அனைத்தும் முன் சொன்ன கூட்டுறவு முறையில் எளிதாகச் செய்யலாம்; மட்பாண்டம் வனைதல் முதலிய சில தொழில்களைத் தனிப்பட்டவர் செய்தும் நன்மை பெறலாம். எதற்கும் ஊக்கமும் உணர்ச்சியும்

வேண்டும்; 'ஒரு நிமிட நேரத்தையும் வீணாய்க் கழித்தல் ஆகாது' என்னும் தெளிந்த உணர்ச்சி உள்ளத்தில் ஊன்றி இருத்தல் வேண்டும். 'நாம் உழைத்து வேலையைச் செய்து வேண்டும் பொருளை ஈட்டுவோம், இன்பமாக வாழ்க்கையை நடத்துவோம்' என்னும் மனவுறுதி வேண்டும். 'மனம் உண்டாயின் இடமுண்டு' என்பது ஆன்றோர் பொன்மொழி. மக்கள் மனம் வைப்பின், நடவாத தொழில் உண்டோ? கிராமத்தார் மக்கட் பண்புடன் ஒன்றுபட்டு வாழவேண்டும்; எளியவர் பலர் சேர்ந்து ஒரு தொழிலை நடத்தலாம்; செல்வர் சிலர் சேர்ந்து ஒரு தொழிலையோ பல தொழில்களையோ நடத்தலாம்; செல்வரும் எளியரும் மன ஒற்றுமையுடன் தொழிலைச் செய்யலாம். ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு!

### அரும்பொருள்

எஞ்சிய - மிகுந்த. அளித்து - கொடுத்து. ஊதியம் - இலாபம். எளிது - சுலபம். ஆன்றோர் - பெரியோர். மக்கட் பண்பு - மனிதர்க்குள்ள ஒற்றுமை அன்பு.

### பயிற்சி

I. விடை தருக :—

1. இன்றைய கிராம மக்கள் நிலைமை யாது?
2. மேனாட்டுக் கிராமங்களில் செய்யப்படும் கைத்தொழில்கள் எவை?
3. நம் கிராமங்களில் செய்யத்தகும் கைத்தொழில்கள் எவை?
4. கிராம மக்களுக்கு எப்பொழுது நல்வாழ்வு உண்டாகும்?
5. உங்கள் கிராமத்தில் நடைபெறும் கைத்தொழில்கள் எவை?

II. இப்பாடத்திற் குறிக்கப்பெறாத கிராமக் கைத்தொழில்கள் சிலவற்றைக் கூறுக. அவற்றுள் ஒன்றைச் செய்யும் முறையினை விளக்குக.

III. பால் பண்ணை எவ்வாறு வைத்து நடத்தலாம் என்பதுபற்றிக் கூறுக.

IV. எதிர்ப்பதம் கூறுக :—மனவுறுதி, ஒற்றுமை, வாழ்வு, இலாபம்.

# 7. எனது இன்பச் செலவு*

(மேட்டூர் அணை)

1. நான் ஆறும் வகுப்பு மாணவன். என் பெயர் இளங்கோ. நான் என் வகுப்பு மாணவருடனும் ஆசிரியருடனும் சென்ற நவராத்திரி விடுமுறையில் மேட்டூர் அணையைப் பார்க்கச் சென்றேன். நான் அதனைப் பார்த்ததும் வியப்புற்று நின்றேன். ஆசிரியர் எங்களுக்கு அணையின் பல பகுதிகளைக் காட்டி விளக்கினர். நான் அவர் கூறியுள்ளவற்றைக் குறிப்புகளாக எனது குறிப்புப் புத்தகத்தில் குறித்துக்கொண்டேன். அக்குறிப்புகளின் உதவி கொண்டு யான் எழுதிய கட்டுரை இது. நீங்கள் இதனைப் படித்துப் பயன் பெறுக.

2. மேட்டூர் அணை என்பது ஈரோட்டிலிருந்து முப்பத்தைந்து கல் தூரத்திலும் சேலத்திலிருந்து இருபத்தைந்து கல் தொலைவிலும் உள்ளது. அங்கு ஒரு பெரிய பள்ளத்தாக்கு இருக்கின்றது. அது மூன்று பக்கங்களிலும் குன்றுகளால் சூழப்பெற்றது. அப்பள்ளத்தாக்கின் வழியே காவிரியாறு பாய்கின்றது. பள்ளத்தாக்கின் நான்காம் பக்கத்தில் காவிரியாற்றின்மீது கட்டப்பட்டுள்ள அணையே மேட்டூர் அணை எனப்படுவது.

3. இந்த அணையைப்பற்றிய விவரங்களை அறியுமுன் காவிரியாற்றின் போக்கைப்பற்றி அறிதல் நல்லது. காவிரியாறு குடகு நாட்டில் சஹ்யமலையில் தோன்றிச் சற்றேறக்குறைய ஐந்நூறு கல் தொலைவு பாய்ந்து வங்கக் கடலிற் கலக்கின்றது. குடகு நாட்டில் ஆனி, ஆடி, ஆவணி, புரட்டாசி மாதங்களில் மிகுந்த மழை பொழியும். அதனல் அக்காலத்தில் காவிரியாற்றில் நீர் கரைபுரண்டு ஓடும். காவிரி மைசூர் நாட்டிற் பாய்ந்து வருகையில் சிற்றாறுகள் சில அதனிற் கலக்கின்றன. காவிரி மேட்டூருக்கு அருகில் வந்தவுடன் அப்பகுதியில் ஐப்பசி முதல் தைத் திங்கள் வரை பெய்யும் மழையினல் வெள்ளப் பெருக்கம் மிகுதியாம். இங்ஙனம் பருவ காலங்களில் அங்கங்குப் பெய்யும் மழையினல் காவிரியாறு என்றும் வற்றாத நீர்ப் பெருக்கினை உடையதாக இருக்கின்றது.

---

* உல்லாசப் பிரயாணம். செலவு - பிரயாணம்.

4. பருவ காலங்களில் பெய்யும் மழை விடாமற் பெய்யுமாயின் ஆற்று வெள்ளம் பெருகி விளைச்சல் பாழ்படுவதுண்டு; வயல்கள் மணல் மேடுகளாக மாறிப் பயனற்றுப்போவதும் உண்டு. சில ஆண்டுகளில் பருவமழை தவறுவதாலும் எதிர்பார்க்கும் பொழுது பெய்யாததாலும் எந்த ஆறும் தன் முழுப்பயனையும் தர முடிவதில்லை. இக் குறைகளை நீக்கவே ஆற்றின் ஏற்ற பகுதிகளில் அணைகளைக் கட்டி நீரைத் தேக்கிவைத்துச் சிறிது சிறிதாகப் பயன்படுத்திக் கொள்வது வழக்கமாயிற்று. இந்த யோசனைப்படி அமைந்ததே மேட்டூர் அணை.

5. காவிரியாறு திருச்சிராப்பள்ளிக்கு மேற்கே காவிரி என்றும் கொள்ளிடம் என்றும் இரண்டாகப் பிரிந்து பாய்கின்றது. தஞ்சை ஜில்லாவின் சில பகுதிகளில் மழை இன்மையால் நிலங்கள் காய்வதையும் வெள்ளப் பெருக்கினால் கரைகள் உடைந்து பாழாவதையும் தடுக்கக் கொள்ளிடத்தில் 1836-இல் ஓர் அணை கட்டப்பட்டது. அது 'மேல் அணைக்கட்டு' எனப்பட்டது. அது கட்டப்பட்ட பிறகும் எதிர் பார்த்த அளவு பயன் உண்டாகவில்லை. காவிரியின் வெள்ளப் பெருக்கம் அணைக்கட்டையும் தாக்கிச் சேதப்படுத்தினது. அதனால் 1845-இல் காவிரியின் குறுக்கே ஓர் அணை கட்டப்பட்டது இவ்வணையும் எதிர் பார்த்த அளவு பயன் தரவில்லை. ஆதலால் காவிரியின் மேற்குப் பகுதியில் ஒரு தேக்கம் இருக்கவேண்டியது இன்றியமையாதது என்பதை அரசாங்கத்தார் உணர்ந்தனர். கர்னல் எல்லிஸ் என்பவர் காவிரியில் ஒரு பெரிய அணையைக் கட்டுவதற்குரிய திட்டமொன்றைத் தயாரித்தார். ஆயின், அஃது உடனே தொடங்கப்படவில்லை.

6. கர்னல் எல்லிஸ் தயாரித்த திட்டம் 1924-ஆம் ஆண்டில் கவனிக்கப்பட்டது. அப்பொழுது சென்னை மாநில அமைச்சராக இருந்த ஸர் சி. பி. இராமசாமி ஐயர் அவர்களது நன் முயற்சியால் அத்திட்டம் நிறைவேற இந்திய அமைச்சரது இசைவு கிடைத்தது; 1928-ஆம் ஆண்டில் அணைக்கட்டு வேலை தொடங்கப்பெற்றது.

7. மேட்டூரில் அணை கட்டத் தொடங்குவதற்கு முன் மேட்டூர் ஒரு நகரமாக்கப்பட்டது. அந்நகரத்திற்குத் தேவையான வசதிகள் அனைத்தும் அமைக்கப்பட்டன. சிவசமுத்திர நீர்வீழ்ச்சி மின் சார நிலையத்திலிருந்து மின் சாரம் கொண்டுவரப்பட்டு விளக்குகள் போடப்பட்டன.

அணை கட்டப் புதிய புதிய இயந்திரங்கள் தருவிக்கப்பட்டன. அணை கட்டி முடிய ஆறு ஆண்டுகள் ஆயின; ஆறே முக்கால் கோடி ரூபாய் செலவாயிற்று. மேட்டூர் அணை உலகத்துப் பெரிய அணைகளுள் ஒன்றாகக் கருதப் படுகிறது.

8. மேட்டூர் அணை ஏறக்குறைய ஒரு கல் நீளமுள்ளது; இருநூற்றுப் பதினான்கடி உயரமுள்ளது. இதனால் ஏற்பட்டுள்ள தேக்கம் அறுபது சதுரக்கல் பரப்புடையது. தேக்கத்தில் உள்ள தண்ணீர் முப்பத்து மூன்று கல் தொலைவுவரை ஆற்றில் எதிர்த்துப் பரவியுள்ளது. அணை மேற்பாகத்தில் இருபதடி அகலமும் அடிப்பாகத்தில் நூற்றெழுபது அடி அகலமும் உடையது.



9. அணையின்-உயரம் கடல் மட்டத்திற்கு மேல் 790 அடி ஆகும். அதனால் மூன்றாம் மதகு 770 அடி உயரத்தில் அமைக்கப்பட்டுள்ளது. மிகுந்த நீர்ப் பெருக்கம் காவிரியில் ஏற்படும் பொழுது இம்மூன்றாம் மதகின் கதவுகள் திறக்கப்பட்டு மிகுதியாகவுள்ள நீர் வெளியேற்றப்படும். இம்மதகு வரிசையை அடுத்து 720 அடி உயரத்தில் மற்றொரு மதகு வரிசை அமைந்துள்ளது. தேக்கத்தில் உள்ள தண்ணீர் மட்டம் 7 0 அடிக்குக் குறைந்து 720 அடிக்கு மேல் இருப்பின், இவ்வரிசையிலுள்ள கதவுகள் திறக்கப்

படும். அங்ஙனம் திறந்துவிடும் நீர் விளைநிலங்களுக்குப் பயன்படுமாறு செய்யப்பட்டுள்ளது. பருவ மழை தவறித் தேக்கத்தின் தண்ணீர்மட்டம் 720 அடிக்குக் கீழ்ச் செல்லுமாயின், அக்காலத்திலும் வயல்கட்கு முட்டின்றி நீரை உதவ மற்றொரு வரிசை மதகுகள் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வரிசை கடல்மட்டத்திற்கு 690 அடி உயரத்தில் அமைந்துள்ளது. இம்மதகுகள் அனைத்தும் மின்சாரச் சக்தியால் வேலை செய்கின்றன.

10. மேட்டூர் அணையினால் ஏற்படும் நன்மைகள் பல. இந்த அணை சேலம் நகரத்திற்குக் குடிநீரை வழங்குகிறது; தஞ்சை ஜில்லாவின் சில பகுதிகளை விளை டலன்களாக மாற்றியிருக்கிறது; ஏறக்குறைய மூன்று லக்ஷம் ஏக்கர் நிலத்தை 'நன்செய்' நிலங்களாக மாற்றியுள்ளது. பட்டு, பருத்தி நூல் ஆலைகளுக்கும், காகிதம் செய்யும் தொழிற்சாலைகட்கும் மேட்டூர் ஏற்ற இடம் என்பது கருதப்படுகிறது. சென்னைக்கும் மேட்டூருக்கும் இடையே உள்ள இடங்களில் மின்சார விளக்குகள் அமைக்க முயற்சி நடைபெற்று வருகிறது. நாட்கள் செல்லச் செல்ல இந்த அணையினால் மேலும் பல நன்மைகள் விளையலாம்.

### அரும்பொருள்

கல் - மைல். மாநிலம் - மாகாணம். இசைவு - சம்மதம். முட்டு இன்றி - தடை இல்லாமல்.

### பயிற்சி

I. விடை கூறுக:—

1. மேட்டூர் எங்கு அமைந்துள்ளது? அங்கு அணை கட்டுவதற்கு அமைந்துள்ள வாய்ப்பு யாது?
2. காவிரியாற்றின் தோற்றம்-போக்குப்பற்றி யாது அறிவீர்?
3. அணைக்கட்டு என்பது யாது?
4. மேட்டூர் அணை எங்ஙனம் அமைக்கப்பட்டுள்ளது?
5. அதனால் உண்டாகிவரும் நன்மைகள் யாவை?

II. 1. இப்பாடத்தின் ஒவ்வொரு பிரிவுக்கும் ஏற்ற தலைப்புத் தருக.
2. மேட்டூர் அணையைப்பற்றிக் காவிரியாறு கூறுவது போலக் கூறுக.
3. மேட்டூர் அமைப்பு—அணையின் அமைப்பு—அதன் பயன்கள் இக்குறிப்புகளைத் துணையாகக் கொண்டு ஒரு கட்டுரை வரைக.
4. வேறு சொல் கூறுக :—தூரம், வருடம், சம்மதம்.
5. எதிர்ச் சொல் தருக :—சிற்றாறு, இன்மை, பெருக்கம்.

## 8. மான் அரசு

[பஞ்ச தந்திரக் கதை]

1. கண்ணைக் கவரும் இயற்கை அழகு வாய்ந்த ஒரு மலைச்சாரலை அடுத்து மரங்கள் அடர்ந்த காடு ஒன்று இருந்தது. அக்காட்டின் ஒரு பக்கம் சிறிய ஆறு ஒன்று காணப்பட்டது. காட்டில் பலவகை மரங்கள் வளர்ந்து வானளாவி நின்றன. அக்காட்டில் கதிரவன் ஒளியைக் காண்பது அருமை. மலை மிகவும் உயரமானது. உயர்ந்த மலை முகட்டிலிருந்து அடிவாரம் வரை பலவகை மரங்களும் செடி கொடிகளும் பசுமைக் காட்சியை அளித்தன.

2. அம்மலைச் சாரலில் ஏறக்குறைய ஆயிரம் மான்கள் வாழ்ந்து வந்தன. அவை அனைத்திற்கும் 'அரசன்' என்ற முறையில் கலைமான் ஒன்று இருந்தது. அதன் பெயர் சுவேதன் என்பது. அது காண்பவர் கண்களையும் கருத்தையும் கவரத்தக்க பேரழகு வாய்ந்திருந்தது; வீரவுணர்ச்சி பெற்றது. அது தனது அரசுத் தன்மையை உணர்ந்து, தன் இனத்தைக் காப்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தது. அஃது எல்லா மான்களிடமும் அன்புடன் நெருங்கிப் பழகி வந்தது; மான் குட்டிகளை மிக்க அன்புடன் பாதுகாத்து வந்தது.

3. வெளிச்சம் இல்லாத அக்காட்டில் வேடர் பயம் இன்றி மான்கள் இன்பமாகக் காலம் கழித்து வந்தன. எப்பொழுதேனும் வேடர்கள் மலைச்சாரலில் காணப்படின் எல்லா மான்களும் காட்டிற்குள் ஓடிப் பதுங்கிவிடும்; வேடர்கள் மறைந்த பிறகு வெளிப்பட்டு மலைச்சாரலில் மேய்ந்தும் துள்ளி விளையாடியும் காலத்தைக் கழிக்கும்.

4. அவை இங்ஙனம் வாழ்ந்து வருங்காலத்தில் புதிய வேடன் ஒருவன் அம்மலைச்சாரலுக்கு வந்தான்; சில மான்கள் புல் மேய்தலையும் எஞ்சியவை விளையாடி மகிழ்ந்து இருத்தலையும் கண்டான்; சுவேதன் என்னும் மான் அரசினைக் கூர்ந்து கவனித்தான். அதன் அழகிய தோற்றம் அவன் உள்ளத்தைக் கவர்ந்தது. "இம்மான் நமது அரசனது அரண்மனையில் இருக்கத்தக்கது", என்று அவன் தனக்குள் கூறிக் கொண்

டான். பின்னர் அவன் அந்த மலைநாட்டிற்கு மன்ன னை வீரகேது என்பவனிடம் சென்று, "அரசே, நமது மலையை அடுத்த காட்டில் மான்கள் கூட்டமாக வாழ்கின்றன. அவற்றுக்கு 'அரசு' என்று மதிக்கத்தக்க கலைமான் ஒன்றைக் கண்டேன். அது பேரழகு பெற்றது; பார்த்து மகிழத்தக்கது" என்று கூறினன்.

5. மறுநாள் அரசன் தன் வீரர்களுடனும் வேடுவருட னும் மலைச்சாரலுக்குப் புறப்பட விரும்பினன். வீரர்களும் வேடுவருமாக ஓராயிரவர் அரண்மனைக்குமுன் அணி வகுத்து நின்றனர்; குறித்த நேரத்தில் அரசனுடன் மலைச் சாரலை அடைந்தனர். அவர்கள் தம்மை வேட்டையாட வந்தவர்கள் என்பதை மான்கள் உணர்ந்து, காட்டிற் பதுங்கின. உடனே அரசனுடைய ஆட்கள் காட்டிற் புகுந்து தேடத் தொடங்கினர்.

6. தனக்கும் தன் இனத்திற்கும் திடீரென்று ஏற் பட்ட துன்ப நிலைமையைச் சுவேதன் நன்கு உணர்ந்தது; காட்டிற்குள்ளும் ஆட்கள் புகுந்து தேடத் தொடங்கிவிட்ட தால் காட்டில் இருப்பது இயலவில்லை. மான் அரசு சிறிது நேரம் யோசித்தது; பின்னர்த் திடீரென ஆற்றின் பக்க மாக ஓடியது. ஆற்றோரம் ஆட்கள் காணப்பட்டிலர். உடனே மான் அரசு தன் இனத்துடன் அந்த ஆற்றங் கரையை அடைந்தது.

7. அப்பொழுது ஆற்றில் நீர் வேகமாகப் பாய்ந்து கொண்டிருந்தது. ஆற்றின் அகலம் சிறிதளவே ஆயினும் அதனை நீந்திக் கடத்தல் எல்லா மான்களுக்கும் எளிதன்று. மேலும் சிறிய குட்டிகள் பல அக்கூட்டத்தில் இருந்தன. ஆயினும் சுவேதன் எப்பாடுபட்டாவது தன் இனத்தைக் காக்கத் துணிந்தது. அதனல் அஃது ஆற்றிற் குதித்து நடுவில் நின்றுகொண்டது. அப்பொழுது அதன் தலையும் முதுகுமே நீர் மட்டத்திற்குமேல் தெரிந்தன.

8. மான்கள் ஒன்றன்பின் ஒன்றாகச் சுவேதன் முது கில் தம் முன்கால்களை ஊன்றித் தாவிக் குதித்து அக் கரையை அடைந்தன. இங்ஙனம் ஆயிரம் மான்களும்

அதன் முதுகின்மீது குதித்துக் கால்களை ஊன்றி அழுத்தித் தாவிக் குதித்ததனால் சுவேதனது முதுகு எலும்பு முறிந்துவிட்டது. முதுகின் மேல்தோல் கிழிந்து உதிரம் பெருகிக்கொண்டிருந்தது. ஆயினும் சுவேதன் தன் துன்பத்தைப் பொருட்படுத்தவில்லை. தன் உயிரைத் தந்தேனும் தன் இனத்தைக் காக்கவேண்டும் என்று அது விரும்பியது.

9. இறுதியாக ஒரு மான்குட்டி சுவேதன் முதுகின் மீது குதித்தது. ஆயின் மறுகரை சேர அதனால் முடியவில்லை. அதனை உணர்ந்த சுவேதன் அக்குட்டியைத் தன் முதுகின்மீது சுமந்துகொண்டே மெதுவாக நீந்திச் சென்றது. மான் குட்டி சுகமாக அக்கரையை அடைந்தது. ஆனால் அடுத்த வினடி சுவேதன் அக்கரைமீது விழுந்து இறந்தது.



10. தங்களைக் காத்தற்பொருட்டுத் தங்கள் மான் அரசு தன்னுயிரைத் தியாகம் செய்தது கண்டு ஆயிரம் மான்களும் கண்ணீர் வடித்தன; ஒவ்வொன்றாக அதன் அருகிற் சென்று அதனைப் பரிவோடு முத்தமிட்டன;

அதனைவிட்டுப் பிரிய மனம் இல்லாமல் மிக்க வருத்தத்துடன் நின்றிருந்தன.

11. இந்நிகழ்ச்சிகள் அனைத்தையும் வேந்தனும் வில்லாளரும் தூரத்திலிருந்து இமைகொட்டாது கவனித்துவந்தனர். அவர்கள் ஆற்றின் அருகில் வருவதைக் கண்டதும் மான்கள் மருண்டு ஓடத்தொடங்கின. அரசன் தன் வீரர்களைப் பார்த்து, "அஃறிணைப் பொருளாகிய இம்மான் அரசு தன் இனத்தைக் காக்கப் பட்டபாட்டைப் பார்த்தீர்களா? இது தன் இனத்தைக் காக்கத் தன் உயிரையே தியாகம் செய்தது! ஆபத்துக்காலத்தில் அரசன் தன் குடிகளை எங்ஙனம் காத்தல்வேண்டும் என்பதை இம்மான் அரசு தன் செயலிற் காட்டிவிட்டது" என்று கூறி வியப்புற்றான். பின்னர் அவன் தான் இருந்த கரைக்கு அதன் உடலைக் கொண்டுவரச் செய்து, அடக்கம் செய்தான்; அவ்விடத்தில் அதன் நினைவுக்காக அழகிய கட்டடம் ஒன்றைக் கட்டுவித்தான்.

### அரும்பொருள்

பரிவு - அன்பு. மருண்டு - அஞ்சி.

### பயிற்சி

I. விடை கூறுக:—

1. மான்கள் வாழ்ந்த இடச்சிறப்பினைக் கூறுக.
2. சுவேதன் தன் கடமையை எவ்வாறு ஆற்றி வந்தது?
3. வேடன் வேந்தனிடம் கூறியது யாது?
4. சுவேதன் தன் இனத்தை எவ்வாறு காத்தது?
5. அஃது எவ்வாறு தன்னைத் தியாகம் செய்தது?
6. அரசன் வியந்து கூறியது யாது?

II. இப்பாடச் செய்தியைச் சுவேதன் கூறுவது போலக் கூறுக.

III. மான்கள் வாழ்க்கை - மன்னவன் வேட்டை - மான் அரசின் தியாகம்—வேந்தன் வியப்பு—இத்தலைப்புகளைத் துணையாகக்கொண்டு ஒரு கட்டுரை வரைக.

IV. பொருள் கூறுக:—முகடு, எஞ்சியவை, பரிவு, மருண்டு.

V. எதிர்ச்சொல் கூறுக:—இயற்கை, புதிய, எளிது.

# 9. மாமல்லபுரத்துச் சிற்பங்கள்

1. இக்காலத்தில் மஹாபலிபுரம் என்று கூறப்படும் சிற்றூர் கி. பி. ஏழாம் நூற்றாண்டில் மஹா மல்லபுரம் என வழங்கியது. அக்காலத்தில் அது பெரிய துறைமுகப் பட்டினமாக விளங்கியது. அப்பட்டினம் காஞ்சியைத் தலை நகராகக் கொண்டிருந்த பல்லவ நாட்டிற்குத் துறைமுக நகரமாக இருந்தது. கி. பி. ஏழாம் நூற்றாண்டில் இருந்த பல்லவ மன்னருட் பெருவீரனாக விளங்கியவன் நரசிம்ம வர்மன் என்பவன். அவன் பகைவர் பலரை வென்று 'மஹா மல்லன்' என்று பெயர் பெற்றான். அவன் தன் துறை முக நகரத்தைப் பெரிதாக்கிச் சிறப்பித்து அதற்கு 'மஹா மல்லபுரம்' என்று பெயரிட்டான். அப்பெயர் 'மாமல்ல புரம்' என மருவியது; பின்னர் 'மஹாபலி ஆண்ட புரம்' என்று பொருள் கொள்ளப்பட்டு, 'மஹாபலிபுரம்' என வழங்கலாயிற்று.



கற்கோயில்கள்

2. மாமல்லபுரம் சிறந்த துறைமுகப் பட்டினமாக இருந்த காலத்தில் பல்லவர்கள் பாறைகளைக் குடைந்து கோவில்களை அமைக்கவும் சிறிய குன்றுகளைக் கோவில்களாக மாற்றவும் மலைப் பாறைகளில் இதிகாச-புராணக் காட்சிகளைக் காட்டும் சிற்பங்களைச் செதுக்கவும் தொடங்கினர். அவர்களுடைய இம்மூவகை முயற்சிகளையும் மாமல்ல புரத்திற் காணலாம். அவ்வேந்தர்கள் தங்கள் உருவங்களையும் தாங்கள் செதுக்குவித்த அல்லது குடைவித்த கோவில்களில் பொறித்துள்ளனர். மாமல்லபுரத்துக் கோவில்களில் பல்லவ வேந்தரான சிம்மவிஷ்ணு, மஹேந்திர வர்மன்,

மாமல்லனை நரசிம்ம வர்மன் முதலியவருடைய உருவங்கள் தனித்தும் அவர்தம் அரசமாதேவியர் உருவங்களுடனும் இருத்தலைக் காணலாம். இவை அனைத்தையும் கூர்ந்து கவனிப்பின், பல்லவர் காலத்துக் கோவில்களின் அமைப்பையும் சிற்பக்கலைச் சிறப்பையும் தெளிவாக அறியலாம்.

3. மாமல்லபுரத்தில் உள்ள 'பஞ்ச பாண்டவர் தேர்கள்' என்று சொல்லப்படுவன தேர்கள் அல்ல. அவை தனித்தனிக் கற்கோவில்கள் ஆகும். அவை 'ஒற்றைக் கல் கோவில்கள்' எனப்படும். ஒரு சிறிய குன்றைக் கோவிலாகத் தோற்றும் படி மாற்றி அமைப்பது என்பது எளிதான வேலையா? எண்ணிப்பாருங்கள். அக் கோவில்கள் ஐந்திலும் தருமராசர் தேர் என்பதே பெரியது; சிறந்த சிற்ப வேலைப்பாடு அமைந்த மூன்று அடுக்குகளை உடையது; ஒவ்வோர் அடுக்கைச் சுற்றிலும் மாடப்புரைகள் உள்ளன. அவற்றில் அழகிய வடிவங்கள் பல செதுக்கப்பட்டுள்ளன. இரண்டாம் அடுக்கின் நடுவில் உள்ள மாடப்புரை போன்றது தான் கோவிலின் கருவறை. மாடப்புரையின் அடியில், கையில் முருகக் கடவுளை வைத்துள்ள பார்வதியுடன் கூடிய சிவபெருமான் உருவம் செதுக்கப்பட்டுள்ளது. அதன் இடப்பக்கம் நான்முகன் உருவமும் வலப் பக்கம் திருமால் உருவமும் செதுக்கப்பட்டுள்ளன.


நரசிம்ம வர்மன்

இரண்டு தேர்களை அடுத்து யானையும் சிங்கமும் பாறைகளில் தனித்தனியே செதுக்கப்பட்டுள. இரதங்களின் சுற்றுப்புறக் கற்சுவர்களில் தூண்களுக்கு இடையில் செதுக்கப்பட்டுள்ள சிற்பங்கள் கவனிக்கத்தக்கவை. அவை கி. பி. ஏழாம் நூற்றாண்டுச் சிற்பத் திறனை விளக்கி

நிற்பவை; அக்கால மக்கள் உடை, நகை, முடி முதலிய பலவற்றை நமக்கு உணர்த்துபவை. அவ்வுருவங்களுட் சில, முன் சொன்ன மஹேந்திர வர்மன், நரசிம்ம வர்மன் முதலிய வேந்தர்களை உணர்த்துவனவாகும்.



சிம்ம விஷ்ணு

4. மாமல்ல புரத்து ஆதிவராஹர் கோவிலில் உள்ள கற்சிலைகள் கண்டு மகிழத்தக்கவை. ஒரு பக்கத்தில் சிம்ம விஷ்ணு அரியணையில்வீற்றிருக்கிறான். அவனது இடக்கால் அரியணைமீது மடங்கியுள்ளது. வலக்கால் நிலத்தில் படிந்துள்ளது. அவனது இடக்கை இடத் தொடைமீது வைக்கப்பட்டிருக்கிறது; வலக்கை 'ஞான முத்திரை' நிலையில் உயர்த்தப்பட்டுள்ளது. அவ்வரசன் நீண்ட காதணிகளையும் கழுத்தணிகளையும் அணிந்துள்ளான். அவன் தலை மீது காணப்படுவது அரச முடி என்னலாம்.

5. ஆதிவராஹர் கோவிலில் மற்றொரு பக்கத்தில் சிம்ம விஷ்ணு மகனான மஹேந்திரவர்மன் உருவம் செதுக்கப்பட்டுள்ளது. மஹேந்திரவர்மன் நிற்கின்றான். அவனது அரச முடி, காதணிகள், கழுத்தணி என்பவை சிம்ம விஷ்ணு அணிந்திருப்பவை போன்றனவே ஆகும். உடல் அமைப்பில் மஹேந்திரன் தன் தந்தையினும் பருத்துக் காணப்படுகிறான். அவனது எடுப்பான தோற்றம் அவன் கருதியதை முடிக்கும் ஆற்றல் உடையவன் என்பதை உணர்த்துகிறது. அவன் வலக்கை கோவிலின் கருவறையைச் சுட்டுகிறது; மற்றொரு கை தொங்கவிடப்பட்டுள்ளது.

6. இனி, இதிகாச-புராண நிகழ்ச்சிகளைக் குறிக்கும் சிற்பங்களைக் கவனிப்போம்: இவற்றுள் சிறப்பாகக் குறிக்கத் தக்கது பகீரதன் தவத்தைக் குறிக்கும் சிற்பம் ஆதம். அச்சிற்பம் ஏறக்குறைய நூற்றைம்பதுக்கு மேற்பட்ட உருவங்களைக் காட்டுகிறது. இருபுறங்களிலும் பெரிய பாறைகளால் அடைக்கப்பட்டு, அவற்றின் நடுவே தோன்றும் பெரிய பிளவு ஒன்றும், அப்பிளவில் நாகர், நாகக் கன்னியர் உருவங்களும் காணப்படுதல் சிற்பத்தின் சிறந்த பகுதியாகும். முன் சொன்ன பிளவு இயற்கையாகவே மழைநீர் பாயும் ஓர் அருவியின் வழியாகும். அது கங்கை வானத்திலிருந்து இறங்குவதைக் குறிப்பதாகும். மழைக் காலத்தில் அப்பிளவின் வழியாகப் பாயும் நீர், 'கங்கை இது போல உலகிற்கு வந்தது' என்பதை உணர்த்த இன்றளவும் பயன்படுகின்றது. சிற்பத்தின் அடிப்பகுதியில் காணப்படும் கோவிலின் அருகில் ஒரு காலில் நின்று தவம் செய்பவன் பகீரதன் என்றும் அவனுக்கு மேலுள்ள உருவம் சிவபிரானைக் குறிப்பதென்றும் பிற வடிவங்கள் தேவர், முனிவருடையன என்றும் ஆராய்ச்சியாளர் சிலர் கூறுகின்றனர். பிராமணன் ஒருவன் தண்ணீர்க்குடத்தைத் தோள்மீது சுமந்து போதல் - மான் ஒன்று நீர் அருந்த ஆற்றண்டை வருதல் - ஆற்றுக்கு மேற்புறம் இரண்டு அன்னப்பறவைகள் ஆற்றில் வீழ்ந்து நீராட நிற்றல் - கீழ்ப்புறம் உள்ள கோவிலைச் சுற்றி முனிவர் பலர் இருந்து தவம் செய்தல் - அவர்களைப் பார்த்துப் பூனை ஒன்று பின்னங்கால்கள்மீது நின்று முன்னங்கால்களைத் தலைக்குமேல் சேர்த்து யோக நிலையில் இருத்தல் - அதனைக்கண்ட எலிகள் அச்சமற்று அன்பு கொண்டு அதனைப்



மஹேந்திர வர்மன்

பணிதல் - ஆகிய இக்காட்சிகள் விழிகட்கு விருந்தளிப்பன அல்லவா?

7. மகிஷாசுர மண்டபம் என்பது ஒன்று. அதன் சுவரில் பலவகைப் போர்க் கருவிகளைத் தாங்கிய எட்டுக் கரங்களுடன் துர்க்கையம்மன் பாயும் சிங்கத்தின்மீது ஏறி, எருமைத்தலை அசுரனைக் கொல்வது போலச் செதுக்கப்பட்டுள்ள சிற்பம் மிக்க வேலைப்பாடு கொண்டது. அதற்கு எதிரில் உள்ள திருமாலின் 'சேஷ சயனம்' மிக நுண்ணிய வேலைப்பாடு கொண்டது. நிலமகளை அணைத்துக்கொண்டு ஆதிசேடன் தலையில் ஓர் அடியை ஊன்றித் தேவர்களின் துதியைக் கேட்டபடி நிற்கும் திருமாலின் ஆதிவராஹ அவதாரச் சிற்பம் விழிகட்கு விருந்தளிப்பது. மாமல்லபுரத்தில் இத்தகைய அழகிய சிற்பங்கள் பல உண்டு. நீங்கள் அவற்றைக் கண்டு களிக்கவேண்டும்; ஆயிரத்து முந்நூறு ஆண்டுகட்கு முன் நம் முன்னோர் சிற்பக்கலையில் பெற்றிருந்த பயிற்சியை அறிந்து பெருமை கொள்ள வேண்டும்.

### அரும்பொருள்

சிற்பம் - கல்லில் உருவங்களைச் செதுக்கி அமைத்தல். பட்டினம் - கடற்கரையை அடுத்த நகரம். பட்டணம் - உள் நாட்டு நகரம். இதிகாசங்கள் - இராமாயணம், பாரதம் முதலியன. புராணம்—பழைய வரலாறு. கருவறை = கரு அறை - மூர்த்தம் வைக்கப்படும் அறை, மூலஸ்தானம். எடுப்பான—கம்பீரமான. ஆதிசேடன்—ஆயிரம் தலைகளையுடைய பெரிய பாம்பு என்று நூல்கள் கூறும்.

### பயிற்சி

I. விடை தருக:—

1. மாமல்லபுரம், மஹாபலிபுரம் என்று பெயர்கள் வரக் காரணங்கள் யாவை?
2. மாமல்லபுரத்தில் காணப்படும் அதிசயப் பொருள்கள் எவை?
3. பகீரதன் தவத்தை உணர்த்தும் சிற்பச் சிறப்பினை விளக்குக.
4. சேஷ சயனம், ஆதிவராக அவதாரம் இவற்றை உணர்த்தும் சிற்பங்களைப் பாராட்டி வரைக.
5. இச்சிற்பங்களைக்கொண்டு நாம் உணரத்தகுவன யாவை?

II. இப்பாடச் செய்தியை மஹா மல்லன் கூறுவதுபோலக் கூறுக.

III. வாக்கியங்களில் அமைக்க:—சிற்பக் கலை, தோற்றும்படி, கற்சிலை, எடுப்பான, கருவறை.

IV. ஒற்றைக்கல் கோவில்கள், தனிப்பட்ட உருவச் சிலைகள், இதிகாச—புராணச் சிற்பங்கள், சிற்பங்களால் நாம் பெறும் அறிவு : என்னும் இக்குறிப்புகளின் துணையைக்கொண்டு ஒரு கட்டுரை வரைக.

# 10. இந்தியாவுக்கு வழிகண்ட வீரர்

1. ஐரோப்பாக் கண்டத்தின் வரலாற்றில் கி. பி. பதினைந்தாம் நூற்றாண்டு ஒரு சிறந்த காலமாகும். அந்த நூற்றாண்டில் கல்வி, தொழில், சமயம், அரசியல் முதலிய துறைகளில் மக்கள் புத்துணர்ச்சி கொண்டனர்; கடல் கடந்து பல புதிய நாடுகளைக் காண வேட்கை கொண்டனர்; அம்முயற்சியில் ஈடுபட்டுப் பல இன்னல்களுக்கு உட்பட்டுப் புதிய நாடுகளைக் கண்டறிந்தனர். அங்ஙனம் அப்பெருமக்கள் உழைத்துப் பெற்ற வெற்றியே இன்று உலகெங்கும் ஐரோப்பியர் நிறைந்திருப்பதற்குக் காரணமாகும்.

2. இந்தியாவின் செல்வவளத்தைப்பற்றிப் பல கதைகள் பல நூற்றாண்டுகளாக ஐரோப்பாவில் வழங்கிவந்தன. அதனால் கலைகளில் புத்துணர்ச்சி பெற்ற பதினைந்தாம் நூற்றாண்டு ஐரோப்பியர் இந்தியாவைக் காண ஆவல் கொண்டனர். ஆயின் அக்காலத்தில் அராபியர் மத்திய தரைக்கடல், செங்கடல் முதலிய பகுதிகளில் ஆதிக்கம் பெற்றிருந்தமையின் இந்தியாவிற்கு உரிய நிலவழி அவர்கட்கு மறுக்கப்பட்டது. அதனால் ஐரோப்பியர் கடல் வழியாக இந்தியாவை அடைய முயற்சி செய்யலாயினர்.

3. இந்தியாவைக் கண்டுபிடிக்க முதன் முதல் புறப்பட்ட டயாஸ் என்ற போர்ச்சுகீசியர் ஆப்பிரிக்காவின் தென்கோடியைக் கண்டார்; அதற்கு அப்பாற் செல்ல புயற்காற்று இடந்தரவில்லை; அதனால் அந்த முனைக்குப் 'புயல் முனை' என்று பெயரிட்டுத் திரும்பினர். அவரது முயற்சியைப் பாராட்டிய போர்ச்சுகல் நாட்டு அரசர் 'புயல் முனையை' 'நன்னம்பிக்கை முனை' என்று அழைத்தனர்.

4. கிறிஸ்தபர் கொலம்பஸ் என்பவர் இந்தியாவைக் கண்டறிய விரும்பி, வழி அறியாது மேற்கே சென்று அமெரிக்கா என்னும் புதிய உலகத்தைக் கண்டறிந்தார்.

5. அக்காலத்தில் போர்ச்சுகல் நாட்டு மன்னராக இருந்த டாம் மான்யுவெல் என்பவர் இந்தியாவை எப்பாடுபட்டேனும் கண்டறிதல் வேண்டும் என்று முடிவுசெய்தார்; பிரயாணத்திற்குரிய கப்பல்களைக் கட்டி முடித்தார்; தம் கருத்தை முற்றுவிக்கத்தக்க வீரனைத் தந்தருளுமாறு கடவுளை வேண்டினர். அவர் ஒருநாள் தம் அமைச்சருடன்

பேரவையில் இருந்தார். அப்பொழுது ஒருவர் அப்பேரவை மண்டபத்தின் குறுக்கே சென்றார். அரசர், 'நமது சபா மண்டபத்தில் நாம் இருக்கும்பொழுதே அஞ்சாது குறுக்கே செல்லும் இவன் வீரனாக இருத்தல் வேண்டும். இவனே இந்தியாவைக் கண்டுபிடிக்கத் தக்கவன்' என்று நினைத்தார்; உடனே அப்புதிய மனிதரை அழைத்துத் தம் கருத்தைத் தெரிவித்தார். அப்புதிய மனிதர் அரசர் விருப்பத்தை நிறைவேற்ற ஒப்புக்கொண்டார். அவர் யார்?

6. அவரே வாஸ்கோ-ட-காமா என்பவர்; அஞ்சா நெஞ்சமும் விடா முயற்சியும் மனவுறுதியும் கொண்டவர். அவரது பிரயாணத்திற்காக நான்கு கப்பல்கள் தயாராயின. காமா முதல் நாள் இரவு முழுவதும் கோவிலிலிருந்து பிரார்த்தனை செய்தார்; மறுநாட்காலை அவரும் அவருடன் செல்ல இருந்த மாலுமிகளும் நகரத் தெருக்களில் ஊர்வலமாகச் சென்றனர். நகரமாந்தர் அவர்களுடன் கடற்கரைக்கு வந்து வாழ்த்துக் கூறி வழியனுப்பினர்.



வாஸ்கோ-ட-காமா

7. கப்பல்கள் ஆப்பிரிக்காவின் மேற்கே தெற்கு நோக்கிப் பிரயாணமாயின; வழியில் ஓர் இடத்தில் பெரும் புயற் காற்றுக்கு அஞ்சிக் கரை ஓரத்தை விட்டு விலகிச் சென்றன; அப்பொழுது வழி தெரியாமல் அட்லாண்டிக் பெருங் கடலில் நெடுந்தூரம் தென்மேற்காகச் சென்று விட்டன. அக்கப்பல்கள் இங்ஙனம் தொண்ணூற்றாறு நாட்கள் பெருங் கடலில் அலைந்து திரிந்து முடிவில் நன்னம்பிக்கை முனையை அடைந்தன.

8. கப்பல் பிரயாணிகள் கலக்கம் கொண்டனர்; ஊர் திரும்பி விடலாம் என்று காமாவுக்கு யோசனை கூறினர். காமா அவர்களை ஊக்கப்படுத்திப் பிரயாணத்தைத் தொடங்கினர்; ஆப்பிரிக்காவின் கீழ்க்கரை ஓரமாகச் சென்று, அக்கரையோர நாட்டுக்கு 'நேட்டால்' என்று பெயரிட்டார்; அப்பகுதியில் ஒரு மாதகாலம் தங்கியிருந்

தார்; பிறகு 'மொஜாம்பக்' என்னும் தீவை அடைந்தார். காமா அங்கு அராபியருக்கு உரிய நான்கு மரக்கலங்களைப் பார்த்தார்; அவற்றில் பொன், வெள்ளி, மிளகு, கிராம்பு, இஞ்சி, பவழம் முதலியவற்றைக் கண்டார்; அவை இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்டன என்பதை அறிந்தார்; இந்தியாவுக்குச் செல்லும் வழியை அராபிய வாணிகரைக் கேட்டறிந்தார்; ஊக்கம் கொண்டு தமது பிரயாணத்தை மேலும் தொடர்ந்து செய்தார்.




9 மேலே வானம்-கீழே முரட்டு அலைகள்-நாற்புறங்களிலும் ஆழமான கடற்பகுதிகள் ஆகிய இக்காட்சியை நாள்தோறும் காணக்காணக் கப்பல் பிரயாணிகள் கவலை கொண்டனர்; 'இந்தியாவை நோக்கித்தான் செல்லுகிறோமோ! நமது இறுதியை நோக்கித்தான் செல்லுகிறோமோ!' என்று முணுமுணுத்தனர். காமா அவர்கட்கு ஆறுதல் சொல்லிக்கொண்டே வந்தார்; இங்ஙனம் பல நாட்கள் பிரயாணம் செய்து,—1496-ஆம் ஆண்டு ஜூன் மாதம் போர்ச்சுகலைவிட்டுப் புறப்பட்டுப் பதினொரு மாதங்கட்குப் பிறகு*—அதன் இந்தியாவின் சிறந்த துறைமுகப் பட்டினமான கள்ளிக்கோட்டையை அடைந்தார்; உடனே தம் கருத்தை முற்றுவித்த கடவுளுக்கு வணக்கம் செலுத்திக் கப்பலைவிட்டு இறங்கினர்.

*21-5-1497

10. காமா தம் துணைவர்களுடன் தம் நாட்டுக் கொடியைப் பிடித்துக்கொண்டு அரண்மனை வாயிலை அடைந்தார்; ஆயின் உடனே அரசரைக் காண இயலவில்லை; ஏழு நாட்கள் கழிந்த பிறகே அரசரைக் கண்டார்; கள்ளிக் கோட்டை அரசர்முன் தம் அரசர் சிறப்பினைக் கூறி அவர் அனுப்பிய பொருள்களைக் காணிக்கையாக வைத்தார்; வாணிகம் செய்யத் தமக்கு அநுமதி வேண்டும் என்று வேண்டினர். தாராள மனப்பான்மையுடைய அரசர் அதற்கு இசைந்தார்.

11. பின்னர்க் காமா போர்ச்சுகலுக்குத் திரும்பினர். அவரது வருகை சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. காமா வெற்றி பெற்றதை அரசர் பாராட்டி, ஆண்டு ஒன்றுக்கு உபகாரச் சம்பளமாக மூவாயிரம் டக்கட்டுகளையும் அளித்து வர ஏற்பாடு செய்தார்.

12. இங்ஙனம் அரும்பாடுபட்டு இந்தியாவுக்குக் கடல் வழியைக் கண்டுபிடித்த காமாவுக்கு நாகரிக உலகம் நன்றி செலுத்திவருகிறது. அவர் காட்டிய வழியில் போர்ச்சுகீசியர், டச்சுக்காரர், பிரஞ்சுக்காரர், ஆங்கிலேயர் என்பவர் நம் நாட்டிற்கு வந்து வாணிகம் செய்யத் தொடங்கினர்.

### அரும்பொருள்

புத்துணர்ச்சி-புதிய உணர்ச்சி. வேட்கை-தாகம், ஆசை. பேரவை-பெரிய சபை, இங்கு அரச சபை. இறுதி-முடிவு, அழிவு. டக்கட்—போர்ச்சுகல் ரூபாயின் பெயர்.

### பயிற்சி

I. விடை தருக:—

1. இந்தியாவைக் கண்டுபிடிக்க முயன்றவர் யாவர்? அவர்கள் முயற்சி யாதாயிற்று?
2. வாஸ்கோ-ட-காமா செய்த பிரயாண விவரத்தை விளக்கி வரைக.
3. காமா கள்ளிக்கோட்டை அரசனிடம் பெற்றது யாது?
4. அவரை நாகரிக உலகம் மறக்கமுடியாது-ஏன்?

II. காமாவும் போர்ச்சுகல் அரசரும்-காமாவின் கடற்பிரயாணம்-முயற்சியில் வெற்றி: இக்குறிப்புகளைக் கொண்டு ஒரு கட்டுரை வரைக.

III. காமாவின் கடற்பிரயாணத்தை (உத்தேசமாகப்) படம் வரைந்து காட்டுக.

IV. வாக்கியங்களில் அமைக்க:— புத்துணர்ச்சி, ஆட்டிட்டு, அஞ்சா நெஞ்சம், விடா முயற்சி, மனவுறுதி, தாராள மனப்பான்மை.

V. பாடத்தின் ஒவ்வொரு பிரிவிற்கும் ஏற்ற தலைப்புத் தருக.

# 11. புலவர் குணநலன்கள்

## I

### 1. புலவர் மான உணர்ச்சி

1. இன்றைய சேலம், *கோவன்புத்தூர், நீலகிரி ஜில்லாக்கள் பழைய காலத்தில் கொங்கு நாடு எனப்பட்டது. சேலம் ஜில்லாவில் இன்றைய தர்மபுரியை அடுத்த அதமன் (அதியமான்) கோட்டை என்னும் பகுதி பழைய காலத்தில் தகடூர் எனப்பட்டது. அத்தகடூரில் அதியமான் நெடுமான் அஞ்சி என்ற சிற்றரசன் சங்ககாலத்தில் வாழ்ந்துவந்தான். அவன் தமிழ்ப்புலவரைப் போற்றி ஆதரித்தான்; கூத்தர், பாணர் முதலியோருக்கும் வரையாது வழங்கினன். அவன் புகழ் தமிழகம் முழுவதும் பரவியது.

2. ஔவையார் கொங்குநாட்டுப் புலவருள் ஒருவர்; பெண்பாலர்; பாணர் மரபினர். அவர் அஞ்சா நெஞ்சம் பெற்றவர்; பல ஊர்களுக்குச் சென்று வள்ளல்களைப் பாடிப் பரிசில் பெற்றவர். அவர் தகடூர் அதியமான் புகழைக் கேள்வியுற்றார்; தேன் நிறைந்த மலரை நாடி வண்டுகள் செல்வது போலப் புலவர் அதியனது கொடைச் சிறப்பைக் கேள்வியுற்றுப் போவதை அறிந்தார்; தாமும் அவனைக்கண்டு பாடிப் பரிசில் பெற விரும்பித் தகடூரை அடைந்தார்.

3. ஔவையாரது புலமையை முன்னரே கேள்வியுற்றவன் ஆதலின், அதியமான் அவரை அன்புடன் வரவேற்று இன்னுரை புகன்றான்; உளம் மகிழ உணவிட்டான்: ஆனால் எக்காரணம் கொண்டோ பரிசில் தாராது நீட்டித்தான். ஔவையார் அவன் உள்ளக் கருத்தை உணரவில்லை; தம் தகுதி உணர்ந்து அவன் உடனே பரிசில் தந்து அனுப்பவில்லை என்று எண்ணினர். அதனால் அவருக்குச் சினமும் வருத்தமும் தோன்றின. அவர் அரண்மனை வாயிலைக் கடந்து வெளியேற விரும்பினர்.

---

*கோவன் என்பவன் அமைத்த புதியவூர் (புத்தூர்) ஆதலின் கோவன் புத்தூர் எனப் பெயர் பெற்றது. இப்பெயரே கோயம்புத்தூர் என வழங்குகிறது.

அப்பொழுது வாயிற்காவலன் ஒருவன் அங்கு நின்றிருந்தான். ஔவையார் சினம் பொங்க அவனைப் பார்த்து,

"வாயில் காப்போய், வாயில் காப்போய், புலவர்கள் நிரம்பப் படித்தவர்கள். அவர்கள் கொடையாளிகளை அடைந்து தம் புலமையைக் காட்டிப் பரிசில்பெற்று வாழ்க்கை நடத்துபவர்கள். அத்தகைய புலவருள் நான் ஒருத்தி. நின் அரசன் அறிஞன். ஆயினும் அவன் தன் நிலையை உணர்ந்தவனாகத் தெரியவில்லை;என் தகுதியையும் வறிய நிலையையும் அறிந்தவனாகவும் தெரியவில்லை; பரிசில் கொடாது காலம் தாழ்த்துகிறான். என்போன்ற புலவர்க்கு வேறு வள்ளல்கள் கிடைக்கமாட்டார்களோ? தமிழகத்தில் அறிவும் புகழும் உடையோர் இருக்கின்றனர்; அவர்கள் மறைந்துவிடவில்லை. நான் அப்பெருமக்களிடம் செல்வேன்; செல்லும் இடமெல்லாம் சிறப்புப் பெறுவேன்,"

என்று கூறி வழி நடக்கலானார். இதிலிருந்து அவரது மான வுணர்ச்சி நன்கு விளங்குகிறதன்றோ?

## II

### புலவரது அச்சமற்ற பேச்சு

1. பெருந்தலைச் சாத்தனார் என்ற புலவர் ஏறக்தாழ ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகட்கு முற்பட்டவர். அவர் காலத்தில் கொங்கு நாட்டில் குமணன் என்ற வள்ளல் முதிரமலை நாட்டை ஆண்டுவந்தான். புலவர் அவனிடம் சென்று பரிசில் பெற்றார்; பின்னர்ப் பல வள்ளல்களைக் கண்டு பாடிச் சிறப்புப் பெற்றார்.

2. அவர் ஒருநாள் தோட்டிமலைத் தலைவனும் சிறந்த கொடையாளியுமான கண்டீரக்கோப் பெருநள்ளி என்பவன் தம்பியைக் காணச் சென்றார். அவன் பெயர் இளங் கண்டீரக்கோ என்பது. அவனுடன் நன்னன் என்ற வள்ளலது மரபில் வந்த இளவிச்சிக்கோ என்பவன் உடன் இருந்தான். புலவர் முன்னவனைக் கண்டதும் தழுவிக் கொண்டார். பின்னவனைத் தழுவாது எட்டி நின்றார். பின்னவன் வருத்தத்துடன், "புலவரே, என்னைத்

தழுவாமைக்குக் காரணம் யாது?" என்று கேட்டான். உடனே புலவர் அவனை நோக்கி,

3. "யான் இவனைத் தழுவினமைக்கும் உன்னைத் தழுவாமைக்கும் தக்க காரணங்கள் உண்டு. அவற்றைக் கூறுவேன், கேட்பாயாக: இந்த இளங்கண்டீரக்கோ அருளே உருவம் எடுத்து வந்தாற்போன்ற வள்ளல்கள் மரபில் வந்தவன். இவன் மரபைச் சேர்ந்த பெண்மணிகள், தம் கணவர் அரண்மனையில் இல்லையாயினும், அவர்களைத் தேடிவந்த பரிசிலர்க்கு அறுசுவை உண்டி அன்புடன் அளித்து, பரிசிலர் மனம் உவக்குமாறு பரிசில்கள் நல்கும் நல்ல பழக்கம் உடையவர்கள்; ஆதலால் இவனைத் தழுவினேன்.

4. "நீயோ பரிசிலரைப் பரிவுடன் உபசரித்து அவர்கள் விரும்பின எல்லாம் விருப்புடன் அளித்துவந்த நன்னன் என்ற வள்ளல் மரபில் வந்தவன். ஆயினும் அந் நன்னன் செய்த கொடுஞ்செயல் ஒன்றைக் கூறுவேன், கேள்: அவனுக்கு உரிய சோலையில் இருந்த மரத்தின் பசிய காய் ஒன்று அருகில் பாய்ந்துகொண்டிருந்த ஓடை நீரில் விழுந்து மிதந்து சென்றது. அப்பொழுது அந்நீரில் நீராட வந்த சிறுமி ஒருத்தி அதனை எடுத்து உண்டாள். அதனை உணர்ந்த நன்னன் அவளைக் கொல்ல ஆணையிட்டான். அவள் தந்தை தன் மகள் செய்த தவற்றுக்காக எண்பத்தொரு யானைகளும் அவளது நிறையளவு பொன்னாற் செய்த பாவை ஒன்றும் தருவதாகக் கூறித் தன் மகள் உயிரைக் காக்குமாறு வேண்டினன். நன்னன் அவ் வேண்டுகோளைப் பொருட்படுத்தாமல் அச்சிறுமியைக் கொன்றான். உன் முன்னோருள் மற்றொருவன் உலோப குணம் மிக்கவன்; புலவர் பாணர் முதலிய பரிசிலர் செல்லின், வாயிற் கதவுகளை அடைத்துவிடும் பழக்கம் உடையவன். இத்தகையவர் தீய செயல்கள் உன் மரபுக்கு வசையாக இருந்துவருகின்றன. ஆதலால் உங்கள் மலையைப் புலவர்கள் பாடுவதில்லை," என்று கூறி முடித்தார். பெருந்தலைச் சாத்தனாரது அச்சமற்ற - அழுத்தமான பேச்சினைப் பார்த்தீர்களா?

## அரும்பொருள்

சங்க காலம்-கி. பி. 400-க்கு முற்பட்ட காலம். அறுசுவை - உவர்ப்பு, கார்ப்பு, கைப்பு, புளிப்பு, இனிப்பு, துவர்ப்பு. பரிசிலர் - பரிசு பெறச் செல்பவர். வசை-பழி. பொருட்படுத்தாமல்-மதியாமல்.

## பயிற்சி

I. விடை தருக:—

1. கொங்குநாடு எது?
2. அதியமான் நல்லியல்புகள் யாவை?
3. ஔவையார் அவன்மீது சினங்கொள்ளக் காரணம் யாது?
4. அவர் வாயிற்காவலனை நோக்கி யாது கூறினர்?
5. அவர் மானவுணர்ச்சி உடையவர் என்பது எவ்வாறு தெரிகிறது?
6. பெருந்தலைச் சாத்தனர் இளங்கண்டீரக்கோவைத் தழுவினர். — ஏன்?
7. அவர் இளவிச்சிக்கோவைத் தழுவவில்லை—காரணம் என்ன?
8. அவர் அச்சமற்றவர் என்பது எதனுற் புலனுகிறது?

II. (1) முதற் பகுதியை ஔவையாரே கூறுவதுபோலக் கூறுக.

(2) முதற்பகுதியை அதியமான் கூறுவது போலக் கூறுக.

(3) பிற்பகுதியைப் பெருந்தலைச் சாத்தனர் கூறுவதுபோலக் கூறுக.

(4) பிற்பகுதியைப் இளவிச்சிக்கோ சொல்லுவதுபோலச் சொல்லுக.

III. வாக்கியத்தில் அமைக்க:—கேள்வியுற்று, பரிசில்பெற, வரவேற்று, வள்ளல், பொருட்படுத்தாமல்.

IV. பண்டைப் புலவர்களைப்பற்றிய உன் கருத்துகளை 15 வரிகளில் எழுதுக.

# 12 ஈழ நாடு

1. நமது தமிழ் நாட்டை அடுத்துத் தெற்கே இருக்கின்ற தீவு இலங்கைத் தீவு அல்லது ஈழ நாடு எனப்படும். நமது நாட்டை அடுத்துள்ள அந் நாட்டைப்பற்றிய விவரங்களை அறிதல் நமது கடமையாகும். ஈழநாடு தமிழ் நாட்டிற்கு மிக்க அண்மையில் இருக்கின்றது; தனுஷ்கோடியிலிருந்து ஏறக்குறைய இருபத்திரண்டு கல் தொலைவில் உள்ளது. அச்சிறிது தூரத்திலும் பெருங் கற்பாறைகள் தொடர்ந்து காணப்படுகின்றன. ஆதலின் ஈழ நாடு ஒரு காலத்தில் நம் நாட்டுடன் தொடர்புற்றதாக இருந்திருத்தல் வேண்டும் என்பது தெரிகிறது.

2. 'ஈழம்' என்னும் சொல் 'பொன்' என்னும் பொருளை உடையது. அதனுல், ஒரு காலத்தில் இத்தீவில் பொற்கனிகள் இருந்திருத்தல் வேண்டும் என்பது தெரிகிறது. இங்குப் பலவகை வாசனைப் பொருள்கள் விளைகின்றன. ஆதலின் இது 'கந்தத் தீவு' அல்லது 'வாசனைத் தீவு' எனவும் பெயர் பெறும்.

3. ஈழ நாடு நடுப்பாகம் உயர்ந்து மேடாயும் நாற்புறங்களிலும் தாழ்ந்து கடலை நோக்கிச் சரிவாயும் அமைந்துள்ளது. மேட்டுப் பகுதி மலைத் தொடர்களையும் அடர்ந்த காடுகளையும் பெற்றுள்ளது. மலைத் தொடர்களிலிருந்து ஆறுகள் தோன்றி நாற்புறங்களிலும் பாய்கின்றன. காடுகள் அழிக்கப்பட்டு இரப்பர்த் தோட்டங்களும் தேயிலைத் தோட்டங்களுமாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளன.

4. ஈழ நாடு இயற்கை வனப்பு வாய்ந்தது. நாடெங்கும் கடற்கரை ஓரங்களில் தென்னை, பனை, கமுகு முதலிய மரங்கள் வளமுற வளர்ந்துள்ளன. மலைப்பகுதி ஒழிந்த பிற இடங்களில் வேலிகள் உள்ள தோட்டங்களும் பயிரிடப்பட்ட விளைபுலன்களும் பச்சைக் கம்பளம் பரக்க விரித்தாற்போலக் காட்சி அளிக்கும் பசும்புல் தரைகளும் கண்ணையும் கருத்தையும் கவரத்தக்கன. மலைகளின் தாழ்வரைகளில் தேயிலைத் தோட்டங்கள் காணப்படும். அவை பெரும்பாலும் ஐரோப்பியர் வசமே உள்ளன. தேயிலைத்



வட மாகாணம்
திருக்கேதீச்சரம்
அனுராதபுரம்
மே.
ம.
கண்டி
ஆதாம் மலை
கொழும்பு
தெ. மா.
கதிர்காமம்
இந்திய சமுத்திரம்

87022

தோட்டங்களில் வேலை செய்பவரும் பெரும்பாலோர் நம் தமிழ் மக்களே ஆவர். அவர்கள் நம் தமிழ்நாட்டிலிருந்து பிழைப்பை நாடி அங்குச் சென்றவர்கள். காடுகளை அழித்த இடங்களில் இரப்பர்த்தோட்டங்கள் காட்சி அளிக்கின்றன. அவற்றில் நம்மவரும் ஈழ நாட்டுக்கே உரிய சிங்களவரும் வேலை செய்கின்றனர். இரப்பர்த் தொழில் வளர்ச்சிபெறுமாயின், ஈழ நாட்டு இரப்பர் இந்தியாவிற்குப் பெரிதும் பயன்படும்.

5. ஏலம், ஜாதிக்காய், வால்மிளகு, கிராம்பு முதலிய வாசனைப் பொருள்கள் ஈழ நாட்டில் மிகுதியாக உண்டாகின்றன. இப்பொருள்கள் இந்தியாவிற்கும் பிற நாடுகட்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. மலையின் பழைய கற்பாறைப் பகுதிகளில் புஷ்பராகம், வைரம், வைடூரியம், மாணிக்கம் முதலிய மணிவகைகள் கிடைக்கின்றனவாம். பென்ஸில் செய்வதற்கு உரிய ஒருவகைக் கல்லும் கிடைக்கின்றதாம்.

6. ஈழ நாட்டின் வடகோடிப் பகுதி யாழ்ப்பாணம் எனப்படும். திருக்கோணமலையைப் பெற்றுள்ள கிழக்குப் பகுதி கீழ் மாகாணம் எனப்படும். இந்த இரு மாகாணங்களிலும் தமிழர் தொகையே மிகுதி. பிற மாகாணங்களில் சிங்களவர் தொகை மிகுதியாகும். காடுகளிலும் மலைகளிலும் வேடர்கள் வாழ்கின்றனர். வாணிகத்தின் பொருட்டுக் குடியேறியுள்ள மக்களுட் பெருந்தொகையினர் முஸ்லிம்கள் ஆவர். சீனர், ஐரோப்பியர் முதலிய வேற்று நாட்டினர் மிகச் சிலரேயாவர். ஈழ நாட்டின் மக்கள் தொகை ஏறத்தாழ நாற்பத்தைந்து லக்ஷம் என்னலாம்.

7. ஈழ நாடு புத்தர் காலமுதலே சிறப்புற்றதாக இருந்ததாம். புத்தர் ஈழ நாட்டிற்கு மூன்றுமுறை வந்தனர் என்று ஒரு வரலாறு உண்டு. அசோகப் பேரரசரால் அனுப்பப்பட்ட பௌத்த சமயத் துறவிகள் ஈழ நாட்டில் பௌத்த சமயத்தைப் பரவச் செய்தனர்; பௌத்த மடங்கள் தோன்றின; பௌத்த சமயநூல்கள் பெருகின. இந்தியா, சீனம் முதலிய பல நாட்டுப் பௌத்தரும் போற்

றத்தக்க சிறந்த பௌத்த நாடாக ஈழ நாடு விளக்க முற்றது. ஈழ நாட்டின் தலைநகராக விளங்கிய அநுராதபுரத்தில் பழைய பௌத்த மடங்களை இன்றும் காணலாம். கண்டி நகரத்தில் உள்ள புத்தர் கோவில் மிக்க பெயர் பெற்றதாகும்.

8. ஈழ நாடு பௌத்த சமயத்திற்குப் பெயர் பெற்றாற் போலவே சைவ சமயத்திற்கும் பெயர் பெற்ற நாடாகும். தலைமன்னாரை அடுத்த மாதோட்டம், திருக்கோணமலை, கதிர்காமம் முதலிய இடங்களில் சிவபிரான் கோவில்களையும் முருகப்பெருமான் கோவில்களையும் காணலாம். பராந்தகசோழன், இராஜராஜ சோழன் முதலிய சோழப் பேரரசர் இலங்கையைப் பிடித்து ஆண்டகாலத்தில் சைவ சமயம் ஈழ நாட்டிற் சிறப்புற்றிருந்தது. சோழர் காலத்துக் கோவில்கள் சில இன்றும் ஈழ நாட்டிற் காணப்படுகின்றன

9. ஈழ நாட்டின் பழைய துறைமுக நகரங்கள் தலைமன்னார், யாழ்ப்பாணம், திருக்கோணமலை முதலியன. ஆயின் ஆங்கிலேயர் ஆட்சியில் கொழும்பு சிறந்த துறைமுக நகரமாக்கப்பட்டது. இது செயற்கைத் துறைமுகம். கிழக்கு இந்தியத் தீவுகள், ஆஸ்திரேலியா முதலிய கிழக்கு நாடுகட்கும் ஆப்பிரிக்கா, ஐரோப்பா முதலிய மேற்கு நாடுகட்கும் செல்லவேண்டும் கப்பல்கள் கொழும்பில் தங்கிச் செல்கின்றன அதனால் அங்கு உலக நாடுகளின் பிரதிநிதிகள் உறைகின்றனர். வானளாவிய மாடமாளிகைகள் கொழும்பு நகரை அழகு செய்கின்றன.

10. வட மாகாணத்தைச் சுற்றிலும் கணக்கற்ற சிறு தீவுகள் இருக்கின்றன. அவற்றிலும் தமிழர் வாழ்கின்றனர். அத்தீவுகளைச் சார்ந்த உப்பங்கழிகளில் காதுக்கு இனிய ஓசை அளிக்கும் பாடும் மீன் என்னும் ஒருவகை மீனும், மரங்களைப் பற்றி ஏறும் வன்மை வாய்ந்த மரமேறி மீன் என்னும் ஒருவகை மீனும் இருக்கின்றனவாம். நமது தமிழ் நாட்டில் உள்ள திருமறைக்காடு, காயல் முதலிய பழைய துறைமுகங்களிலிருந்து இத்தீவுகட்கும் யாழ்ப்

பாணத்திற்கும் முன்பு கடல்வாணிகம் நடந்துவந்தது. ஈழ நாடு கி. மு. ஐந்தாம் நூற்றாண்டிலிருந்தே கடல்வாணிகத்திற் சிறந்த நாடாக விளங்கியது; இன்றும் இரப்பர், தேயிலை, தேங்காய், பாக்கு, வாசனைப்பொருள்கள் முதலியவற்றை அயல் நாடுகட்கு ஏற்றுமதி செய்துவருகின்றது.

11. ஈழ நாட்டில் ஒரு மலைஉச்சியில் நான்கடி நீளமுள்ள அடிச்சுவடு செதுக்கப்பட்டுள்ளது. அது புத்தரது அடிசசுவடு என்று பௌத்தர்கள் கூறுகின்றனர்; அம் மலையை ஸ்ரீபாத மலை என வழங்குகின்றனர். இந்துக்கள் இராமரது காற்சுவடு என்கின்றனர். முஸ்லிம்கள் ஆதாமின் அடிச்சுவடு என்று கூறி, அம்மலையை ஆதாம் மலை என்கின்றனர். கிறிஸ்தவர்கள் தாமஸ் மஹானது அடிச்சுவடு என்று கூறுகின்றனர். உண்மை எதுவாயினும், அம் மலை எல்லாச் சமயத்தவராலும் போற்றப்படுகின்றது என்பது உண்மையாகும்.

## அரும்பொருள்

வனப்பு - அழகு. கமுகு - பாக்குமரம். புலன் - வயல். பரக்க - பரவலாக. தாழ்வரை - சரிவு.

## பயிற்சி

I. விடை கூறுக:—

1. 'ஈழநாடு இந்தியாவுடன் இணைந்திருந்தது' என்று எண்ணக் காரணம் என்ன?
2. ஈழ நாடு— பொருள் யாது?
3. ஈழ நாட்டு இயற்கை அமைப்பு யாது?
4. ஈழ நாட்டு விளைபொருள்கள் யாவை?
5. ஈழ நாட்டில் உள்ள துறைமுகங்கள் எவை?
6. ஈழத்திலிருந்து ஏற்றுமதி யாவன யாவை?
7. ஈழ நாடு எவ்வெச் சமயங்கட்குச் சிறந்த நாடாகும்?
8. ஆதாம் மலையைப்பற்றி யாது அறிவீர்?

II. இப்பாடத்தின் ஒவ்வொரு பகுதிக்கும் ஏற்ற தலைப்புத் தருக.

III. ஈழ நாட்டின் இயற்கை அமைப்பு - விளைபொருள்கள் - ஈழநாட்டு மக்கள் - சமயங்கள் - இக்காலச் சிறப்பு என்னும் குறிப்புகளைக் கொண்டு ஒரு கட்டுரை வரைக.

IV. எதிர்ச்சொல் கூறுக:- அண்மை, இயற்கை, பெரும்பாலோர், மிகுதி.

V. (1) பிரித்துக் கூறுக:—தொடர்புற்றதாக, பேரரசர் வடமாகாணம்.

(2) சேர்த்துக் கூறுக:—வாசனை + தீவு, மலை + தொடர், கணக்கு + அற்ற.

# 13. உரையாடல்

I

[தகடூர் அரண்மனையில் அதியமானுடன் ஔவையார் உரையாடுதல்.]

ஔவையார்:—அரசே, நீர் கொடுத்த கருநெல்லிக்கனியை நான் உண்டேன். அதனை உண்டது முதல் உடம்பில் மிக்க சுறுசுறுப்புத் தோற்றுகிறது. நீர் அப்பழத்தை எங்குப் பறித்தீர்?

அதியமான்:—அம்மையீர், நான் காலையில் நமது மலைப்பக்கத்தே சென்றிருந்தேன்; மலைப்பிளவிலிருந்து உயர்ந்து வளர்ந்த கருநெல்லிமரம் ஒன்றைக் கண்டேன்; அதன் உச்சியில் ஒரு கருநெல்லிக்கனி இருந்ததைப் பார்த்தேன்.

ஔவையார்:—நீரா அதனைப் பறித்தீர்?

அதியமான்:—ஆம். அங்கு வேறு எவரும் காணப்படவில்லை. நான் என்னுடன் ஒருவரையும் அழைத்துச் செல்லவும் இல்லை.

ஔவையார்:—அரும்பாடுபட்டுப் பறித்த அப்பழத்தை நீர் ஏன் உண்ணவில்லை?

அதியமான்:—அம்மையீர், அதனை உண்பவர் நீண்ட காலம் உடல் வலிமை பெற்று வாழ்வர் என்று என் தந்தையார் கூறக் கேட்டிருக்கிறேன். என்போன்ற அரசர் உண்டு நீண்ட காலம் இருப்பதைவிடத் தமிழ்ப் புலவராகிய நீர் உண்டு நீண்ட காலம் இருத்தல் நமது தாய்மொழி வளர்ச்சிக்கு நல்லதாகும் என்பது எனது கருத்து. ஆதலின் நான் அதனை உண்ணாது, உமக்குத் தந்தேன்.

ஔவையார்:—அரசே, நீர் ஒரே பழத்தைப் பறித்தீர் என்பதை அறிந்திருந்தால், நான் அதனை உண்டிருக்கமாட்டேன். குடிமக்களைக் கண்ணுங் கருத்துமாகக் காக்கும் இறைவராகிய நீர் அதனை உண்டு நீண்டநாள் இருப்பின், என்போன்ற புலவர்க்கும்

குடிகட்கும் எவ்வளவோ நன்மை உண்டாகுமே உம்போன்ற அரசர்களால் அல்லவா என்போன்ற புலவர் சிறப்புறுவர். புலவர் சிறப்புறின், தாய்மொழி சிறப்புறும். புலவர்க்கும் தாய்மொழி வளர்ச்சிக்கும் கொழுகொம்பாக இருப்பவர் தமிழ் அரசரே ஆதலின் அரசராகிய நீர் அப்பழத்தை உண்டிருப்பின் என் மனம் மகிழ்ச்சி அடைந்திருக்கும்.

அதியமான் :—அம்மையீர், யான் என் நாட்டிற்றான் சிறப்புடையவன். நீரோ தமிழகம் முழுவதும் சிறப்புடையவர். கற்றவர் சென்றவிடமெல்லாம் சிறப்புப் பெறுவர் என்பது அநுபவ வாக்கன்றோ? நான் என்னைத் தேடிவரும் புலவரை மட்டுமே ஆதரிக்கக்கூடும்; அதனால் மிகச் சிறிய அளவுதான் தமிழை வளர்க்கக்கூடும். ஆயின், நீரோ, தமிழ் நாட்டுப் பெருநில மன்னர், குறுநில மன்னர், பெருநிலக் கிழவர் முதலியோரைக் கண்டு அவர்களுக்குத் தமிழ் உணர்ச்சி ஊட்டும் வாய்ப்புப் பெற்றுள்ளீர்: தமிழ்ப் புலவர்களைச் சந்தித்துத் தமிழ் வளர்ச்சியில் ஊக்கப்படுத்த வல்லீர். மேலும் உமக்குப்பின் உம்மையொத்த மற்றொரு பெண்பாற் புலவரைக் காண்பது அருமை என்பது எனது கருத்து. நீர் பெண்பாற் புலவராயினும் அஞ்சாமை, அரசியல் அறிவு என்பன சிறக்கப் பெற்றுள்ளீர். இவை அனைத்தையும் எண்ணியே, நீர் நீண்ட காலம் இருத்தல்வேண்டும் என்னும் அவாவினால் அப் பழத்தை உமக்குக் கொடுத்தேன். என் செயலைப் பற்றி என் மனம் மிக்க மகிழ்ச்சி அடைகிறது.

ஔவையார் :—அரசரே, உம்மைப் போன்ற தியாக வீரரை நான் கண்டதில்லை. நமது தாய் மொழியாம் தமிழினிடத்தில் உள்ள பற்றினால் நீர் செய்த இவ்வரிய செயல் தமிழ் உலகம் உள்ளவரை மறக்கப்படுவதன்று. உமது தியாகத்தால் நீர் வள்ளல்கள் வாழும் உலகில் மிக உயரிய இடத்தைப் பெற்றுவிட்டீர். அதியர் பெருமானே, நீர் நீல மணிமிடற்றுப் பெருமான்போல நிலைபெற்று வாழ்வீராக!

## II

[அதியமானல் அரசியல் தூதராகக் காஞ்சிக்கு அனுப்பப்பெற்ற
[ஔவையார் தொண்டைமான் அரண்மனையில் இருந்து உரையாடுதல்]

**தொண்டைமான் :**—அம்மையீர், நும் வரவு நல்வரவாகுக. உமது பெரும்புலமையினையும் அரசியல் அறிவு நுட்பத்தையும் நான் புலவர் பலர் வாயிலாகக் கேட்டுள்ளேன். உம்மைக் காணவேண்டும் என்னும் அவா எனக்கு மிக்கிருந்தது.

**ஔவையார் :**—தொண்டை நாட்டு வேந்தரே, தமிழகத்து வட பகுதியாகிய உமது நாட்டினைக் காணவேண்டும் என்னும் அவா எனக்குண்டு. உமது செங்கோல் ஆட்சியைப் பற்றியும் உமது தமிழ்ப்பற்றைப் பற்றியும் நான் நிரம்பக் கேள்வியுற்றேன். அரசரே, மண்ணாசை கொண்ட பிறநாட்டு வேந்தர் தமிழகத்தைத் தாக்குவராயின், முதல் தாக்குதல் தொண்டை நாட்டிற்கே ஏற்படும். அதனல் தொண்டை நாட்டுக் காவலர் சிறந்த போர்ப்படையை வைத்திருத்தல் கடமையாகும் அன்றோ ?

**தொண்டைமான் :**—அம்மையீர், நீர் குறிப்பிட்டவாறு (தொண்டைநாடு) வெளியாரால் தாக்கப்படலாம்; சேர, சோழ, பாண்டியராலும் பிற சிற்றரசராலுந் தாக்கப்படலாம். ஆதலின் வீரரும் போர்க்கருவிகளும் எப்பொழுதுமே தயாராக இருத்தல் வேண்டும். ஆயின், என் காலத்தில் இன்றளவும் போரில்லை. தாயீர், நீவிர் எனது படைக்கலக் கொட்டிலை வந்து காணவேண்டுகிறேன்.

[தொண்டைமான் படைக்கலக் கொட்டிலைக் காட்டுகிறுன். ஔவையார் எல்லாப் போர்க் கருவிகளையும் பார்வையிடுகிறுர்.]

**ஔவையார் :**—அரசரே, உம்முடைய போர்க் கருவிகள் புதியனவாகவே இருக்கின்றன; துருப்பிடியாமல் இருத்தற்காக நெய் பூசப்பெற்றுள்ளன ; மயிற்பீலி சூட்டப் பெற்றுள்ளன: பார்வைக்கு அழகாக இருக்கின்றன. எம் அதியமானுடைய போர்க் கருவிகளோ,

இவைபோல படைக்கலக் கொட்டிலில் இல்லை. அவை பகைவரைக் குத்தலால் நுனி மழுங்கிவிட்டன; பழுது பார்ப்பதற்காகக் கொல்லன் உலைக்களத்தில் கிடக்கின்றன.

தொண்டைமான்:—அம்மையீர், அதியமானுக்குப் பகைவர் உண்டோ ?

ஔவையார்:—அரசரே, அதியமான் இருப்பது கொங்கு நாடு. கொங்கு நாட்டைக் கைப்படுத்தச் சேர, சோழ, பாண்டியரும் பிறரும் முயல்கின்றனர். பாழும் மண்ணாசையாற்றானே போர்கள் நிகழ்கின்றன. மண்ணாசை இன்றி அவரவர் தத்தம் குடிகளை நன்முறையிற் காத்துவரின், மொழி வளர்ச்சி முதலியன ஏற்பட இடமுண்டு. எல்லா நாட்டு மக்களும் அமைதியாக இன்ப வாழ்வு வாழ்வர். நாம் நினைக்கும் அமைதிநிலை உலகத்தில் என்று ஏற்படும்?

### அரும்பொருள்

இறைவர் - தலைவர். பெருநிலக் கிழவர் - சமீந்தார். நீலம் - விஷம். மிடறு - கழுத்து. மிடற்று - கழுத்தையுடைய. புலமை - அறிவு. புலவர் - அறிஞர். காவலர் - குடிகளைக் காப்பவர், அரசர். படைக்கலக் கொட்டில் - ஆயுதசாலை.

### பயிற்சி

I. விடை கூறுக:—

1. அதியமான் கருநெல்லிக் கனியை எங்கு எவ்வாறு பெற்றான் ?
2. அவன் அதனை ஏன் உண்ணவில்லை ?
3. புலவரைவிட அரசனே சிறந்தவன் என்பதை ஔவையார் எங்ஙனம் விளக்கினர் ?
4. அதுபற்றி அதியமான் கருத்து யாது ?
5. தொண்டைமான் போர்க்கருவிகளைப் பார்த்த ஔவையார் யாது கூறினர் ?
6. நாட்டு மக்கள் எப்பொழுது அமைதியாக வாழக் கூடும் ?

II. அதியமான்...ஔவையார் உரையாடற் பொருளை 15 வரிகளில் வரைக.

III. தொண்டைமான்—ஔவையார் உரையாடற் பொருளை 15 வரிகளில் எழுதுக.

IV. வாக்கியங்களில் அமைக்க—கொழுகொம்பாக, கண்ணும் கருத்துமாக, பெருநிலக்கிழவர், நிலைபெற்று, பழுதுபார்ப்பதற்காக.

## 14. பதுமை பகர்ந்த கதை

1. இரண்டாம் நாட் காலையில் கதிரவன் கீழ்த்திசையில் தோன்றியவுடன் போஜ அரசனும் அவன் அமைச்சனும் நீராடி வழிபாட்டை முடித்துக்கொண்டு அரச அவையை அடைந்தனர். அரசன் அங்கு விக்கிரமாதித்த அரசனது அரியணைக்கு முன்சென்று தூபதீபங் காட்டி, முதற்படி கடந்து இரண்டாம் படியில் தனது வலக்காலைத் தூக்கி வைத்தான். அவ்வமயம் அப் படிக்குக் காவலாக இருந்த மதனாபிஷேக வல்லிப் பதுமை தன் இரு கைகளையும் கொட்டித் தலையசைத்துக் குலுங்க நகைத்து,

"மன்னர்களாற் போற்றப் பெறும் போஜ மன்னரே, இவ்வரியணையின் முதற்படிக்குக் காவலாகவுள்ள விநோத ரஞ்சிதப் பதுமை விக்கிரமாதித்த வேந்தனுடைய பலகலை அறிவு, உண்மை, வீரம், பக்தி முதலிய அனைத்தும் கூறினமை உம் காதில் ஏறவில்லையா? அப்பண்புகள் அமையப்பெறாத நீர் இவ்வரியணையில் ஏறி இருக்க நினைப்பது முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்படுதல் போல் இருக்கின்றது. நில்லும், நில்லும். நான் கேட்கும் கேள்விகட்குப் பதில் கூறும். எங்கள் விக்கிரமாதித்த வள்ளலிடம் இருந்த நற்பண்புகள் உம்மிடம் உள்ளனவா? இல்லையேல் இறங்கிப் போவதே நல்லது,"

என்று கூறிற்று. போஜ அரசன் வெட்கித் தலை குனிந்து, "பதுமையே, உங்கள் அரசர் கோமான் இந்த அரியணைமீது இருந்து அரசு செலுத்திய பொழுது நடந்த அதிசயங்களுள் ஒன்றைக் கூறுக," என்று வேண்டினன். உடனே அப்பதுமை கீழ் வருமாறு கூறத் தொடங்கியது:

2. "கேளும் அரசரே, எங்கள் வீராதி வீரனான விக்கிரமாதித்தன் பட்டி என்னும் அமைச்சனுடன் இருந்து நாட்டை நன்னெறியில் ஆண்டுவந்தான். அவனது கோநகரமாகிய உச்சைனிக்கு இருகாத வழிக்கு அப்பால் காட்டில் காளி கோவில் ஒன்று உண்டு. அந்தக் காளியம்மன் சந்நிதிக்கு நேரே அரை நாழிகை வழியில் முருங்கை மரம் ஒன்று உண்டு. அம்மரத்தில் வேதாளம் ஒன்று தலைகீழாய்த் தொங்கிக்கொண்டு இருந்தது.

3. "கோவிலை அடுத்த காட்டில் ஞானசீலன் என்ற முனிவன் ஒருவன் தவம் செய்துகொண்டிருந்தான். அவன் காளி அம்மனையும் வேதாளத்தையும் கைவசமாக்க விரும்பினன்; அதனால் அம்மனுக்கு முன்னே யாகம் வளர்த்து வரலானன். காளியம்மன் அவன் முன்னர்த் தோன்றி யாது வேண்டும் என்று கேட்டனள். முனிவன், 'தாயே, நீ எப்பொழுதும் என்னிடம் இருக்கவேண்டும்; முருங்கை மரத்தில் உள்ள வேதாளம் என் கைவசப்படவேண்டும்; நிலவுலகத்து மன்னர் எனக்கு அடங்கி நடத்தல் வேண்டும்; விக்கிரமாதித்த வேந்தனது அரிய அரியணையில் இருந்து நான் அரசாளுதல் வேண்டும்" என்று கூறி, அருள்புரியுமாறு வேண்டினன்.

4. "காளி அம்மன் முனிவனைப்பார்த்து, 'பக்தனே, நீ கேட்டவற்றை நான் அருளவேண்டுமாயின், இந்த யாகக் குழியில் அரசர் ஆயிரவர் தலைகள் வெட்டிப் போடப்பட வேண்டும்' என்று கூறி மறைந்தாள்.

5. "முனிவன் அன்று முதல் முயன்று எவ்வாறே தொள்ளாயிரத்துத் தொண்ணூற்று ஒன்பது அரசர்களைப் பலியிட்டு அவர்கள் தலைகளை யாகக் குழியிற் போட்டுவிட்டான். மேலும் ஓர் அரசன் தலை வேண்டியிருந்தது. 'விக்கிரமாதித்தன் தலையுடன் யாகம் முற்றுப்பெறும். அவனை எவ்வாறேனும் ஏமாற்றி இங்கு அழைத்துவந்து பலியிடல்வேண்டும்' என்று முனிவன் முடிவுசெய்தான்.

6. "முனிவன் நாடோறும் ஒரு மாதுளங்கனியை விக்கிரமாதித்தனிடம் கொடுத்துக் கண்டு சென்றான். நாட்கள் பல கடந்தன. ஒருநாள் அரசன், முனிவன் தந்த பழத்தைத் தன் பக்கத்தில் வைத்தான். அஃது உருண்டு ஓடியது. பக்கத்தில் இருந்த கருங்குரங்கு ஒன்று அப் பழத்தை எடுத்துக் கடித்தது. உடனே அதனுள்ளிருந்து இரத்தினங்கள் வெளிப்பட்டன. வேந்தன் வியப்புற்றான்; இதுவரை முனிவன் தந்த கனிகளை எல்லாம் கொண்டுவரச் செய்து உடைத்துப் பார்த்தான்; எல்லாப் பழங்களிலும் இரத்தினங்கள் இருக்கக் கண்டு வியப்புற்றான். அரசன் மறுநாள் பழத்துடன் வந்த முனிவனைப் பார்த்து, 'முனி

வரே, உமக்கு என்னால் ஆகவேண்டுவதனைச் செய்வேன்; கூறுக' என்றான். முனிவன், 'அரசர்க்கரசே, நான் காட்டில் உள்ள காளியம்மன் கோவிலுக்கு முன் யாகம் வளர்த்து வருகிறேன். கிருஷ்ணபக்ஷ சதுர்த்தசி அன்றிரவு நீர் வந்து அந்த யாகத்தை நிறைவேற்றவேண்டும்' என்றான். வேந்தன் வருவதாக வாக்களித்தான்.

7. "முனிவன் குறிப்பிட்ட நாள் இரவில் விக்கிரமாதித்தன் காளி கோவிலை அடைந்தான். அவனைக் கண்டு மகிழ்ந்த முனிவன் வரவேற்று, வேதாளம் இருந்த இடத்தைக் குறிப்பிட்டு அதனைப் பிடித்துவருமாறு வேண்டினான். அரசன் இசைந்து முருங்கை மரம் நோக்கிச் சென்றான்; வேதாளத்தைப் பிடித்துக் கட்டித் தோள்மீது வைத்துக்கொண்டு திரும்பினான். வழியில் வேதாளம் இருபத்து நான்கு கதைகள் கூறிக் கேள்விகள் கேட்டது. வேந்தன் இருபத்துமூன்று கேள்விகட்கு விடை அளித்தான்; கடைசிக் கேள்விக்குப் பதில் கூறக் கூடவில்லை.

8. "உடனே வேதாளம் அரசனுக்குத் தன் வரலாற்றைச் சொல்லி, முனிவன் நயவஞ்சகச் செயலையும் குறிப்பிட்டு, 'அரசே, அவன் உம்மை நீராடி வரச்சொல்வான். நீர் அவனை முதலில் நீராடிக் காட்டுமாறு சொல்ல வேண்டும். பிறகு உம்மை அம்மனுக்கு முன் வணங்கச் சொல்வான். நீர் வணங்காது, அவனை வணங்கிக் காட்டுமாறு சொல்லவேண்டும். அவன் வணங்கும்போது அவன் தலையை உமது வாளால் வெட்டி யாகக் குழியிற் போடும். உடனே காளி அம்மன் தோன்றி, நீர் வேண்டும் வரங்களைத் தருவாள்' என்றது.

9. "விக்கிரமாதித்தன் வேதாளத்தின் யோசனைப்படி நடப்பதாகக் கூறி, அதனுடன் முனிவனிடம் சென்றான். முனிவன் வேதாளத்தைக் கண்டதும் ஒரு கண் பெற்ற பிறவிக் குருடனைப்போல மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தான்; 'அரசனே நீராடி வருக' என்றான்; அரசன் வேதாளம் சொன்னபடி சொல்ல, தானே முதலில் மூழ்கினான்; அவ்வாறே தானே முதலில் வணங்கினான். அவ்

வமயம் அரசன் தன் மந்திரவாளால் முனிவன் தலையை வெட்டி யாகக் குழியிற் போட்டான்.

10. "உடனே அம்மன் அரசன் முன்தோன்றி, 'மகனே, நீ செய்த வேலையைக்கண்டு மகிழ்ந்தேன். உனக்கு வேண்டுவன கேள். தருவேன்' என்றாள். வேந்தன் அம்மனைப் பணிந்து, 'தாயே, எனது நாடு செழிப்பாக இருத்தல் வேண்டும். குடிகள் சுகமாக வாழவேண்டும். உன் இன்னருள் என்றும் இருத்தல் வேண்டும். இங்கு வெட்டப்பட்ட முடிமன்னர் அனைவரும் எழுந்து நலன் பெற வேண்டும்' என்று வேண்டினான். அம்மை அவ்வாறே அருள் புரிந்து மறைந்தாள். வேந்தர் அனைவரும் உயிர் பெற்று எழுந்து அம்மனையும் விக்கிரமாதித்தனையும் பணிந்து சென்றனர். விக்கிரமாதித்த வேந்தன் வேதாளத்துடன் தன் நகரத்திற்குத் திரும்பி அறநெறி வழுவாது ஆட்சி புரிந்து வந்தான்"

இக்கதையைக் கேட்ட போஜமன்னன் மனமகிழ்ந்து தன் இருப்பிடம் சென்றான்."

### அரும் பொருள்

பலகலை- இசை, நாடகம், நடனம், போர் முதலிய பல கலைகள். நாடோறும்-நாள்தோறும். இன்னருள்-இனிய அருள், கடாக்ஷம்.

### பயிற்சி

I. விடை கூறுக:—

1. முதற் பதுமை கூறியது யாது?
2. இரண்டாம் பதுமை அரசனைத் தடுத்துக் கூறியது யாது?
3. விக்கிரமாதித்தன் குண நலன்கள் யாவை?
4. ஞான சீலன் யாகம் செய்ததன் நோக்கம் யாது?
5. காளியம்மன் அவனை என்ன செய்யச் சொன்னாள்?
6. அவன் விக்கிரமாதித்தன் மனத்தை எவ்வாறு கவர்ந்தான்?
7. முனிவரது மோசக் கருத்தை வேந்தன் எவ்வாறு உணர்ந்தான்?
8. வேந்தன் முனிவனை எவ்வாறு வென்றான்?
9. வேந்தன் அம்மனை வேண்டியன யாவை?

II. இப் பாடத்தின் ஒவ்வொரு பகுதியையும் படித்து ஏற்ற தலைப்புத் தருக.

III. பொருள் கூறுக:—கீழ்த்திசை, கோமான், முற்றுப்பெறும், நய வஞ்சகம்.

IV. வாக்கியத்தில் அமைக்க:—கொம்புத்தேன், கைவசப்படுத்த, எவ்வாறேனும், வியப்புற்று, இன்னருள்.

# 15. டேவிட் லிவிங்ஸ்டன்

1. ஐரோப்பியர் ஆப்பிரிக்காவில் குடியேறி இப்பொழுது ஆட்சி செய்துவருகின்றனர்: ஆப்பிரிக்காவில் கிடைக்கும் பொன் முதலிய எல்லாப் பொருள்களையும் அநுபவித்து வருகின்றனர். இத்தகைய குடியேற்றம் ஏறக்குறைய நூறு ஆண்டுகளுக்கு முன் ஏற்படவில்லை. அங்கு அந்நாட்டுக்குரிய பழைய குடிகள் பல்வேறு இனத்தவராக வாழ்ந்துவந்தனர். கடற்கரை ஓரப்பகுதிகள் நீங்கலாக உள்ள பகுதிகள் காடுகள் அடர்ந்தவை; நோய்கட்கும் கொடிய விலங்குகட்கும் புகலிடமாக இருந்தன. அக்காடுகளைக் கடந்து கண்டத்தின் உட்பகுதியை ஆராய்ந்தவர் ஒருவரும் இலர். ஆப்பிரிககாவின் மேற்குக்கரை ஓரம் உள்ள சில ஊர்களில் ஐரோப்பியர் சிலர் குடியேறி இருந்தனர். கண்டத்தின் தெற்குப் பகுதியிலும் சிலர் குடியேறி இருந்தனர். அவர்கள் கண்டத்தின் உட்பகுதியை அறியாதவர்கள்.

2. ஆப்பிரிக்கா கண்டத்தின் உட்பகுதியுட் சென்று நிலவளத்தையும் பிற விவரங்களையும் அறிய வேண்டும் என்னும் அவா ஐரோப்பியர்க்கு உண்டாகி இருந்தது. அவ்வமயம் அந்த அவாவினை நிறைவேற்றத்தக்க வீரராக முன்வந்தவரே டேவிட் லிவிங்ஸ்டன் என்பவர்.

3. லிவிங்ஸ்டன் 1813-இல் ஸ்காட்லந்தில் எளிய குடும்பத்தில் பிறந்தவர். அவருடைய பெற்றோர் எளியவர் ஆயினும் சிறந்த ஒழுக்கம் உடையவர். அதனால் லிவிங்ஸ்டன் இளமை முதலே நன்முறையில் வளர்க்கப்பட்டார். எளிய குடும்பத்தில் பிறந்ததினால் அவர் இளமையிலேயே பஞ்சாலையில் வேலை செய்யவேண்டியவர் ஆனார். ஆயின் படிப்பில் ஆர்வம் கொண்ட அவர் வேலை செய்து கொண்டே பல நூல்களைப் படித்துவந்தார்; இரவில் எட்டு மணிக்குப் பஞ்சாலையிலிருந்து வீடு திரும்பிய பிறகும் நெடுநேரம் படித்துவந்தார்.

4. லிவிங்ஸ்டனுக்குக் கல்வி கற்பதில் இருந்த ஆர்வத்தைக் கண்ட தந்தையார் அவரைக் கிளாஸ்கோப் பல்கலைக் கழகக் கல்லூரியிற் சேர்த்தார். இளைஞர் மிகவும் சிக்கனமாக வாழ்க்கையை நடத்திக்கொண்டு மிகுந்த ஊக்கத்

துடன் படித்துவந்தார்; கோடை விடுமுறை விடப்பட்டதும் பஞ்சாலையில் சேர்ந்து வேலை செய்யலானார்; அடுத்த ஆண்டு செலவிட்டுப் படிப்பதற்கு வேண்டிய பொருளைச்




டேவிட் லிவிங்ஸ்டன்

சேகரித்துக்கொண்டார். இவ்வாறு அவர் பல ஆண்டுகள் அரும்பாடுபட்டுப் படித்து இறுதியில் மருத்துவப் பட்டத்தையும் பெற்றார்.

5. 'வெளி நாடுகட்குச் சென்று கிறிஸ்தவ சமயப் பிரசாரம் செய்து மக்கள் அகத்தைத் தூய்மை செய்ய வேண்டும்; மருத்துவராக இருந்து அவர்கள் புறத்தையும் குணப்படுத்த வேண்டும்' என்பது அவரது அவா. இலண்ட

னில் இருந்த கிறிஸ்தவத் தொண்டர் கழகம் அவரை ஏற்றுக்கொண்டது; அவரைக் கிறிஸ்தவப் பாதிரியாராக ஆப்பிரிக்காவுக்கு அனுப்பத் தீர்மானித்தது.

6. லிவிங்ஸ்டன் தம் பெற்றோரிடம் விடைபெற்றுத் தென் ஆப்பிரிக்காவை அடைந்தார்; 'குருமன்' என்னும் இடத்தில் இருந்த தொண்டர் கழகத் தலைமை நிலையத்திற்குச் சென்றார்; அங்குச் சில நாட்கள் தங்கினர். அப்பொழுது அங்கிருந்த டாக்டர் மொப்பெட் என்பவரது மகளாரை மணந்துகொண்டார்.

7. பின்னர் அவர் தம் மனைவியாருடன் 'பெச்சுவான' என்னும் பகுதியை அடைந்தார். அப்பகுதியை ஆண்டுவந்த பழங்குடி மன்னன் அவர்களை வரவேற்றான். லிவிங்ஸ்டன் அப்பகுதியில் உள்ள ஆற்றிலிருந்து பல கால்வாய்களை வெட்டி ஆற்று நீரைக் கொண்டுவந்து நிலங்களைப் பண்படுத்திப் பயிர் செய்யும் முறையினை அப்பகுதியில் இருந்த மக்கட்குக் கற்பித்தார். அவர் அவர்களிடையே சமயப் பிரசாரமும் கல்விப் பிரசாரமும் செய்துவந்தார். அவரது தொண்டைப் பாராட்டி மன்னன் மனமகிழ்ந்து கிறிஸ்தவன் ஆனன். லிவிங்ஸ்டன் அவ்வேந்தன் ஆதரவில் அப்பகுதியில் சில ஆண்டுகள் கழித்தார். அங்கு அவருக்கு ஓர் ஆண்மகவு பிறந்தது.

8. பின்னர் லிவிங்ஸ்டன் தம் குடும்பத்துடன் வடக்கு நோக்கிப் புறப்பட்டார். அவருடைய பொருள்கள் பல எருதுகள்மீது கொண்டுசெல்லப்பட்டன. பல நாட்களுக்குத் தேவையான உணவுப் பொருள்கள், வேத நூல் முதலிய பலவகை நூல்கள், சுதேசிகள் விரும்பத்தக்க விளையாட்டுப் பொருள்கள், மருந்து வகைகள், தற்காப்புக்கான துப்பாக்கிகள், துப்பாக்கி மருந்துகள் முதலிய பொருள்களே எருதுகள்மீது ஏற்றப்பட்டவை. எருதுகளைச் சுதேசிகள் ஓட்டிச் சென்றனர்.

9. இங்ஙனம் வடக்கு நோக்கிப் புறப்பட்ட லிவிங்ஸ்டன் பல நாட்களுக்குப் பிறகு ஸாம்பெஸி என்னும் அகன்ற ஆற்றின் கரையை அடைந்தனர். அந்த ஆற்றைக் கண்டு

பிடித்த முதல் வெள்ளையர் அவரே. ஆற்றின் அருகில் ஒருவகைச் சுதேசிகள் வாழ்ந்துவந்தனர். அவர்கள் தலைவன் லிவிங்ஸ்டனை வரவேற்று உபசரித்தான். ஆயின் பாவம்! அவன் சில நாட்களுக்குள் நோய்வாய்ப்பட்டு இறந்தான். அவனுக்குப் பின் அவன் மகன் அப்பகுதிக்கு அரசனானன்.

10. கேப் டவுனிலிருந்து லிவிங்ஸ்டன் இருந்த இடத்தை அடையப் பல வாரங்கள் பிடித்தன; மேலும் வழி ஆபத்தானது. அதனல் அவர் தாம் இருந்த இடத்திலிருந்து கடற்கரைக்கு வழி காண முயன்றார்; தாம் தனித்திருந்து முயல்வதே நலமென்று எண்ணித் தம் மனைவி மக்களைக் கேப்டவுனுக்கு அழைத்துச் சென்று கப்பலேற்றித் தம் பெற்றோரிடம் அனுப்பிவிட்டார்; பின்னர் ஸாம்பெஸி ஆற்றங் கரைக்கு மீண்டார்.

11. லிவிங்ஸ்டன் தமது நம்பிக்கைக்கு உரிய சுதேசிகளுடன் மேற்கு நோக்கிப் பிரயாணமானார். வழியில் அவர் பல காடுகளையும் திறந்த வெளிகளையும் கடந்து மேற்குக் கரையில் உள்ள அங்கோலா என்னும் ஊரை அடைந்தார்; அதனை அடைய அவருக்கு ஏழுமாத காலம் ஆயிற்று. அவ்வழி கடினமானது என்று உணர்ந்ததால் அவர் மீண்டும் தாம் புறப்பட்ட இடத்திற்கு வந்து சேர்ந்தார்; அங்கிருந்து ஸாம்பெஸி யாற்றின் ஓரமாகக் கிழக்கு நோக்கிப் பிரயாணமானார்; வழியில் பெரிய நீர்வீழ்ச்சி ஒன்றைக் கண்டு, அதற்கு 'விக்டோரியா நீர்வீழ்ச்சி' என்று பெயரிட்டார்; நான்கு மாத காலம் பிரயாணம் செய்து கிழக்குக் கரைத் துறைமுகம் ஒன்றை அடைந்தார்; அங்கிருந்து கப்பலேறி இங்கிலாந்து சேர்ந்தார்.

12. லிவிங்ஸ்டன் பதினறு ஆண்டுகள் தென் ஆப்பிரிக்காவில் கழித்து 1856-இல் தாய்நாட்டை அடைந்தார்; அரசாங்கத்தாரிடமிருந்து சிறப்புகளைப் பெற்றார்; ஓராண்டுக்குப் பிறகு அரசாங்கத்தார் விருப்பப்படி, ஸாம்பெஸி யாற்று வழியே நடு ஆப்பிரிக்காவை அடையக் கூடுமா, அந்த ஆற்று வழியே வாணிகப் படகுகள் உள்நாடு மீளக்

கூடுமோ என்பவற்றை ஆராயப் புறப்பட்டார். அவர் ஸாம்பெஸியாற்றில் பிரயாணம் செய்தபோது பட்ட துன்பங்கள் பல. அவர் மனைவியார் காலமானார்; உடன் வந்த பாதிரியார் ஒருவர் இறந்தார்; சுதேசிகளுட் சிலர் அவர் பொருள்களைக் கவர்ந்து சென்றனர். இத்தொல்லைகட்கு இடையே அவர் 'நியாஸா' என்னும் ஏரியைக் கண்டுபிடித்தார்; பின்னர் நோயற்று இங்கிலாந்து மீண்டார்.

13. இங்கிலாந்தில் ஒரு வருடகாலம் இருந்த அவர் ஸாம்பெஸியாற்றைப் பற்றிய விவரங்களையும் தம் அநுபவங்களையும் ஒரு நூலாக எழுதினார்; பின்னர்த் தம் சொந்த பொறுப்பில் ஆப்பிரிக்காவுக்குச் சென்றார்; ஸாம்பெஸியாற்றுக்கு வடக்கே ஆராய்ச்சி செய்யப் புறப்பட்டார். அப்பிரயாணத்தில் அவருடன் சென்ற சுதேசிகளுட் பலர் அவர் பொருள்களைக் கவர்ந்துகொண்டு ஓடினர். அவர்கள் சென்ற இடமெல்லாம் 'லிவிங்ஸ்டன் கொல்லப்பட்டார்' என்று பொய் பிரசாரம் செய்தனர். இச்செய்தி உண்மையா என்பதை அறிந்து வரும்படி அமெரிக்கப் பத்திரிகை நிலையம் ஒன்றினால் ஸ்டான்லி என்பவர் அனுப்பப்பட்டார்.

14. லிவிங்ஸ்டன் தம் பொருள்களை இழந்தும் நோயுற்றும், சலிப்பின்றிப் பிரயாணம் செய்தார்; வழியில் பல புதிய ஆறுகளையும் ஏரிகளையும் கண்டார். பாவம்! அவர் வழியில் பலவாறு துன்புற்றார்; நோயால் உடல் மெலிந்தார் இறுதியில் 'தங்கனிகா' என்னும் ஏரியைக் கண்டுபிடித்தார்; பின்னர் அதன் அருகில் உள்ள ஊரை அடைந்தார். அப்; பொழுது அவர் பரிதபிக்கத்தக்க நிலையில் இருந்தார். அவ்வமயம் முன் சொல்லப்பட்ட ஸ்டான்லி என்பவர் லிவிங்ஸ்டனைத் தேடிக்கொண்டு அங்கு வந்தார்.

15. நான்கு மாதகாலம் இருவரும் பல இடங்களைச் சென்று கண்டனர். ஸ்டான்லி, பரிவுடன் அழைத்தும் லிவிங்ஸ்டன் ஆப்பிரிக்காவை விட்டுச் செல்ல விரும்பவில்லை. ஆதலால் அவர் ஸ்டான்லி தம்மை விட்டுப்பிரிந்த பிறகு புதிய இடத்தைக் காணப் புறப்பட்டார். அந்த

முறை அவர் செய்த பிரயாணம் முற்றுப் பெறவில்லை; அவர் வழியில் ஒரு சிற்றூரிற் காலமானார்.

16. அவரது உடல் இங்கிலாந்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது; அங்குப் பிரிட்டிஷ் பெருமக்களின் உடம்புகள் அடக்கம் செய்யப்பட்டுள்ள 'வெஸ்ட் மின்ஸ்டர் அபே' என்னும் இடத்தில் மிக்க மரியாதையுடன் அடக்கம் செய்யப்பட்டது.

17. இங்ஙனம் லிவிங்ஸ்டன் ஆப்பிரிக்காக் கண்டத்தின் உட்பகுதிகளைக் கண்டறியத் தம் அரிய வாழ்க்கையையும் ஆருயிரையும் தியாகம் செய்தார். அவர் ஆப்பிரிக்காவைப் பற்றி எழுதிய நூல்களே அவருக்குப் பின்னர் மேலும் பலர் ஆராய்ச்சி செய்ய உற்ற துணையாயின. லிவிங்ஸ்டன் பிரயாணம் செய்த இடங்களில் வெள்ளையர் புகுந்து சுதேசிகளை அடக்கியும் நட்புக்கொண்டும் படிப்படியாகக் குடியேறி வாழலாயினர்.

### அரும்பொருள்

புகலிடமாக - வாழிடமாக. அகம் - உள்ளம். புறம் - வெளியிடம், உடல்.

### பயிற்சி

I. விடை தருக:—

1. லிவிங்ஸ்டன் எவ்வாறு கல்வி கற்றார்?
2. அவர் விரும்பிய தொண்டு யாது?
3. அவர் ஆப்பிரிக்காவிற் செய்த முதல் பிரயாணம் பற்றிக் கூறுக.
4. இரண்டாம் பிரயாணத்தில் அவர் அடைந்த அநுபவங்கள் யாவை?
5. அவரது மூன்றாம் பிரயாணம் பற்றிய விவரங்களைக் கூறுக.

II. இப்பாடச் செய்திகளை லிவிங்ஸ்டனே கூறுவது போலக் கூறுக.

III. லிவிங்ஸ்டன் கல்வி கற்றமை—அவர் ஆப்பிரிக்காவிற் செய்த பிரயாணங்கள்—அவர் கண்டறிந்தவை—அவற்றால் உண்டான நன்மை— இவற்றைக் குறிப்புகளாகக் கொண்டு ஒரு கட்டுரை எழுதுக.

IV. வாக்கியங்களில் அமைக்க:—நீங்கலாக, இனத்தவராக, வழி காண, விருப்பப்படி.

# 16. பாண்டியன் நெடுஞ்செழியன்

1. நீலவண்ணன் நின்ற திருக்கோலத்தில் உள்ள வேங்கடமலைக்கும் நீலத்திரைக்கடல் ஓரத்தில் உள்ள குமரி முனைக்கும் இடைப்பட்டது சங்ககாலத் தமிழகம். அது சேர, சோழ, பாண்டியர் என்ற முடியுடை மூவேந்தர் ஆட்சிக்கு உட்பட்டு இருந்தது. ஒவ்வோர் அரசரின் கீழும், அவராற் கைப்பற்றப்படாத பிற இடங்களிலும் சிற்றரசர் பலர் இருந்துவந்தனர். மூவேந்தர் தம்முள் ஒற்றுமை யுற்று வாழ்ந்த சமயங்களும் உண்டு; வேற்றுமைகொண்டு போரிட்ட சந்தர்ப்பங்களும் பலவாகும்.

2. மூவேந்தரும் சிற்றரசரும் தம் குடிகளைத் தம்முயிர் போலக் கருதிவந்தனர்; பயிர்த்தொழில், கைத்தொழில், வாணிகம் இவற்றை வளமுற வளர்த்தனர்; தம் தாய் மொழியாகிய தமிழைத் தம் உயிரினும் மேலாகப் பாது காத்து வளர்த்து வந்தனர்; தாய்மொழியில் வல்ல இயல் - இசை - நாடகப் புலவர்களை நன்கு போற்றினர்; இசை, நடனம், நாடகம், ஓவியம் முதலிய நாகரிகக் கலைகளைப் பாராட்டி வளர்த்தனர். தமிழ் வேந்தர் பலர் கவி இயற் றும் ஆற்றலும் பெற்றிருந்தனர்.

3. ஏறத்தாழ ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகட்கு முன் மதுரையைக் கோநகரமாகக் கொண்டு நெடுஞ்செழியன் என்னும் பாண்டிய மன்னன் பாண்டிய நாட்டை ஆண்டு வந்தான். பாண்டியநாடு என்பது இக்கால மதுரை, இராம நாதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்களைக் கொண்ட நிலப் பரப்பாகும். நெடுஞ்செழியன் இளைஞனாக இருந்த பொழுதே அவன் தந்தை இறந்தனன்; அதனால் இளைஞ னை நெடுஞ்செழியன் அரசன் ஆனான். தந்தை இருந்த பொழுதே அவன் அரசாளப் போதிய பயிற்சி பெற்றிருந் தான்; சிறந்த முறையில் போர்ப்பயிற்சியும் பெற் றிருந்தான்.

அவன் தமிழ்ப் புலவர்களிடம் அக்கால இலக்கண இலக்கியங்களைப் படித்துக் கவிபாடும் ஆற்றல் பெற்று விளங்கினான். அவன் தனது அவைக்களத்தில் பைந் தமிழ்ப் புலவர் பலரை வைத்து ஆதரித்துவந்தான். அப் புலவருள் சிறந்து விளங்கியவர் மாங்குடி மருதனார் என்பவ ராவர். அரசன் அப் பெரியாரிடம் அளவற்ற அன்பும் மதிப்பும் கொண்டிருந்தான்.

4. நெடுஞ்செழியன் சிறந்த புலமை பெற்றவன்; ஆதலின் தன்னை நாடிவந்த புலவர் அனைவர்க்கும் வரையாது வழங்கினான்; கூத்தர், பாணர், விறலியர் முதலியோரையும் நன்கு ஆதரித்து ஊக்கினான். அவனது கொடைச் சிறப்புத் தமிழகம் முழுவதும் பரவலாயிற்று. சேர, சோழ நாட்டுப் புலவர்களும் மதுரைக்கு வந்து பாண்டியன் ஆதரவைப் பெற்றனர். இவர்கள் தத்தம் நாடுகட்குச் சென்று பாண்டியன் புலமையையும் கொடைத் திறனையும் புலவர்களிடம் காட்டும் பேரன்பினையும் பலவாறு கூறி வாழ்த்தினர்.

5. இங்ஙனம் புலவர்-பாணர்-கூத்தர்-விறலியர் வாயிலாகப் பரவிய பாண்டியன் புகழை ஏனைய தமிழரசர் பொறாராயினர்; அதனால் அவனைப் போரில் முறியடித்து அவன் புகழைச் சிதைக்க விரும்பினர். பொறாமையால் உந்தப்பட்ட அவர்கள் போருக்குத் தக்க சமயத்தை எதிர் பார்த்து இருந்தனர்.

6. அப்பொழுது சேரநாட்டின் ஒரு பகுதியைச் சேரமான்-யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை என்பவன் ஆண்டுவந்தான். அவன் நல்லறிஞன்; புலவர்களை ஆதரிப்பவன்; ஆயின், எக் காரணம் கொண்டோ பாண்டிய நாட்டின்மீது படையெடுத்தான். இளைஞன் ஆயினும் அஞ்சா நெஞ்சம் படைத்த ஆண் சிங்கம்போன்ற நெடுஞ்செழியன் தன் பெரும் படையுடன் சென்று சேரமானைத் தாக்கினான். போர் வன்மையாக நடந்தது; முடிவில் சேரமான் பாண்டியனுக்கு ஆற்றாது தோற்று ஓடினான்.

7. சேரமான் தோல்வி அடைந்தமையால் பாண்டியன் வீரம் பலரால் பாராட்டிப் பேசப்பட்டது. முன்னரே அவனிடம் அழுக்காறு கொண்ட சேரனும் சோழனும் சேரமான் தோல்வியைக் கேட்டதும் மிகுந்த பொறாமை கொண்டனர், பாண்டியனைத் தாமே வலிதிற் சென்று தாக்கி அழிப்பதென உறுதிகொண்டனர். அவர்கட்கு உதவியாகத் திதியன், எழினி, எருமையூரன், இருங்கோவேண்மான், பொருநன் என்ற சிற்றரசர் ஐவரும் சேர்ந்தனர். எழுவரும் கடல்போன்ற தம் பெரும் படையுடன் போருக்கு எழுந்தனர்; 'இளைஞனும் வலியற்றவனுமான நெடுஞ்செழியன் வீரனாயின் எங்களை எதிர்க்கட்டும்,' என்று கூறினர்; பாண்டிய நாட்டு எல்லையை நெருங்கினர்.

8. பாண்டியன் அப் படையெடுப்பினையும் பகைவர் இகழ்ச்சி உரையினையும் ஒற்றரால் கேள்வியுற்றான். அவன் ஒரு புறம் சீற்றமும் ஒரு புறம் இரக்கமும் கொண்டான். அவன் விழிகள் சினத்தால் சிவந்தன. உடல் பதைத்தது. எப்பொழுதும் புன்னகை தவழும் அவன் முகம் கோபக் குறியுடன் காணப்பட்டது. அவ் வீரன் தன் அமைச்சர், சேனைத் தலைவர் முதலியவரைப் பார்த்து,

"ஆ! என்ன வியப்பு! சோழரும் சிற்றரசர் ஐவரும் சேர்ந்து நமது நாட்டின் மீது படையெடுத்து வருகின்றனராம். அவர்கள் என்னைச் சிறியவன் - வலியற்றவன் என்று இகழ்ந்து பேசினராம்' அவர்கள் பொறுமையால் உந்தப்பட்டு நம்மிடம் போருக்கு வந்துள்ளனர். நாம் அவர்கட்குத் தக்க பாடம் கற்பித்தல் வேண்டும். தூங்குகின்ற புலியின்மீது விழுந்து அதனை எழுப்பிவிட்ட பித்தன் செயலுக்கும் அவர்கள் செயலுக்கும் வேறுபாடு இல்லை. நான் அவர்களைப் போரில் வெல்லேன் ஆயின்' குடிமக்கள் பழிக்கும் கொடுங்கோல் மன்னன் ஆகக் கடவேன், மாங்குடி மருதனர் போன்ற புலவர் பெருமக்கள் என் நாட்டைப் புகழ்ந்து பாடுதலை விடுவாராக,"

என்று வீராவேசத்தோடு வஞ்சினம் கூறிப் போருக்குப் புறப்பட்டான். நால்வகைப் படைகளும் ஆரவாரித்துச் சென்றன.

9. இருதிறத்தார் படைகளும் பாண்டிய நாட்டு எல்லைப் புறப் பகுதியிற் சந்தித்தன. ஒன்றை ஒன்று எதிர்த்துப் போரிட்டன. கரியொடு கரி தாக்கியது; பரியுடன் பரி தாக்கியது; தேருடன் தேர் முட்டியது. வீரருடன் வீரர் பொருதனர். போர்க்களத்தில் பிணக்குவியல்கள் நிறைந்தன. இரத்த ஆறு பெருக்கெடுத்தது. பாண்டியன் மான வீரன். அவனுடைய படை வீரர் உயிருக்குத் துணிந்து போராடினர்; வலிய பகைவரை வாட்டி வதைத்தனர். பகைவர் படை நிலை கலங்கியது; போர் கடுமையை எய்த எய்தப் பகைவர் படை அளவில் சுருங்கிவந்தது. பகையரசர் தமக்குத் தோல்வியே துணை நிற்கும் என்பதை உணர்ந்து புறங்காட்டலாயினர். ஆயின் வீராவேசம் கொண்ட பாண்டியன் அவர்களை விடவில்லை. அவன் தன் வீரருடன் அவர்களைப் பகைவர் நாட்டிற்குள்

துரத்திச் சென்றான். இறுதியில் தலையாலங்கானம்* என்ற இடத்தில் கொடிய போர் நடைபெற்றது. அப் போரில் பகைவர் முற்றிலும் நூறியடிக்கப்பட்டனர். பாண்டியன் வெற்றிமாலை சூடித் தன் நாட்டுக்குத் திரும்பினான். வெல்லுதற்கு அரிய எழுவரை வென்ற காரணத்தால், 'தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்' என்று குடிமக்கள் அவனைப் பாராட்டி அழைக்கலாயினர். புலவர்கள் அவன் வெற்றியைப் பல பாக்களால் சிறப்பித்தனர்.

### அரும்பொருள்

கோநகரம் - தலைநகரம். போதிய - தேவையான. கொடை-பொருள் கொடுத்தல் (தருமம் செய்தல்). பணர் - பாடுபவர். கூத்தர்-கூத்தாடுவோர். விறலி - ஆடுமகள். வாயிலாக - மூலமாக. உந்தப்பட்ட-முன் தள்ளப்பட்ட. பொருதனர் - போரிட்டனர்.

### பயிற்சி

I. விடை கூறுக:—

1. நெடுஞ்செழியன் நற்பண்புகள் எவை?
2. சேரமானுக்கும் பாண்டியனுக்கும் நடந்த போரின் முடிவு யாது?
3. எழுவர் யவர்? அவர் ஏன் பாண்டியனை எதிர்த்தனர்?
4. பாண்டியனும் பகைவர் எழுவரும் செய்த போரைப் பற்றி யாது அறிவீர்?
5. இறுதியில் பாண்டியன் பெற்ற சிறப்புப் பெயர் யாது?

II. பாண்டியன் நற்பண்புகள்—சேரமான் தோல்வி—எழுவர் படையெடுப்பு—தலையாலங்கானத்துப் போர் என்னும் குறிப்புகளைத் துணையாகக் கொண்டு ஒரு கட்டுரை வரைக.

III. இப்பாடத்தின் ஒவ்வொரு பிரிவுக்கும் ஏற்ற தலைப்புத் தருக

IV. எதிர்ச்சொல் கூறுக:—
கொடுங்கோல், வெல்லேன், இறுதி, வெற்றி.

---

*இவ்வூர் தஞ்சாவூர் ஜில்லாவில் திருவாரூருக்கு வடக்கே எட்டுக் கல் தொலைவில் உள்ளது; இப்பொழுது தலையாலங்காடு எனப்பெயர் பெறும். இப்பெயருடன் கோவன்புத்தூர் ஜில்லாவில் ஓரிடம் உண்டு. அதுவே போர் நடந்த இடம் என்று கூறுவாரும் உளர்.

# 17. மாணவர் குறிக்கோள்

1. மாணவர் இளமைப் பருவத்தினர் ஆவர். இளமைப் பருவமே வாழ்க்கை என்னும் கட்டிடத்தின் அடிப்படை. அடிப்படை வன்மையாக அமைக்கப்படின், அதன் மீது கட்டப்படும் கட்டிடம் வன்மையுடையதாக இருக்கும். அது போல இளமைப் பருவத்தில் மாணவரிடம் அமையும் பண்புகளே பெரும்பாலும் அவர்தம் ஆயுள் அளவும் நிலைத்திருக்கும். இது நோக்கியே 'தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்' என்னும் பழமொழி எழுந்தது.

2. இளமைப் பருவம் உடையவரே நாட்டின் செல்வம்; நாட்டின் உயிர்நாடி; எதிர்கால நாகரிக மக்கள். வருங்காலத்தில் இந் நாட்டின் நன்மைக்கு அல்லது தீமைக்குப் பொறுப்பாளிகள். ஆதலின் இளமைப் பருவமுடைய மாணவர் தம் வாழ்க்கைக்குரிய அடிப்படையை இளமைப் பருவத்திலேயே நல்லதாகவும் வன்மையுடையதாகவும் அமைத்தல் இன்றியமையாதது.

3. மாணவர் அறிவு, ஆற்றல், ஒழுக்கம் என்னும் மூன்றிலும் தம்மை உறுதியுடையவராகச் செய்துகொள்வதே வாழ்க்கைக்கு உரிய நல்ல அடிப்படையாகும். மாணவர் தம் அறிவினை வளர்க்கத் தம் வகுப்புக்குரிய பாட நூல்களை ஐயந்திரிபறக் கற்கவேண்டும். அங்ஙனம் கற்றுக் கொண்டேபோது அறிவினை வளர்த்துக் கொள்ளப் பள்ளிக்கூட நூல் நிலையத்தை நன்கு பயன்படுத்த வேண்டும். பல நாட்டவர் வாழ்க்கை முறைகளை அறிய வேண்டும். பல நாட்டுக் கதைகளையும் அவ் வந் நாட்டுப் பெருமக்கள் வரலாறுகளையும் படித்துணர வேணடும். தாம் படித்தவற்றைப்பற்றி நன்கு சிந்தித்து அவற்றிலிருந்து தமக்குப் பயன் தரத்தக்க செய்திகளைக் குறித்துவைத்தல் நல்லது.

4. இங்ஙனம் வகுப்பில் நடைபெறும் பாடங்களைக் கொண்டும் நூல் நிலையத்தில் உள்ள நூல்களைக் கொண்டும் தம் அறிவினை வளர்த்துவரும் மாணவர், அன்றன்று உலகில் நடைபெறும் செய்திகளையும் அறியக் கடமைப்பட்டவர்

ஆவர். 'நாம் இன்று இவ்வுலகத்தில் வாழ்கின்றோம்; ஆதலால் இன்று இவ்வுலகில் நடைபெறும் செயல்களை அறிவது நமது கடமையாகும்' என்பதை இளைஞர் நன்குணர்தல் தேவையாகும்; உணர்ந்து நாள்தோறும் வெளிவரும்செய்திகளைப் படிக்கவேண்டும்.

5. நமது தமிழ்நாட்டில் நாளும் வெளியாகும் தாள்கள் சிலவாகும்; வாரத்தாள்கள் சில; திங்கள் தாள்கள் சில. இவை நாட்டில் உள்ள பலவகைக் கொள்கையினரால் வெளியிடப்படுபவை. மாணவர் தேனைத்தேடிப் பல வகை மலர்களையும் சோதிக்கும் வண்டுக்கு ஒப்பாவர். ஆதலால் அவர்கள் பல திறப்பட்டவர் வெளியிடும் தாள்களையும் படித்துத் தமக்குத் தேவையான உண்மைகளை மட்டும் எடுத்துக்கொள்ளவேண்டும்.

6. பகுத்தறிவு என்பது மனிதப்பிறப்பின் சிறப்புச் செல்வமாகும். இதனை வளர்த்தல் மாணவர் கடனாகும். எந்தப் பாடத்தையும் இயலும் அளவு தம் அறிவுகொண்டு ஆராய்தல் வேண்டும்; ஐயங்கள் தோன்றின், ஆசிரியரைக் கொண்டு தெளிதல் வேண்டும். இளைஞர் எந்த நூலை எடுத்து வாசிப்பினும், எச்சொற்பொழிவைக் கேட்பினும், கண்கொண்டு எதனைக் காணினும், அவை அனைத்திலும் தம் அறிவினைச் செலுத்தி இயலுமளவு ஆராய்ந்து உண்மை காண முயல வேண்டும்.

7. இங்ஙனம் மாணவர் பல துறைகளிலும் தம் அறிவினை வளர்க்க வேண்டும். அடுத்து வேண்டப்படுவது ஆற்றல் ஆகும். ஆற்றல் என்பதற்கு 'வலிமை' என்பது பொருள். அஃது உடல் வலிமை', மன வலிமை, முதலாகப் பலவகைப்படும். நாடோறும் உடற்பயிற்சி செய்யின் உடல் வலிமை பெறும்; நோய்கள் அணுகா. 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' அன்றோ? அஞ்சாமை, பொறுமை முதலிய நற்குணங்கள் மன வலிமையை வளர்ப்பனவாகும். மன வலிமையுடைய இளைஞன் தன் உள்ளத்திற்கு மாறானவற்றை ஏற்கான்; உள்ளதை உள்ளவாறு உரைப்பான்.

8. நல்லவற்றை நினைத்தல், நல்லவற்றையே பேசுதல், நல்லவற்றையே செய்தல் என்னும் மூன்றும் ஒழுக்கத்திற்கு உரியவை. 'விளையாட்டே வினையாகும்' ஆதலால் விளையாட்டுக்காயினும் பொய் சொல்லல் ஆகாது. நல்லவற்றைச் செய்தலில் விடாமுயற்சி வேண்டும். விடாமுயற்சியே எத்தகைய கடின வேலையையும் எளிதில் வெற்றிபெறச் செய்ய வல்லது. விடாமுயற்சியால் வெற்றி பெற்ற உலகப் பெரியார்களின் உண்மை வரலாறுகளை மாணவர் ஊன்றிப் படித்தல் வேண்டும். ஐம்பது ஆண்டுகளாக விடாமுயற்சியுடன் இந்தியத் தலைவர்கள் அமைதியாகப் போரிட்டதன் பயனாகத்தான் நாம் இன்று விடுதலை பெற்று வாழ்கிறோம். நெப்போலியன், நெல்சன், ஜார்ஜ் வாஷிங்டன். சிவாஜி போன்ற வீரர்களையும், கெமால் பாஷா, ஸ்டாலின் போன்ற அரசியல் தலைவர்களையும், ஜகதீச சந்திர போஸ், சி.வி. இராமன், பி.ச. ராய் போன்ற விஞ்ஞான ஆராய்ச்சி வீரர்களையும் விடாமுயற்சிக்கு உதாரண புருஷர்களாகக் கொண்டு, மாணவர் செயலாற்ற வேண்டும்.

9. அறிவு. ஆற்றல், ஒழுக்கம் என்னும் மூன்றாலும் மனச்சாட்சி வளர்ச்சி அடையும். அம்மனச்சாட்சி, 'இஃது ஒழுங்குடையது. இஃது ஒழுங்கற்றது' என்பதை நமக்கு உணர்த்த வல்லது. உலகப் பெரியார்களாக விளங்கிய புத்தர், ஏசுநாதர், நபிநாயகம், காந்தியடிகள் முதலியோர் தத்தம் மனச் சாட்சியால்தான் உயர்நிலை அடைந்தனர். 'என் மனச்சாட்சி இதனை ஏற்கவில்லை' என்று காந்தியடிகள் பல சந்தர்ப்பங்களில் செய்தித்தாள்களில் வெளியிடவில்லையா? அறிவு அகன்று, ஆற்றல் மிகுந்து, ஒழுக்கம் உயர்ந்து, மனச் சாட்சியின்படி நடப்பவரே உலகப் புகழுக்கு உரியவராவர்; நேர்மை பொருந்திய வாழ்வு வாழத் தகுதியுடையவர் ஆவர். அவ்வாழ்வு வாழத் தம்மைத் தகுதியுடையவராகச் செய்து கொள்ளலே மாணவர் குறிக்கோளாக அமைதல் வேண்டும்.

அரும் பொருள்

குறிக்கோள் - உயர்ந்த இலட்சியம். அடிப்படை - அஸ்திவாரம். வன்மை - பலம். இன்றியமையாதது - தேவையானது. ஐயம்-சந்தே

கம். திரிபு - ஒன்றை மற்றொன்றாகக் கருதி மயங்குதல். திங்கள் - மாதம். பகுத்தறிவு - ஒன்றன் நன்மை தீமைகளை ஆராய்ந்தறிதல். சொற்பொழிவு - பிரசங்கம். நேர்மை - ஒழுங்கு. இயலுமளவு - கூடும் வரை.

### பயிற்சி

1. விடை தருக:—

1. இளமைப் பருவத்திற்கும் வாழ்க்கைக்கும் உள்ள தொடர்பு யாது?

2. மாணவர் தம் வாழ்க்கைக்குரிய அடிப்படையை நல்லதாக அமைக்க வேண்டும்.—ஏன்?

3. மாணவர் எவற்றில் உறுதியுடையவராகத் தம்மைச் செய்து கொள்ள வேண்டும்?

4. அறிவினை எவ்வெத்துறைகள் மூலம் வளர்த்தல் வேண்டும்?

5. மாணவர் ஆற்றல் பெறுதல் எங்ஙனம்?

6. ஒழுக்கத்திற்கு உரியவை எவை?

7. விடா முயற்சியால் வெற்றி பெற்ற பெருமக்கள் சிலர் பெயர்களைக் கூறுக.

8. மனச் சாட்சி என்பது யாது? அஃது எப்படி வளர்ச்சி அடையும்?

9. காந்தியடிகள் குறிப்பிடப்பட்ட சந்தர்ப்பம் யாது?

10 மாணவர் இளமையில் மேற்கொள்ளத் தக்கன யாவை?

II. 1. இளமை...முதுமை - எதிர்ச் சொற்கள். செல்வம், நன்மை அடிப்படை, ஐயம் - இவற்றுக்கு எதிர்ச் சொற்களைக் கூறுக.

2. ஐயந்திரிபற, பயன்படுத்த, பகுத்துணர் அடிப்படையாக, பல திறப்பட்ட, சொற்பொழிவு, இயலுமளவு - இவற்றை வாக்கியங்களில் அமைக்க.

3. இப்பாடத்தில் எடுத்தாளப்பெற்ற பழமொழிகள் எவை? அவற்றைப் போன்ற பழமொழிகள் நான்கு கூறுக.

# 18. அரசு துறந்த இளங்கோ

(நாடகம்)

சேரநாட்டு அரசனுன நெடுஞ்சேரலாதன் அரசவையில் அரியணையில் அமர்ந்திருக்கிருன். அவன் மூத்தமகனுன செங்குட்டுவனும் இளைய மகனுன இளங்கோவும் அரியணைக்கு இருபக்கங்களிலும் உள்ள இருக்கைகளில் அமர்ந்துள்ளனர். அவையில் அமைச்சர்கள், தானைத் தலைவர்கள், தூதுவர்கள், அரசாங்கத்தைச் சேர்ந்த பிற உயர் அலுவலாளர், வணிக மன்னர்கள், அயல்நாட்டு வாணிகப் பிரதிநிதிகள், வஞ்சி நகரப் பெருமக்கள் முதலியோர் கூடியுள்ளனர்.

அரசன் :—பெருமக்களே, நான் உங்கள் அனைவரையும் இங்குக் காணப் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். அமைச்சர் முதலிய அரசாங்க உயர் அலுவலாளரும் அயல்நாட்டு வாணிகப் பிரதிநிதிகளும் நம் நாட்டு வணிக மன்னர்களும் நமது நால்வகைப் படைத் தலைவர்களும் பிறரும் கூடியுள்ள இப்பேரவை பெருஞ் சிறப்புடையது. அறிஞர்களே, சேர, சோழ, பாண்டிய நாடுகளுள் மலைகளும் காடுகளும் மிகுதியாக நிறைந்துள்ள நாடு நம் சேரநாடு என்பதை நீங்கள் அறிவீர்கள். சோழநாடு வயல் வளத்திற் சிறந்தது ; பாண்டிய நாடு கைத்தொழிலிலும் வாணிகத்திலும் சிறந்தது. நமது நாடோ கடல் வாணிகத்தில் உலகப் புகழ்பெற்றது. சோழ, பாண்டிய நாடுகளைவிட நமது நாடு கடல் வாணிகத்தில் மேம்பட்டதாகும்.

ஒரு நாடு சிறப்புறவேண்டுமாயின், அந்நாட்டில் கைத்தொழிலும் வாணிகமும் வளம்பெற்றிருத்தல் வேண்டும். நாம் நம் நாட்டுப் பொருள்களான யானைத் தந்தம், மயில் தோகை, மிளகு, சந்தனமரம், தேக்கமரம் முதலியவற்றைப் பிற நாடுகளுக்கு அனுப்புகின்ருேம்; நமக்குத் தேவையான கண்ணுடிப் பொருள்கள், போர்க் கருவிகளுட் சில முதலியவற்றை அயல்நாடுகளிலிருந்து பெறுகின்ருேம். நம்நாட்டுத் தொண்டி, முசிரி முதலிய துறைமுகங்களில் பிற நாட்டுக்

கப்பல்கள் வருதலும் போதலும் நமது கடல் வாணிகச் சிறப்பினை நன்கு உணர்த்துவனவாகும்.

நமது பயிர்த்தொழிலும் வளர்ச்சி பெற்றுவருகிறது என்பதை அமைச்சர் வாயிலாக அறிந்து மகிழ்கிறேன். நமது மலைநாடு இயற்கை அரண்களை உடையது. ஆயினும் நாம் படைகளை எப்பொழுதும் பெருக்குவதிலேயே கண்ணுங் கருத்துமாக இருத்தல் வேண்டும். நம் வீரர்கள் விற்போரில் இணையற்றவர் என்பது நாடறிந்த செய்தி. கடற் கொள்ளைக்காரரை அடக்கியதிலிருந்து நமது கப்பற் படைத் திறமை நன்கு புலப்படும். நம் குடிமக்கள் பயிர்த் தொழில், கைத்தொழில், வாணிகம் இவற்றில் கருத்துடையவர்கள்; ஆதலால் வறுமையின்றி வாழ்கின்றனர். குடிமக்கள் அமைதியாக வாழ்வாராயின், அரசு நல்லரசாகும். பொறுப்புள்ள அரசன் குடிகளுடைய தேவைகளைக் கவனித்து நன்மை செய்வான். நம் குடிமக்கள் அமைதியாக வாழ்கின்றனர் என்பதன்றோ எனது ஆட்சிக்குச் சிறப்பைத் தருவது? அச்சிறப்பு அமைச்சர் முதலான அரசாங்க அலுவலர் நேர்மையைக் குறிக்கிறது; வாணிகர் முதலிய அனைவரது நல்லொழுக்கத்தையும் உணர்த்துகிறது. ஆட்சிமுறையில் நீங்கள் அனைவரும் செய்துவரும் தொண்டினை நான் மனமாரப் பாராட்டுகிறேன். உங்கட்கு எனது வாழ்த்து உரியதாகுக!

[அரசன் இங்ஙனம் பேசி அமர்ந்த பிறகு, அரண்மனைக் காவலர் புதிய மனிதன் ஒருவனை உள்ளே அரசனைக் காண அனுப்புதல்-புதியவன் அவையை அடைந்து அரசனை வணங்கல்]

அரசன்.—ஐயா, நீர் யார்?

புதியவன்:—சேரர் பெருமானே, யான் சோழ நாட்டுச் சோதிடன்; தங்கள் வீரச் செயல்களையும் கொடைத் திறனையும் கேள்விப்பட்டேன்; தங்களைக் காண விரும்பி இங்கு வந்தேன். தங்களுக்கு இரு புறங்களிலும் அமர்ந்துள்ள இளைஞர் இருவரும் அரச குமாரர் என்று எண்ணுகிறேன்.

அரசன்:—ஆம். (செங்குட்டுவனைச் சுட்டி) இவன் மூத்தவன். இவன் பெயர் செங்குட்டுவன் என்பது. (இளங்கோவினைச்சுட்டி) இவன் இளையவன். இவன் பெயர் இளங்கோ.

சோதிடன்:—(அரச குமாரர் இருவரையும் சிறிது நேரம் உற்றுப் பார்த்தான்; பின்னர் எழுந்து அரசனை நோக்கி,) வானவர் பெரும, என்மீது கோபித்தல் வேண்டா. என் மனத்திற் பட்டதைக் கூறுகின்றேன்; இம்மக்கள் இருவருள் இளையவரே அரச இலக்கணம் அமையப் பெற்றவராகக் காணப்படுகிறார். அவரே தங்களுக்குப் பிறகு சேர மன்னர் ஆவார்; தமிழகம் போற்றச் சிறப்புப் பெறுவார்

[அரசன் திடுக்கிடல்—தன் மக்களை மாறி மாறிப் பார்த்தல்—அவையோர் திடுக்கிட்டு மூவரையும் கவனித்தல்—செங்குட்டுவன் முகம் வாட்டமுறுதல்—இளங்கோ சினம் கொள்ளல்,]



இளங்கோ:—(எழுந்து சோதிடனை நோக்கி) சோதிடரே, என்ன சொன்னீர்? மூத்தவர் இருக்க, இளையவன் பட்டம் அடைதல் முறையா? என் தமையனார் அரசியல் அறிவு நிரம்பப் பெற்றவர்; நாடு முழுவதும் சுற்றிப் பார்த்தவர்; நிரம்பிய போர்ப் பயிற்சி உடையவர். என் உயிருக்கு உயிரானவர். அவரே அரசராதற்கு உரியவர். நான் அவர் அடிக்கீழ் இருந்து ஏவல் கேட்பவன். நீர் கூறியது இப் பிறவியில் நடவாது! நடவாது!

சோதிடன்:—இளவரசரே, என்மீது சீறவேண்டா. தங்கள் உடல் இலக்கணத்தைக் கவனித்த பிறகு நான் அவ்வாறு கூறினேன்.

இளங்கோ:—இலக்கணமா? நான் இப்பொழுதே துறவியாக மாறினல் நீர் கூறிய இலக்கணம் என்ன ஆகும்? இந்த அவையோருக்குமுன் உண்மையாக உரைக்கின்றேன். நான் இன்று முதல் துறவி. இந்த அரசர் பதவி எனக்கு வேண்டா. இஃது உறுதி.

அரசன்:—ஆ! கூடாது! மகனே, என்ன சொன்னய்? நீ துறவியாதல் கூடாது!

இளங்கோ:—எந்தையீர், நான் துறவியாகாவிடில், எதிர் காலத்தில் இயல்பாகவோ — பிறர் தூண்டுதலாலோ, எனக்கு அரசர் பதவிமேல் நாட்டம் உண்டாகலாம் என்னும் ஐயத்திற்கு இடம் ஏற்படலாம். அதற்கு இடந்தரலாகாது. நான் துறவியாகிவிடின் என் மனம் அமைதிபெறும் ஆதலால் துறவு பூண்டேன்; என் தமையனர் பட்டம் பெறுதலைக் கண்குளிரக் காண்பேன்.

[அவையோர், 'ஆ! உத்தமர்! உத்தமர்!' என்று கூறுதல்—அரசனும செங்குட்டுவனும் கண்ணீர் பெருக இளங்கோவைத் தழுவிக் கொள்ளுதல்.]

### அரும்பொருள்

அலுவல் - வேலை, உத்தியோகம். அரண் - பாதுகாப்பு. வானவர் மலைநாட்டினர், சேர நாட்டு மக்கள்.

### பயிற்சி

1. இந்த வரலாற்றை நெடுஞ்சேரலாதன் கூறுவது போல எழுதுக.
2. இதனைச் செங்குட்டுவன் சொல்லுவதுபோலச் சொல்லுக.
3. சேர நாட்டைப்பற்றி நெடுஞ்சேரலாதன் கூறுவன யாவை?
4. அக்கூற்றிலிருந்து நீங்கள் அவனைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

# செய்யுட் பகுதி

## I தோத்திர மாலை

பண்ணின் இசையாகி நின்றாய் போற்றி
பாவிப்பார் பாவம் அறுப்பாய் போற்றி
எண்ணும் எழுத்துஞ்சொல் லானாய் போற்றி
என்சிந்தை நீங்கா இறைவா போற்றி
விண்ணும் நிலனுந்தீ யானாய் போற்றி
மேலவர்க்கு மேலாகி நின்றாய் போற்றி
கண்ணின் மணியாகி நின்றாய் போற்றி.
கயிலை மலையானே போற்றி போற்றி

—திருநாவுக்கரசர் தேவாரம்

'பச்சைமா மலைபோல் மேனி, பவளவாய் கமலச் செங்கண்,
அச்சுதா! அமரர் ஏறே! ஆயர்தம் கொழுந்தே! என்னும்
இச்சுவை தவிர யான்போய் இந்திர லோகம் ஆளும
அச்சுவைபெறினும்வேண்டேன் அரங்கமா நகருளானே.2

—தொண்டரடிப்பொடி யாழ்வார்

ஆதியாய் அனாதி யாகி அருப்பொருள் அனைத்து மாகிச்
சோதியாய் சொரூப ஞானச் சுடரொளித் தீப மாகி
நீதியாய்த் திறமை யாகி நித்தியா னந்த மாகி
மாதிரப் புயமு மான மகம்மதே, வருகு வீரே.

—மஸ்தான் சாகிபு பாடல்

அன்பேநீ ஆதலினால் ஆருயிர்கள் பொருட்டுன்
அழகுடலை வதைக்கவிட்டாய்; அருளுயிரை நீத்தாய் ;
இந்நிலத்தில் அச்செயலை எக்குரவர் ஏற்றார்?
இளங்கன்னி வயிற்றுதித்த இறைமைமணி விளக்கே
அன்பினிலே குறையிருந்தால் அருஞ்செயலை ஆற்றல்
ஆகாதே, ஆகாதே! 'அன்புடைய அறவோர்
என்பும்பிறர்க் குரியர்' என எழுந்தமொழிக் குகந்த
இலக்கியமாய் இலங்கிநிற்கும் ஏசுகுரு நாதா!

—திரு. வி. கலியாண சுந்தரனார்

ஆசிரியர் வரலாறு:

**திருநாவுக்கரசர்** கி. பி. 7-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சைவ சமய ஆசிரியர்; சைவ சமயத்தைப் பரப்பிய பெரியார். தேவாரம் - தேவனுக்குரிய பாமாலை.

**தொண்டரடிப்பொடியாழ்வார்** கி. பி. 8-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த வைணவப் பெரியார். அவர் பாடிய பாக்கள் நாலாயிர திவ்வியப் பிரபந்தம் என்னும் நூலில் உள்ளன.

**மஸ்தான் சாகிபு** என்பவர் முஸ்லிம் மஹான்; சிறந்த பக்திமான் அவர் ஏறக்குறைய 200 ஆண்டுகட்கு முற்பட்டவர்.

**திரு. வி. கலியாண சுந்தரனார்** இப்பொழுது சென்னையில் இருக்கின்ற பெரியார்; பிறப்பிற் சைவராயினும் சமரச சன்மார்க்க நோக்கும் கொண்டவர்; தமிழ் நாட்டு மக்களால் 'தமிழ்ப் பெரியார்' என்று பாராட்டப் பெற்றவர். இவர் இயற்றிய செய்யுள் நூல்களும் உரை நடை நூல்களும் பல.

1. பண் - இராகம். பாவிப்பார் - தொழுவார். இறைவன் - தலைவன்.

2. மேனி - உடல். அமரர் - தேவர். ஏறு - தலைவன். அரங்கம் - திருவரங்கம்.

3. ஆதி - முதல். அனாதி -- ஆதியில்லாதது (கடவுள்). மாதிரம் - மலை.

4. குரவர் -- குரு. கன்னி -- மரியாள். இறைமை -- தலைமை.
'அன்பிலார் எல்லாம் தமக்குரியர்: அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு'—திருக்குறள்.

# II. இயற்கை அழகு

## 1. அந்திப் பொழுது

1. காவென்று கத்திடும் காக்கை—என்றன்
கண்ணுக் கினிய கருநிறக் காக்கை;
மேவிப் பலகிளை மீதில்—இங்கு
விண்ணிடை அந்திப் பொழுதினைக் கண்டே
கூவித் திரியும் சிலவே;—சில
கூட்டங்கள் கூடித் திசைதொறும் போகும்;
தேவி பராசக்தி அன்னை—விண்ணில்
செவ்வொளி காட்டிப் பிறைதலைக் கொண்டாள்.

2. தென்னை மரக்கிளை மீதில்—அங்கோர்
செல்வப் பசுங்கிளி கீச்சிட்டுப் பாயும்
சின்னஞ் சிறிய குருவி—அது
'ஜிவ்'வென்று விண்ணிடை ஊசிவிட் டேகும்
மன்னப் பருந்தோர் இரண்டு—மெல்ல
வட்டமிட் டுப்பின் னெடுந்தொலை போகும்
பின்னர்த் தெருவிலோர் சேவல்—அதன்
பேச்சினி லே'சக்தி வேல்' என்று கூவும்.

—சுப்பிரமணிய பாரதியார்

**சுப்பிரமணிய பாரதியார்** நாடறிந்த தேசபக்தர்: கி. பி. 20-ஆம் நூற்றூண்டினர். அவருடைய பாக்களை அறியாத தமிழர் இல்லை.

1. மேவி-பொருந்தி.
2. மன்ன-அரச நிலையில் உள்ள.

## 2. நிலா

1. முதுமைநிலா அழகுநிலா
முளைத்ததுவிண் மேலே—அது
பழமையிலே புதுநினைவு
பாய்ந்தெழுந்தாற் போலே!
அமுதமுகம் சிரித்ததுபோல்
அல்லிவிரித் தாற்போல்—மேல்
சுழற்றிஎறிந்த வெள்ளித்தட்டுத்
தொத்திக்கிடந் தாற்போல்
(முதுமைநிலா அழகுநிலா)

2. குருட்டுவிழியும் திறந்ததுபோல்
இருட்டில்வான விளக்கு!—நம்
பொருட்டுவந்தது பாடிஆடிப்
பொழுதுபோக்கத் துவக்கு!
மரத்தினடியில் நிலவுவெளிச்சம்
மயிலின்தோகை விழிகள்!—பிற
தெருக்கள்எல்லாம் குளிரும்ஒளியும்
சேர்த்துமெழுகும் வழிகள்!
(முதுமைநிலா அழகுநிலா)

—பாரதிதாசன்

சுப்பிரமணிய பாரதியார் மாணவரே **பாரதிதாசன்** என்பவர்; இப்பொழுது நம்மிடையே இருக்கின்ற கவிஞர்; சீர்திருத்தத் துறையில் பல நூல்களைப் பாடியுள்ளார்.

## 3. ஆறு

1. கல்லும் மலையும் குதித்துவந்தேன்—பெருங்
காடும் செடியும் கடந்துவந்தேன்;
எல்லை விரிந்த சமவெளி—எங்கும்நான்
இறங்கித் தவழ்ந்து தவழ்ந்துவந்தேன்.

2. கட்டும் அணையேறிச் சாடிவந்தேன்—அதன்
கண்ணறை தோறும் நுழைந்துவந்தேன்;
திட்டுத் திடர்களும் சுற்றிவந்தேன்—மடைச்
சிப்புகள் மோதித் திறந்துவந்தேன்.

3. காயும் நிலத்தழல் ஆற்றிவந்தேன்—அதில்
கண்குளி ரப்பயிர் கண்டுவந்தேன்;
ஆயும் மலர்ப்பொழில் செய்துவந்தேன்—அங்கென்
ஆசைதீ ரவிளை யாடிவந்தேன்.

4. ஏருத மேடுகள் ஏறிவந்தேன்—பல
ஏரி குளங்கள் நிரப்பிவந்தேன்;
ஊருத ஊற்றிலும் உட்புகுந்தேன்—மணல்
ஓடைகள் பொங்கிட ஓடிவந்தேன்.

5. ஆயிரம் காலால் நடந்துவந்தேன்—நன்செய்
அத்தனையும்சுற்றிப் பார்த்துவந்தேன்;
நேயமு றப்புன்செய்க் காட்டிலும் அங்கங்கு
நீரை இறைத்து நெடுகவந்தேன்.

6. அல்லும் பகலும் அலைந்துவந்தேன்—எங்கள்
ஆழி இறைவனைக் காணவந்தேன்;
நில்லும் எனக்கினி நேரமில்லை—இன்னும்
நீண்ட வழிபோக வேண்டுமம்மா!

—திரு. தேசிகவிநாயகம் பிள்ளை

**தேசிக விநாயகம் பிள்ளை** என்பவர் இப்பொழுது நம்மிடையே இருப்பவர்; பெரும் புலவர்; ஆராய்ச்சி அறிஞர்; நாகர்கோவிலைச் சேர்ந்தவர். இவர் பாடல்கள் அருமையும் எளிமையும் பொருந்தியவை.

2. சாடி-மோதி. கண்ணறை-மதகுவழி. பொழில் - சோலை. நன்செய்-நல்ல வயல், நெல் விளையும் வயல். நன்செய் × புன் செய். ஆழி-கடல்.

# III. நீதிப் பகுதி

## 1. சதகத் திரட்டு

1. சங்கையறப் படித்தாலும் கேட்டாலும் பிறர்க்குறுதி
தனைச்சொன் னாலும்
அங்கண்உல கிற்சிறியோர் தாமடங்கி நடந்துகதி
அடைய மாட்டார்;
திங்கள் அணி சடையாரே! தண்டலையாரே! சொன்னேன்
சிறிது காலம்
கங்கையிலே படர்ந்தாலும் பேய்ச்சுரைக்காய் நல்ல சுரைக்
காயா காதே.

—தண்டலையார் சதகம்

கடலுலகில் உற்றபொரு ளுக்குளே நன்மைதரு
கல்விநிலை பெற்றபொருளாம்;
கனலினால் உருகாது; புனலினாற் கரையாது;
கள்வரால் திருடொணாது;
திடமான ராசாதி ராசரா லும்அதைத்
தீண்டிச் சிதைக்கொணாது;
செயல்மிக்க மாதரால் சேதமா காதொருவர்
செலவிடிற் குறைவுறா தங்(கு);
அடமிகு சகோதரர்க் கிடமது கொடாததனை
அளவிடவும் முடியாதுகாண்;
அப்பொரு ளினைப்பெறா திப்புவியில் அலைகின்ற
அற்பர்உறு பயனென்கொலோ!
கடகயம் உரித்துடலி னிற்றரித் திடுதேவ!
கற்பக இராசமேவும்
கங்கைபுனை ஈசனே! மங்கைமகிழ் நேசனே!
கயிலையங் கிரிவாசனே!

— கயிலாசநாதர் சதகம்

3. மெய்யான புத்திபல சொல்லினும் தன்புத்தி
மேலாகினோன் மூர்க்கனும்;
மிக்கபெரி யோர்களைத் தாழ்வுசெய் தற்பர்தமை
மேன்மைசெய் வோன்மூடனும்;

செய்யாத காரியம தெனினும் பிடித்தபிடி
செய்யுமவனே துஷ்டனும்;
திரளான நன்றிபல செய்யினும் செய்தவர்க்(கு)
இடர்செய்ப வன்பாதகன்;
ஐயாவெ னப்பணிந் தாலுமே கோபம(து)
அடங்காத வன்குரூரன்;
அனுதினம் தீமைபுரி வோனெந்த நாளிலும்
அடங்காத சண்டாளனும்
மையார் தடஞ்சோலை திகழ்கின்ற களமூரின்
மணவாள நாராயணன்
மனதிலுறை அலர்மேலு மங்கைமண வாளனே!
வரதவேங் கடராயனே !

—திருவேங்கட சதகம்.

4. வாலிபந் தனில்வித்தை கற்கவேண் டும்கற்ற
வழியிலே நிற்கவேண்டும்;
வளைகடல் திருந்துபொன் தேடவேண் டும்தேடி
வளர்அறம் செய்யவேண்டும்;
சீலமுடை யோர்களைச் சேரவேண் டும்; பிரிதல்
செய்யா திருக்கவேண்டும்;
செந்தமிழ்ப் பாடல்பல கொள்ளவேண்டும்; கொண்டு
தியாகம் கொடுக்கவேண்டும்;
ஞாலமிசை பலதருமம் நாட்டவேண் டும்; நாட்டின்
நன்ருய் நடத்தவேண்டும்;
நம்பன் இணை அடிபூசை பண்ணவேண் டும்; பண்ணி
ளுலுமிகு பக்திவேண்டும்;
ஆலமமர் கண்டனே ! பூதியணி முண்டனே !
அழகன்எம தருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுரதேவனே !

=அறப்பளீசுர சதகம்

இச் சதக நூல்கள் ஏறக்குறைய 200 ஆண்டுகட்கு முன் இயற்றப் பெற்றவை என்னலாம்.

**சதகம்** - நூறு செய்யுட்களைக் கொண்ட நீதி நூல்.

1. சங்கை - சந்தேகம். அற - நீங்க. உறுதி - நல்லவை. **கதி— நன்னிலை.** தண்டலை - ஓர் ஊர். திங்கள் - சந்திரன்.

2. அடம் - துஷ்டத்தனம். உறு - அடையும். கடம் - மதம். கரி-யானை. மங்கை - உமையம்மை.

2. மையார் - இருள் அடர்ந்த. தடம் - அகன்ற. அலர்மேல் மங்கை - தாமரை மலரில் உள்ள இலக்குமி. வரத - அருள் செய்யும். ராயன் - தலைவன்.

4. வளை - நிலத்தைச் சுற்றி வளைந்துள்ள. சீலம் - ஒழுக்கம். ஞாலம் - உலகம். நம்பன்—நமது நம்பிக்கைக்குரிய கடவுள். ஆலம்-விஷம். பூதி - திரு நீறு. தரு - மரம்.

## 2. நீதி வெண்பா

1. மென்மதுர வாக்கால் விரும்பும் சகம்; கடின
வன்மொழியி னாலிகழும் மண்ணுலகம்-நன்மொழியை
ஓதுகுயி லேதங் குதவியது? கர்த்தபந்தான்
ஏதபரா தஞ்செய்த தின்று?

2. ஈக்கு விடந்தலையி லெய்தும்இருந் தேளுக்கு
வாய்த்த விடங்கொடுக்கில் வாழுமே;—நோக்கரிய
பைங்கணர வுக்குவிடம் பல்லளவே; துர்ச்சனருக்(கு)
அங்கமுழு தும்விடமே யாம்.

3. சிற்றுணர்வோர் என்றும் சிலுசிலுப்பர்;ஆன் றமைந்த
முற்றுணர்வோர் ஒன்றும் மொழியாரே;-வெற்றிபெறும்
வெண்கலத்தி னோசை மிகுமே; விரிபசும்பொன்
ஒண்கலத்தி லுண்டோ ஒலி ?

4. மந்திரமும் தேவும் மருந்தும் குருவருளும்
தந்திரமும் ஞானந் தருமறையும்—யந்திரமும்
மெய்யென்னில் மெய்யாய் விளங்குமே; மேதினியில்
பொய்யென்னில் பொய்யாகிப் போம்.

5. பொறற்பறிவில் லாதபல புத்திரப்பே றெய்தலினோர்
நற்புதல்வ னைப்பெறுதல் நன்றாமே-பொற்கொடியே!
பன்றிபல குட்டி பயந்ததனா லேதுபயன் ?
ஒன்றமையா தோகரிக்கிங் கோது.

6. கொம்புளதற் கைந்து குதிரைக்குப் பத்துமுழம்
வெம்புகரிக் காயிரந்தான் வேண்டுமே—வம்புசெறி
தீங்கினர்தங் கண்ணில் தெரியாத தூரத்து
நீங்குவதே நல்ல நெறி.

7. நிந்தையிலாத் தூயவரும் நிந்தையரைச் சேரிலவர்
நிந்தையது தம்மிடத்தே நிற்குமே ;—நிந்தைமிகு
தாலநிழற் கீழிருந்தான் தன்பால் அருந்திடினும்
பாலதெனச் சொல்லுவரோ ? பார்.

8. வாக்குநயத் தாலன்றிக் கற்றவரை மற்றவரை
ஆக்கைநயத் தாலறிய லாகாதே :—காக்கையொடு
நீலச் சிறுகுயிலை நீடிசையா லன்றியே
கோலத் தறிவருமோ? கூறு.

9. கல்லார் பலர்கூடிக் காதலித்து வாழினும்நூல்
வல்லான் ஒருவனையே மானுவரோ ?—அல்லாரும்
எண்ணிலா வான்மீன் இலகிடினும் வானகத்தோர்
வெண்ணிலா ஆமோ ? விளம்பு.

10. பொன்னும் கரும்பும் புகழ்பாலும் சந்தனமும்
சின்னம் படவருத்தஞ் செய்தாலும் —முன்னிருந்த
நற்குணமே தோன்றும்; நலிந்தாலும் உத்தமர்பால்
நற்குணமே தோன்றும் நயந்து.

—ஔவையார்

இந்த ஔவையார் சங்க கால ஔவையாரின் வேறானவர்; ஏறக்குறைய 200 ஆண்டுகட்கு முற்பட்டவர். இவர் பாக்கள் எளியவை; நீதிகளைக் கொண்டவை.

1. சகம்-உலகம், உலகத்தார். கர்த்தபம்-கழுதை.

2. பைங்கண்-பசுமை+கண். துர்ச்சனர்-கெட்டவர்.

3. சிற்றுணர்வோர் - அற்பபுத்தி உள்ளவர். சிலுசிலுப்பர்-படபடத்துப் பேசுவர். ஆன்று-விசாலமாகி. அமைந்த-பொருந்திய. முற்றுணர்வோர்-பேரறிவு படைத்தவர். விரி-ஒளி விரிகின்ற. ஒண்கலம்-ஒளி பொருந்திய பாத்திரம்.

4. மேதினி-உலகம்.

5. பொற்கொடியே-அழகிய கொடி போன்றவளே. பயந்தது - பெற்றது. கரி-யானை. அமையாதோ ? - போதாதோ? ஓது - சொல்லுவாய்.

6. முழம்-முழ அளவு. வெம்பு-கோபமுள்ள. வம்புசெறி - வீண் செயல்கள் மிக்க. நெறி-முறை.

7. நிந்தை-பழிப்பு. ஆன்-பசு. தம் இடம்-நிந்தை இல்லாதவரிடம். தாலம் - பனைமரம்.

8. ஆக்கை-உடல். இசை-குரல். கோலம்-உருவம்.

9. காதலித்து-விரும்பி. மானுவரோ-ஒப்பாவரோ. அல் ஆரும்-இரவில் பொருந்திய. இலகிடினும்-விளங்கினாலும். விளம்பு - சொல்.

10. சின்னம்பட-உருவம் அழிய. நலிந்தாலும்-வருந்தினாலும்.

## 3. நன்னெறி

1. நீக்கம் அறுமிருவர் நீங்கிப் புணர்ந்தாலும்
நோக்கின் அவர்பெருமை நொய்தாகும்—பூக்குழலாய்
நெல்லின் உமிசிறிது நீங்கிப் பழமைபோல்
புல்லினும் திண்மைநிலை போம்.

2. உள்ளம் கவர்ந்தெழுந் தோங்கு சினம்காத்துக்
கொள்ளும் குணமே குணமென்க ;—வெள்ளம்
தடுத்தல் அரிதோ ? தடங்கரைதான் பேர்த்து
விடுத்தல் அரிதோ ? விளம்பு.

3. தங்குறைதீர் வுள்ளார் தளர்ந்து பிறர்க்குறூஉம்
வெங்குறைதீர்க் கிற்பார் விழுமியோர் :—திங்கள்
கறையிருளை நீக்கக் கருதா துலகின்
நிறையிருளை நீக்குமேல் நின்று.

4. இல்லானுக் கன்பிங் கிடம்பொருள் ஏவல்மற்
றெல்லாம் இருந்துமவற் கென்செய்யும் ?—நல்லாய் !
மொழியிலார்க் கேது முதுநூல் தெரியும் ?
விழியிலார்க் கேது விளக்கு ?

5. தம்மையும் தங்கள் தலைமையையும் பார்த்துயர்ந்தோர்
தம்மை மதியார் தமையடைந்தோர்—தம்மின்
இழியினும் செல்வர் இடர்தீர்ப்பர் ; அல்கு
கழியினும்செல் லாதோ கடல் ?

6. எந்தைநல் கூர்ந்தான் இரப்பார்க்கீந் தென்றவன்
மைந்தர்தம் ஈகை மறுப்பரோ ?—பைந்தொடீஇ !
நின்று பயனுதவி நில்லா அரம்பையின்கீழ்க்
கன்றும் உதவும் கனி.

7. இன்சொலால் அன்றி இருநீர் வியனுலகம்
வன்சொலால் என்றும் மகிழாதே :—பொன்செய்
அதிர்வளையாய் ! பொங்கா தழற்கதிரால், தண்ணென்
கதிர்வரவால் பொங்கும் கடல்.

8. பெரியவர்தம் நோய்போல் பிறர்நோய்கண் டுள்ளம்
எரியின் இழுதாவர் என்க;—தெரியிழாய்!
மண்டு பிணியால் வருந்து பிறவுறுப்பைக்
கண்டு கலுழுமே கண்.

9. ஆக்கும் அறிவால் அலது பிறப்பினல்
மீக்கொள் உயர்விழிவு வேண்டற்க;—நீக்கு
பவரார் அரவின் பருமணிகண் டென்றும்
கவரார் கடலின் கடு.

10. உண்டு குணமிங் கொருவர்க் கெனினும்கீழ்க்
கொண்டு புகல்வதவர் குற்றமே;—வண்டுமலர்ச்
சேக்கை விரும்பும் செழும்பொழில்வாய் வேம்பன்றே
காக்கை விரும்பும் கனி.

—சிவப்பிரகாச சுவாமிகள்

**சிவப்பிரகாச சுவாமிகள்** வீர சைவர்; ஏறத்தாழ 150 ஆண்டுகட்கு முற்பட்டவர்; சொல்லழகும் பொருட் சிறப்பும் பெற்ற கணக்கற்ற பாடல்கள் பாடிய பெரியவர்.

1. நீக்கம்-விலகுதல். நொய்து-அற்பம். குழல்—கூந்தல். பூக்குழலாய்-மகடூஉ முன்னிலை(பெண்ணை முன்னிலைப்படுத்திக் கூறுதல்). திண்மை நிலை-உறுதிநிலை.

2. கவர்ந்து-வசப்படுத்தி. தடம் - பெரிய.

3, தீர்வு-நீங்குதல். தளர்ந்து - இரக்கப்பட்டு. வெம்குறை-கொடிய குறைகளை.

4. மொழியிலார்-ஊமைகள். முதுநூல்-பழைய நூல்கள்.

5. இழியினும் - தாழ்ந்தவராய் இருப்பினும். இடர் - துன்பம் அல்கு-குறுகிய. கழி-உப்பங்கழி.

6, எந்தை-என் அப்பன். நல் கூர்ந்தான்.வறுமை அடைந்தான் இரப்பார்க்கு - வறியவர்க்கு. பைந்தொடீஇ - (பசுமை+தொடீஇ) பசுமையான வளையலை அணிந்தவளே, மகடூஉ முன்னிலை. அரம்பை - வாழை.

7. இருநீர்-பெரிய கடல். வியன் - பரந்த. அதிர் - ஒலிக்கின்ற. அழல்-சூடுள்ள. கதிர்-கிரணங்களையுடைய சூரியன்.

8. எரியின் இழுது-நெருப்பிற்பட்ட நெய். தெரியிழாய் - ஆராய்ந்தெடுத்த நகைகளை அணிந்தவளே. மண்டு - நெருங்கிய. பிணி - நோய். கலுழும்-அழும்.

9. மீக்கொள் - மேலாகக் கொள்ளும். கடு - விஷம். கவரார் - அபகரிக்கமாட்டார். பரு-பெரிய.

10. புகல்வது - சொல்வது. சேக்கை - படுக்கை. பொழில்-சோலை. வாய்-இடம்.

## 4. திருக்குறள்

1. அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை.
2. ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம்; பொறுத்தார்க்குப்
பொன்றும் துணையும் புகழ்.
3. நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்; தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும்.
4. இனிய வுளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.
5. தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்தெரி வார்.
6. நன்றி மறப்பது நன்றன்று; நன்றல்ல(து)
அன்றே மறப்பது நன்று.
7. எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்; உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு.
8. யாகாவா ராயினும் நாகாக்க; காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.
9. தீயினாற் சுட்டபுண் உள்ளாறும்; ஆறாதே
நாவினாற் சுட்ட வடு.
10. கற்க கசடறக் கற்பவை; கற்றபின்
நிற்க அதற்குத் தக.
11. கண்ணுடையர் என்பவர் கற்றோர்; முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்.
12. தொட்டனைத் தூறு மணற்கேணி; மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு.
13. எண்ணென்ப ஏனை எழுத்தென்ப; இவ்விரண்டும்
கண்ணென்ப வாழு முயிர்க்கு.
14. முயற்சி திருவினை யாக்கும்; முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்.
15. ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை; இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி.
16. தந்தை மகற்காற்று நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல்.

17. மகன்றந்தைக் காற்றும் உதவி இவன்தந்தை
என்னோற்றான் கொல்எனும் சொல்.

18. அன்பிலா ரெல்லாந் தமக்குரிய ரன்புடையார்
என்பு முரியர் பிறர்க்கு.

19. சொல்லுக சொல்லில் பயனுடைய ; சொல்லற்க
சொல்லில் பயனிலாச் சொல்.

20 ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்.

—திருவள்ளுவர்

**திருவள்ளுவர்** சிறந்த தமிழ்ப் புலவர். அவர் காலம் கி. பி. 2-ஆம் நூற்றாண்டு என்றும் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டு என்றும் இக்கால ஆராச்சியாளர் கூறுவர். இந்நூல் எல்லோருக்கும் நியாயமானவற்றைக் கூறுவதால் பல நாட்டு மொழிகளிலும் பெயர்க்கப்பட்டுப் பாராட்டப் படுகிறது.

1. அகழ்வார்-தோண்டுபவர். நிலம்-பூமி. இகழ்வார்-இகழ்ந்து பேசுவார். தலை-சிறந்தது.

2. ஒறுத்தார்-தீமை செய்தவர்களைத் தண்டித்தவர்கள். பொறுத்தார்-தீமை செய்தவர்களை மன்னித்தவர்கள். பொன்றுந் துணையும்-(உலகம்) அழியும் வரையில்.

3. வித்து-விதை. இடும்பை-துன்பம்.

4. இனிய-இன்சொற்கள். இன்னாத-கடுஞ்சொற்கள். காய் கவர்ந்தற்று-காயை உண்பது போலாகும்.

5. துணை-அளவு. பயன்தெரிவார்—உதவியின் பயனை அறிந்தவர்கள்.

6. நன்றல்லது-தீமையை. அன்றே-செய்த அப்பொழுதே.

7. எந்நன்றி-எந்த நன்றி (அதாவது, பெரிய அறம்.) கொன்றார்-அழித்தவர்கள். உயர்வு—அந்தக் குற்றத்திலின்று நீங்கும் வழி-மகன் + கு = மகற்கு—மனிதனுக்கு.

8. யா-எவைகளையும். காக்கவேண்டியவை மூன்று. மனம், மொழி, மெய். இம்மூன்றனுள் நாவடக்கமே சிறந்தது. சொல்லிழுக்கு-சொல்லால் வரும் குற்றம். சோகாப்பர்-துன்பமடைவார்கள்.

12. கேணி-கிணறு.

13. கண்என்ப-கண் என்று சொல்லுவார்கள்.

14. திருவினை-செல்வத்தை. இன்மை-வறுமை. முயற்றின்மை-சோம்பல்.

15. பழி-பாவம்.

16. ஆற்றும்-செய்யும், அவையத்து—சபையிடத்து.

18. என்பு-(பொருளாலன்றி) உடம்பினாலும்.

20. விழுப்பம்-சிறப்பு.

# IV. தொடர்நிலைச் செய்யுள்

(கதைப் பகுதி)

## 1. தேசிங்கும் குதிரையும்

குதிரையின் அருகே வந்துநின்றான்
குழந்தை தேசிங்கு;
கொல்லும் வேங்கை போலநின்றது
குதிரையும் அப்போது.
பார்த்தான் மன்னன் லகானைக்கையால்
பாங்குடனே பற்றிப்
பாய்ந்தே ஏறி முதுகில்அமர்ந்தான்
பாலன் தேசிங்கு.
கலகல வென்றே சிரித்துப் பிடித்தான்
கையில் சாட்டையினை;
கனைத்த பரியைக் கழுத்தில் தட்டினான்
கண்மணி தேசிங்கு;
தட்டின தட்டில் குதிரை கிளம்பித்
தரையில் நில்லாமல்
தாவியே வானில் சென்று பாய்ந்தது
தங்கமேனிக் குதிரை.
மலையும் குன்றும் உடைந்து சிதறி
மண்ணில் விழுவதைப்பார்!
குன்று மலைகளைத் தாண்டிக் குதிரைக்
குதித்துப் பாயுதுபார்!
அசுவம் போகும் வேகத் தாலே
அலையுது மேகமெலாம்!
மேகம் இடித்து மின்னல் கக்கி
மழையைப் பொழியுதுபார்!
புரவி போகும் வேகம் அறிந்தான்
புலிக்குட்டி தேசிங்கு;
பொல்லாக் குதிரை தன்னைக் கொல்லப்
போகுதென் றறிந்தான்.
லகானை இழுத்துக் கொடுத்தான் சிமிட்டா
ராஜா தேசிங்கு;
சிமிட்டா கொடுத்த வேகத்தி னாலே
திகைத்து நின்றதுபார்!

நின்ற குதிரையை டில்லிக்குத் திருப்பி
நேரே ஓட்டிவந்தான் ;
நிமிஷந் தன்னில் கீழே குதித்து
நின்றான் தேசிங்கு.

—தேசிங்கு ராஜன் கதை

இஃது ஏறத்தாழ இரு நூறுண்டுகட்கு முற்பட்ட நூலாகக் கருத இடமுண்டு. இதன் ஆசிரியர் யாவர் என்பது தெரியவில்லை. இது தமிழ் நாடு முழுதும் பாடப்படும் கதை நூல் ஆகும்.

டெல்ஹிப் பேரரசரது குதிரையை இளைஞனை தேஜ்சிங்கு (தேசிங்கு) அடக்கி ஓட்டி வெற்றி பெற்றான்; பேரரசரிடம் பரிசு பெற்று மீண்டான்.

## 2. அல்லி ராணி வேட்டையாடச் செல்லுதல்

### (1) குடிகள் முறையீடு

மதுரைக் குடிமக்கள் மற்றுமுள்ளோர் எல்லோரும்
மாதரசியைப் பணிந்து மனங்கலங்கிப் பேசலுற்றார் :
"காட்டானை சிங்கங்களும் கரடிபுலி யாளிகளும்
காட்டிற்கு வெளிநின்று கலக்கம் விளைத்தலைப்பார் ;
யாதுசெய்வ தென்றே எமக்குப் புரியவில்லை"
என்றே அழுதார்கள். ஏந்திழையாள் அது கேட்டு,
"வேட்டைக்கு நான்போவேன் ; வெய்ய விலங்குகளை
அரைநாழிக் குள்ளே அதம்பண்ணி மீண்டிடுவேன் ;
அஞ்சாது நீங்கள் அகமகிழச் செல்லுங்கள்"
என்றே உரைத்தாள். எல்லோரும் அகன்றார்கள்,

### அல்லி ராணி வேட்டைக்குச் செல்லல்

அல்லிராணி,
" ஆரடி தோழிகளே ! அலங்காரச் செங்கமலம் !
வேட்டைக்கு நாம் போவோம், விரைந்தோடி வாரும்
என்றாள்.
அப்போது செங்கமலம் அவசரமாய்ச் சென்றிட்டாள்;
குதிரையை அலங்கரித்துக் கொண்டுவந்து முன்புவிட்டாள்.
அல்லிப் பெருமாளும் அகமகிழ்ச்சி யோடெழுந்து
அம்புவில்லும் கைப்பிடித்தாள்; அம்பருத் தூணிகொண்டாள்.
ஆனை குதிரைகளும் அணிவகுத்து நின்றனவே ;
வெள்ளித் தமுக்கடித்தார்: வெண்கலக்கொம் பூதினர்; [லாம்;
பொன் தமுக்குத் தாமடித்தார்; புறப்பட்டார் பெண்களெல்
வில்லேந்தித் தோழிமார் விசையாய் நடக்கலுற்றார்;

ஆனைப் படைசூழ அல்லிராணி புறப்பட்டாள்;
குதிரைப் படைசூழக் குலமகளும் புறப்பட்டாள்;
பாண்டியன் திருமகள் பரிமீது சென்றனளே.

*அல்லி அரசி மாலை*

இதுவும் தேசிங்கு ராஜன் கதை நூல் போன்ற பாடல் நூல். இது செய்யப்பட்ட காலம் தெரியவில்லை. ஆசிரியர் புகழேந்திப் புலவர் என்று அச்சிடப்பட்டுள்ளது. நளவெண்பாப் பாடிய புகழேந்திப் புலவர் இவர் அல்லர் என்பது மட்டும் உண்மை. இந்நூல் பொது மக்களால் படிக்கப் பட்டு வருவதாகும்.

## 8. காகம் நாகத்தைக் கொல்வித்தது

(பஞ்ச தந்திரம்)

1. கோடுறு சினையிற் காகம்
கூடுவைத் தனேக காலம்
பேடொடு கூடி வாழும்
பெருமரப் பொந்தில் வந்தே
ஆடிய கரும்பாம் பொன்றங்
கதுபெறும் முட்டை யெல்லாம்
நாடியே ஒடித்துப் போட
நலிந்துளம் மெலிந்து வாடி,

2. தன்னுயிர்ப் பாங்க னான
சம்புகன் அருகு போய் "இங்
கென்னசெய் குவன்நான்? என்ன,
"இதைக்கொலல் அரிதோ! நீ போய்
மன்னவன் தேவி யாடும்
மஞ்சனச் சாலை புக்குப்
பொன்அணி கொண்டு வந்து
போடுக பொந்தில்" என்ன,

3. காகம்அப் படியே செய்யக்
காவலன் ஏவ லாளர்
ஏகிமா மரத்தின் போந்தை
ஈர்ந்தனர்; ஈரும் பொதில்
நாகம்அங் கிருந்து சீற
நறுக்கினர் இருதுண் டாக
ஆகையால் உபாயத் தாகா
திலையென அறையும் பின்னும்.

பஞ்சதந்திரக் கதைகளைத் தமிழில் பாடிய வீரமார்த்தாண்ட தேவர் காலம் உறுதியாகக் கூறக்கூடவில்லை. செய்யுட்கள் எளிய தமிழில் உள்ளன.

1. கோடு-கிளை, உறு-பொருந்திய. சினை-கிளை. பேடு-பெட்டை. நலிந்து-வருந்தி.

2. சம்புகன்-நரியின் பெயர்.

3. ஈர்ந்தனர்-பிளந்தனர். அறையும்-சொல்லும். பின்னும்-மேலும்.

## 4. பேராசை பெரு நஷ்டம்

(பஞ்ச தந்திரம்)

1. மூப்புடைப் புலிதான் ஒன்று
மூழ்கிளர் ஏரி யின்கீழ்
காப்புடன் தருப்பை தன்னைக்
கையில்வைத் திருக்கும் போது
நாப்புடை மறைவ லாளன்
நண்ணிஅவ் வழியிற் செல்லக்
கூப்பிடல் செய்தன் னோனைக்
குறித்தந்தப் புலிதான் கூறும்.

2. "அந்தணா, இந்தக் காப்பை
அளிப்பன்நீ வா" வென் றேதச்
சிந்தையில் வேட்கை கூர்ந்து
செப்புவான்: "புலியா ரே! நீர்
வெந்துயர்க் கொலைமாந் தற்கு
விளைப்பது விட்டுத் தானம்
எந்தநல் வழியிற் செய்வீர் ?
எனக்கதைக் கூறும்" என்றான்.

3. புலியது கேட்டு, "நானே,
பூசுரா! நகமும் பல்லும்
இலன்; கிழ மானேன்; பாவம்
இழைப்பது விடுத்து நாளும்
பொலிதரு தானம் செய்கை
பொருள்எனக் கொண்டேன்; அஞ்சேல்;
சலமதில் மூழ்கி வந்து
தரும்இதைக் கொடுபோ" என்ன,

4. நன்றென மறையோன் மூழ்க
நண்ணினன்; ஏரி நீரில்
அன்றவன் கால்கள் சேற்றில்
அழுந்திடத் திகைத்து நின்றான்;
சென்றது புலி; "நான் உன்னைச்
சேற்றினின் றெடுப்பேன்" என்னக்
கொன்றது; குருதி தன்னைக்
குடித்தது; வியப்பீ தன்றே.

—வீர மார்த்தாண்ட தேவர்

1. மூப்பு-கிழத்தனம். நாப்புடை-நாவில். மறைவேதம். மறைவலாளன்-வேதங்களில் வல்ல பிராமணன். நண்ணி-நெருங்கி.

2. அந்தணன்-பிராமணன். கூர்ந்து-மிகுந்து.

3. பூசுரா-பிராமணனே. பூ-பூமியில் உள்ள. சுரன்-தேவன், சுரன் × அசுரன். பொலிதரு-விளங்குகின்ற.

4. குருதி-ரத்தம்.

## 5. குரங்கும் குருவியும்

(பஞ்ச தந்திரம்.]

1. பாடுறு மூட னுக்குப் பற்பல போதித் தாலும்
வீடுடை யவனை வீட்டை இழந்திடச் செய்வான் என்று
நேடுறு சன்மன் சொல்வான்நெடியதோர் பழுமரத்தில்
கூடுகொண் டனஇ ரண்டு தூக்கணாங் குருவி தாமே.

2. குளிரினால் நடுங்கி வானக் கொடுமழை யால்நனைந்து
நளிர்சுரத் தோடு தேகம் நடுங்கியே பற்கள் கிட்டி
வளமறு குரங்கொன் றங்கு வந்தது குருவி பார்த்தே,
இலகிய மனத்தி னாலே இன்சொலால் ஒன்று சொல்லும்

3. "கைகள்கால் இருந்தும் இந்தக் கன்மத்தை அனுப விக்கும்
செய்தினன்?' என்ன, "ஊசி மூஞ்சிகொள் சிறிய மூடா
வைதுநீ புத்தி சொல்ல வல்லையோ!" எனக்கோ பித்து
நெய்திடும் அதன்தன் கூட்டை நெடுங்கையால்பிய்த்த தன்றே

—வீர மார்த்தாண்ட தேவர்.

1. பாடுறு-பாடு+உறு-துன்பப்படும். நேடுறு-(நல்) எண்ணம் பொருந்திய. சன்மன்-பிராமணன். பழுமரம்-ஆலமரம்.

2. நளிர்-நடுக்கும்படியான. இலகிய-அன்புள்ள, இரக்கமுள்ள

3. கன்மம்-துன்பம்.

# V. பலசுவைப் பாடல்கள்

## 1. பனைமரம்.

(கைத்தொழில் பாட்டு.)

பனைமரமே !
ஏன் வளர்ந்தாய் ?
நான் வளர்ந்த
நாட்டாரே !
படுக்க நல்ல
வசிக்க நல்ல
வெட்ட நல்ல
வீடுகட்ட
கட்ட நல்ல
கன்றுகட்டத்
மட்டமுள்ள
மாடுகட்டத்
பலத்தசுமை
புரிமணையும்
எழுதுகின்ற
எழுத்தாணிக்
ஓதுகின்ற
ஓலைத்தடுக்கும்
நனைந்துவரும்
நல்லகுடை
பசித்துவரும்
பனம்பழமும்
சித்திரக்
சிறந்தநல்ல
இராமாயணம்
பாரதமும்
வர்த்தகரும்

பனைமரமே !
பனைமரமே !
காரியத்தை
சொல்லுகின்றேன் ;
பாய்ஆவேன் ;
வீடாவேன் ;
விறகாவேன் ;
மரமாவேன் ;
கயிறாவேன் ;
தும்பாவேன் ;
உறியாவேன் ;
தும்பாவேன் ;
சால்களுக்குப்
நானாவேன் ;
பிள்ளைகட்கே
கூடாவேன் ;
பிள்ளைகட்கே
நானாவேன் ;
பேர்களுக்கு
நானாவேன் ;
பேர்களுக்குப்
நானாவேன் ;
கோடையிலே
தங்காவேன் ;
என்னாலே ;
என்னாலே ;
செட்டிகளும்

வழியறிவ தென்னூலே ;
பலசரக்கு மண்டியிலே
பத்திரமாய் நானிருப்பேன்
ஏரிக்கரை மீதினிலே
எந்நாளும் வீற்றிருப்பேன்.

—பழைய பாடல்

## 2. தனிப் பாடல்கள்

### தேங்காய்க்கும் நாய்க்கும் சிலேடை

1. ஓடும் இருக்கும் அதன் உள்வாய் வெளுத்திருக்கும்
நாடும் குலைதனக்கு நாணாது :—சேடியே
தீங்காய தில்லாத் திருமலைரா யன்வரையில்
தேங்காயும் நாயும் இணை செப்பு.

### அத்தை மகள் கறி சமைத்த அழகு

2. கரிக்காய் பொரித்தாள் ; கன்னிக்கா யைத்தீத்தாள்;
பரிக்காயைப் பச்சடியாய்ப் பண்ணினாள்—உருக்கமுள்ள
அப்பைக்காய்நெய்துவட்டல் ஆக்கினாள் அத்தைமகள்;
உப்புக்காண் சீ!சீ! உமி.

### துன்பத்தின் மேல் துன்பம்

3. குரங்கனலில் வீழ்ந்து வெறிகொண்டு தேள்கொட்ட,
கரஞ்செறியப் பாம்பலவன் கவ்வ,—விரைந்துபேய்
பற்றவே கள்ளுண்டு பச்சைமிள கைக்கடித்தால்
எத்தனைபார் சேட்டைக் கிடம்.

### மோர்க்காரியின் மோசம்

4. காரென்று பேர்படைத்தாய் ககனத் துறும்போது ;
நீரென்று பேர்படைத்தாய் நெடுந்தரையில் வந்ததற்பின் ;
பாரொன்று மென்கூந்தல் பாலிடைச்சி கைப்பட்டு
மோரென்று பேர்படைத்தாய் ; முப்பேரும் பெற்றாயே

—காளமேகப் புலவர்

### சென்னைக்கு வந்து சிவமானேன்

5. சென்னபுரி வந்து சிவனுயி னேன்நல்ல
அன்னமது காணு தவனுகி:—மன்னுசிரங்
கைக்கொண் டரைச்சோமன் கட்டிச் சடைமுறுக்கி
மெய்கண்ட நீறணிந்து மே.

—இராம கவி

### கம்பரது சீற்றம்

6. மன்னவனும் நீயோ? மண்ணுலகும் இவ்வளவோ?
உன்னையோ யான்புகழ்ந்திங் கோதுவதும்? —என்னை
விரைந்தேற்றுக் கொள்ளாதவேந்துண்டோ உண்டோ
குரங்கேற்றுக் கொள்ளாத கொம்பு?

—கம்பர்

**காளமேகப் புலவர்** சிறந்த கவிஞர்; ஏறக்குறைய 400 ஆண்டுகட்கு முற்பட்டவர்; வேடிக்கைப் பாடல்கள் பாடுவதில் சமர்த்தர்.

**இராமகவி** என்பவர் ஏறத்தாழச் சென்ற நூற்ருண்டுப் புலவராகலாம்.

**கம்பர்** கி. பி. 12-ஆம் நூற்ருண்டினர்; இராமாயணம் பாடிய பெரும் புலவர்; கவிச்சக்கரவர்த்தி என்ற பட்டம் பெற்றவர்.

1. சிலேடை - இருபொருள்படச் சொற்களைச் செய்யுட்களில் தொடுப்பது. ஓடு-(தேங்காய்) ஓடு' ஓடுதல். குலை-வாழைக்குலை, நாய் குரைத்தல். நாணுது-வளையாது, தளராது. வரை-மலை. மூன்றும் அடி மன்னன் சிறப்பைக் குறிப்பது. சேடி-தோழி.

2. கரி-யானை (அத்தி); கரிக்காய்-அத்திக்காய். கன்னி-பெண், அரம்பை; அரம்பை-தெய்வலோகப் பெண்; வாழை. கன்னிக்காய்-வாழைக்காய்; தீத்தாள்-வறுத்தாள். பரி-குதிரை (மா); பரிக்காய்-மாங்காய். பை-படம் (பாம்பு); கத்திரி என்பது ஒருவகைப் பாம்பு. அப்பைக்காய்-அந்தக் கத்திரிக்காய்.

3. கரம் செறிய - கையில் சுற்றிக்கொள்ள. அலவன் - நண்டு. சேட்டை-குறும்பு.

4. ககனம்-வான் (ஆகாயம்). பார் ஒன்று-தரையைத் தொடும்.

5. அன்னமது காணுதவனுகி (1) உணவைக் காணப்பெருதவனுகி, (2) அன்ன உருவத்தினனை பிரமனல் காணப்பெருமல் இருந்து.

மன்னு சிரங்கைக்கொண்டு - (1) பொருந்திய சிரங்குகளைக் கொண்டு, (2) பிரமனது தலையோட்டைக் கைக்கொண்டு.

அரைச்சோமன் கட்டி — (1) இடை ஆடையுடன் (மேலாடை இன்றி), (2) பிறைச் சந்திரனைத் தலையிலே முடித்துக்கொண்டு.

## 3. தமிழ் நாடு

1. வயல்வளத்தில் மிகச்சிறந்தே வளம்பெறுநன் னாடு
வள்ளல்களும் புலவர்களும் வாழ்ந்திருந்த நாடு
கயல்வாளை மீனினங்கள் களிப்பொடுவாழ் நாடு
கண்மணியிற் சிறந்ததமிழ் கவினுறுநன் னாடு
வயலுழவும் கைத்தொழிலும் வளர்ந்துயரும் நாடு
வண்மையுடை மூவேந்தர் வாழ்ந்திருந்த நாடு
மயிலிறகும் மிளகும்பெருங் கடல்கடந்த நாடு
மணமிகுந்த சந்தனமும் மகிழ்ந்தளித்த நாடே.

2. பறவைகளும் தமிழ்மொழியிற் பாட்டிசைக்கும் நாடு
பல்புலவர் இருந்துசங்கப் பாஇசைத்த நாடு
குறத்தியரும் தமிழ்மொழியிற் குரவையாடு நாடு
குயில்குரலார் கிளிமொழியார் கொஞ்சுதமிழ் நாடு
அறஞ்செறிந்த தமிழரசர் ஆண்டிருந்த நாடு
அடிகள்பலர் அருள்உரைகள் அளித்ததிரு நாடு
மறம்போற்றி வாள்வீரர் மகிழ்ந்துறைந்த நாடு
மாண்புறுநம் தெய்வத்தமிழ் மணங்கமழ்நன் னாடே.

—புலவர் மா. இராசமாணிக்கம்

1. கவின் - அழகு, உறு - பொருந்து, வண்மை - ஈகை, அளித்த - கொடுத்த.

2. சங்கப்பா-சங்கப் பாக்கள்; அவற்றைக்கொண்ட புறநானூறு முதலிய சங்க நூல்கள். குரவை-பெண்கள் கைகோத்து ஆடும் கூத்து. செறிந்த - நெருங்கிய (மிகுந்த). அடிகள் - துறவிகள் (இளங்கோ அடிகள், அறவண அடிகள், கவுந்தியடிகள் முதலியோர்). மறம்-வீரம். மாண்பு-பெருமை.

TB 031(9) N49
87022

RMRL
1135

## தாமரை வாசகம்

ஆசிரியர் :

புலவர் மா. இராசமாணிக்கனார்

| | | | |
|---|---|---|---|
| முதல் புத்தகம் | .... | .... | அணா 14 |
| இரண்டாம் புத்தகம் | .... | .... | அணா 15 |
| மூன்றாம் புத்தகம் | .... | .... | ரூ. 1/- |